


மக்கள் தலைவர்


# சௌ. தொண்டமான்

## சாகித்திய விழா சிறப்பு மலர் 2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடும்முக மொன்றே

ஈசனுட ஞானமொழி பேசுமுகம் ஒன்றே

கூறுமடியார்கள் வினை தீர்த்த முகமொன்றே

குன்றுருவ வேல்லாங்கிநின்ற முகமொன்றே

மாறுபடுசூரனை வதைத்த முகம் மொன்றே

ஆறுமுகமான பொருள் நீயருள வேண்டும்

ஆதியருணாசலம் அமர்ந்த பெருமானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் தலைவர்

அமரர் சௌ. தொண்டமான் அவர்களின்

# தமிழ் சாகித்திய விழா சிறப்பு நினைவு மலர் - 2000


வெளியீடு:-

மாண்புமிகு அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன்

*மத்திய மாகாண கல்வி (தமிழ்), இந்து கலாசார, கைத்தொழில், கால்நடை அபிவிருத்தி, வர்த்தகம், வாணிப, சுற்றுலாத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு, சமூக சேவைகள் அமைச்சு கெட்டம்பே - பேராதனை.*

பதிப்பாசிரியர்:-

கே. வி. இராமசாமி ஜே. பி.

*அகிலம் பதிப்பகம்*

*308, திருகோணமலை வீதி, கண்டி.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

தமிழகத்தில் பிறந்து ஏழாம் வயதில் இந்திய வழி மரபு இலங்கைத் தமிழராகி இலங்கை வாழ் அடித்தள அனைத்துத் தமிழர்களுக்காகவும், இலங்கைத் திருநாடும், மக்களும் சீரும் சிறப்பும் பெற்று வாழ்வதற்கு அயராது தனது உடலையும், உணர்வையும் நற்சிந்தனையுடனும் தன்னம்பிக்கையுடனும் நின்று செயற்பட்டு நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு முதுகெலும்பாக நின்று உழைக்கும் இலட்சக்கணக்கான எமது மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நல்வாழ்விற்கு வழிகாட்டியாகவும் அனைத்து மக்களுக்கும் உறுதுணையாகவும் நின்று செயற்பட்ட தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களுக்கு இம்மலர் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"தரணிபோற்றும் தனிப்பெருந்தலைவர்
''மலையகம்'' தலையெடுக்க உதித்துவந்த
செங்கதிரோன் தலைவர் தொண்டமான்''
(80வது பிறந்த தினம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொண்டமான் அவர்களின் அன்புத் தந்தையார்
குமாரவேல் என்ற கருப்பையாபிள்ளை



தொண்டமான் அவர்களின் அன்புத் தாயார்
சித்தம்மையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொண்டமான் தம்பதிகள்
சௌ. தொண்டமான் - கோதை தொண்டமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகன் இராமநாதன், பேத்தி அனுராதா, பேரன் மனைவி இராஜலட்சுமி, மற்றும் கொள்ளுப் பேரக் குழந்தைகளோடு குதூகலம் அடையும் தொண்டமான்.



மகன் இராமநாதன் தொண்டமான், சௌ. தொண்டமான், பேரன் ஆறுமுகன் தொண்டமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# *Message from the President of Sri Lanka*

I am very much pleased to send this message to the souvenir published to commorate the services of late Hon. S. Thondaman.

I have associated the late Minister, Hon. S. Thondaman for nearly a decade. He strode the Sri Lankan political arena like a giant, serving his people in the plantation sector. His struggle for the liberation of the plantation community has borne results. The Plantation schools and dispensaries were taken over by the government and a well planned housing schemes are being set up. There is a visible improvement in literacy rates, and a decline in infant mortality and maternal mortality rates.

Besides he played an active role in achieving a negotiated settlement to the ethnic problem of Sri Lanka.

Late Mr. Thondaman's death is undoubtedly an irreparable loss at this juncture. But he will be remembered as a unique leader and an able politician.

I wish to see his followers following in his footsteps to realize the cherished dream of creating a united Sri Lanka.

Chandrika Bandaranaike Kumaratunga
PRESIDENT.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தீர்வு காண்பதில் வல்லவர் தொண்டமான்

**- முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா -**

*(ஏப்ரல், 1990 ஹட்டன் நகரில், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பொன்விழாவில் இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா அவர்கள் பேசியது)*

**உ**ங்கள் தலைவர் திரு. தொண்டமான் இன, மத, மொழி பேதமற்றவர். அதனால் அவர் இந்த நாட்டில் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் மதிக்கப்படுகிறார். மரியாதையைப் பெற்றுக் கொள்கிறார். வெளிநாடுகளுக்குச் சென்றாலும் அப்படியே "இதற்குமேல் உயர்ந்த கௌரவம் எதுவும் இல்லை".

திரு. தொண்டமான் பொதுத் தொண்டில் ஈடுபட்டிருந்த தொடக்க நாட்களில் நான் ஒரு சிறுவன், பள்ளி மாணவன். அப்போதெல்லாம் அவர் ஆற்றிய பணிகளை நான் செய்தித் தாள்களில் படித்து வியந்திருக்கிறேன். அவர் பாராளுமன்றத்தில் ஒரு பிரதிநிதியாக அமர்ந்து பேசிய அரசியல் பேச்சுக்களை நான் பொதுமக்கள் கலரியில் அமர்ந்திருந்து கேட்டிருக்கிறேன். அன்றிலிருந்தே அவருடைய நிதானமான போக்கினையும், நெறி தவறாத அரசியல் வாழ்க்கையையும் அவதானித்து வந்திருக்கிறேன்.

திரு. தொண்டமான் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசமாட்டார். நல்லவர் போல் நடித்துக் கொண்டு சதி செய்யவும் மாட்டார். எதையும் நேருக்கு நேர் பேசும் துணிவு கொண்டவர் அவர். எந்தப் பிரச்சினையையும் நேர்மையாகவும் ஆழமாகவும் அணுகித் தீர்வு காண்பதில் வல்லவர் அவர். எல்லாவற்றிற்கும் மேலாக, பொதுமக்கள் தொண்டில் நாட்டம் கொண்டவர் அவர். இந்த மூன்று குணாதிசயங்களே அவருடைய வெற்றியின் இரகசியங்களாகும்.

திரு. தொண்டமான் பண வலிமையாலும் ஆயுத பலத்தாலும் தன் வெற்றிகளை ஈட்டவில்லை. அகிம்சை, தியாகம், உண்மை, நேர்மை ஆகிய நாற்படைகளைக் கொண்டே அவர் எல்லாப் போராட்டங்களையும் நடத்தி வெற்றிகளைக் குவித்துள்ளார். அவருக்குத் தமிழ் மக்கள் மட்டுமன்றி சிங்கள மக்களும் மரியாதை செலுத்துவது வியப்பானதல்ல. எதிர்காலத்திலும் அவர் மிகமிக உயர்வாகவே மதிக்கப்படப் போகிறார்.

*நன்றி : முத்துவிழா மலர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## *Message from the Leader of the Opposition Hon. Ranil Wickramasinghe*

On the occasion of the celebrations of the Malayaga Tamil Sahithya Vizha, it is with pleasure I recall the services rendered by the late Leader of the Malayaga Tamil People Mr. S. Thondaman.

It is Mr. S. Thondaman's vision which was instrumental in creating the Trade Union Movement which won in overwhelming measure the rights of the Estate Workers.

The Ceylon Workers Congress is testimony to this fact.

I wish your Vizha all success.

With kind regards,

***Hon. Ranil Wickramasinghe***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொழும்பு இராமகிருஷ்ண மிஷன்
# சுவாமி ஆத்மகனாநந்தா அவர்களின்
# வாழ்த்துச்செய்தி



மத்திய மாகாணத்தில் வாழும் மலையகத் தமிழ் மக்களின் தமிழ் சாகித்திய விழாவொன்று அட்டன் நகரில் மத்திய மாகாண இந்து கலாசார கல்வி அமைச்சர் கௌரவ வி. இராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற உள்ளதாக அறிகிறோம்.

இவ்விழாவின் மூலம் தமிழ் பாரம்பரியத்தின் மேன்மையையும், வாழ்க்கைக்கு வளம் சேர்க்கும் அதன் ஆழமான கருத்துக்களையும், அப்பாரம்பரியத்தின் நறுமலர்களாக விளங்கிய தமிழ் பெரியார்களின் அரும்பணிகளையும் கேட்டு பயன்பெற மலையக மக்களுக்கு ஓர் நல்வாய்ப்பு கிடைத்திருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு, இவ்விழாவை ஏற்பாடு செய்த கௌரவ அமைச்சர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த பாராட்டுக்களையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்விழாவின் போது மலையக மக்களது கல்வி, கலாசார, பொருளாதார முன்னேற்றத்திற்காகப் பலவகைகளிலும் அரும்பணியாற்றிய அமரர் கௌரவ சௌ. தொண்டமான் அவர்களது நினைவு மலர் ஒன்றும் வெளியிடப்பட உள்ளதாக அறிந்து அம்மலருக்கு இந்த வாழ்த்துச் செய்தியை அளிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

'மக்கட்தொண்டே மகேசன் தொண்டு' என்பது இந்து சமயத்தின் உயர்ந்த சமயக் கோட்பாடு ஆகும். இறைவழிபாடு மக்கள் தொண்டில் நிறைவு பெற வேண்டும் என்பதை நமது சமய நூல்கள் வெகுவாக எடுத்துக் கூறுகின்றன. அந்த நிறை நிலையை அடைந்த பெரியோர்கள் பலர் மனிதகுலத்திற்கு ஆற்றிய தொண்டுகளைக் குறித்து சரித்திரத்தின் வாயிலாக அறியலாம். மக்கட்தொண்டின் இன்றைய அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் வெகுவாக எடுத்தியம்பிய சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தியடிகள் போன்றோர் அதற்காகவே தங்கள் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்தவர்கள். "பிறருக்காக வாழ்பவனே வாழத் தகுதியுடையவன். மற்றவர் அனைவரும் இருந்தும் இறந்தவரே" என்று கூறி மக்கள் தொண்டின் சிறப்பை வலியுறுத்துகிறார் சுவாமி விவேகானந்தர். "தனக்காக என்று மட்டும் வாழ்பவர்கள் பாவத்தைதான் உண்கிறார்கள்" என்று சுயநலவாதிகளைக் கண்டிக்கிறது ஸ்ரீமத் பகவத் கீதை.

தனது வாழ்நாள் முழுவதையும் மலையக மக்களின் சேவைக்காக அர்ப்பணித்து, இன்று அவர்களது நினைவில் மிக உயர்ந்து நிற்கிறார் அமரர் தொண்டமான் அவர்கள். எத்தனையோ எதிர்ப்புகள், இடையூறுகளையும் பொருட்படுத்தாது கடைசி மூச்சுவரை தனது மக்கட்பணியை முன்னெடுத்துச் சென்ற அவரது துணிவு, உழைப்பு, ஆர்வம் உண்மையில் பாராட்டத்தக்கவையே.

தமிழ் சாகித்திய விழாவின் போது வெளியிடப்படும் சிறப்புமலர், அமரர் கௌரவ தொண்டமான் அவர்களது பணியின் சிறப்பை எடுத்தியம்பும் கட்டுரைகள் பலவற்றை உள்ளடக்கியதாக இருக்கும் என நம்புகிறோம்.

அமரர் கௌரவ தொண்டமான் அவர்கள் வெளிப்படுத்திய மனத்துணிவும், செயலூக்கமும் இன்றைய இளைய தலைமுறையினர்க்கு சிறந்த தாக்கத்தை அளித்து அவர்களது வாழ்க்கையை வழிநடத்தும் என்று எதிர்பார்க்கலாம்.

விழா மலருக்கு எனது நல்வாழ்த்துக்கள்!

தமிழ் சாகித்திய விழாவை ஏற்பாடு செய்த அனைத்து தமிழ் உள்ளங்களையும் வாழ்த்துகிறோம்.

- சுவாமி ஆத்மகனாநந்தா

இராமகிருஷ்ண மிஷன்
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் அவர்களின் வாழ்த்துரை



காலஞ்சென்ற திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் அபூர்வமான அதியுயர் தலைமைப் பண்புகள் நிறைந்த உயர் தலைவராவார். இந்நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னரேயே பல தசாப்தங்களாக இங்கு வாழ்ந்திருந்தும் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலிருந்த ஒடுக்கப்பட்ட மக்களின் தன்னிகரற்ற தலைவனாகத் திகழ்ந்தார். இந்நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப இவர்கள் அயராது உழைத்தனர். ஆயினும் பொருளாதார, சமூக ரீதியில் மிகப் பின்தங்கிய மக்களாகவே இவர்கள் இருந்தனர். அத்தகைய மக்களுக்கு உறுதியான மதியூகமிக்க ஒரு தலைவன் தேவை. அம்முக்கிய தேவையைக் காலஞ்சென்ற திரு. தொண்டமான் சிறப்பாக நிறைவு செய்தார். சிறப்பாகத் தனது கடமையை அவர் ஆற்றியதைப் போன்று ஒருவேளை வேறொருவராலுமே நிறைவேற்றியிருக்க முடியாது போயிருக்கலாம்.

தனது மக்களின் அவல நிலையைப் போக்கி இந்நாட்டில் அவர்களுக்கும் சம அந்தஸ்தைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய பெரும் துணிவுமிக்க, அர்ப்பணிப்பும் தூரநோக்கும் உடைய தனது கருமமே கண்ணாகக் கொண்ட ஒருவராகத் திகழ்ந்தார். இம்முயற்சிப் பாதையில் பல இடையூறுகளுக்கும் ஆரம்பத்தில் முகங்கொடுத்தார். ஒரு பலவீனமான தலைவர் மங்கி மறைந்தே போயிருப்பார். ஆனால் திரு. தொண்டமான் தனது வெற்றியை அடையும் வரை சலிப்புறாது பாடுபட்டார். காலஞ்சென்ற திரு. தொண்டமான் அவர்களின் மதிநுட்பம், திறமை காரணமாகவே பெருந்தோட்டத் தமிழர்களால் தமது உரிமையைப் பெற முடிந்தது. அவர் இட்டுச் சென்ற அத்திவாரத்தின் மீது ஏனையவற்றையெல்லாம் கட்டியெழுப்ப முடியும். இவர்களது வரலாற்றில் மதிப்பிடற்கரிய அழிக்கமுடியாத இடத்தை அவர் பெற்றுவிட்டார்.

பூர்வீகக் குடிகளான தமிழ் மக்களின் அவலநிலை பற்றியும் திரு. தொண்டமான் கவலை கொண்டிருந்தார். அவர் தமிழ்த் தலைவர்களுடன் இணைந்து ஒத்துழைத்தார். காலஞ்சென்ற திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், காலஞ்சென்ற திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஆகியோருடன் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆரம்பித்து தாபித்த தலைவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார்.

இலங்கையைத் தமது தாயகமாகக் கொண்ட சகல மக்களும் சுதந்திரமான ஒற்றுமைப்பட்ட நாட்டில் சம அந்தஸ்துடையவர்களாக வாழவேண்டுமென்று எண்ணினார்.

காலஞ்சென்ற திரு. தொண்டமான் பூரண ஆயுளுடையவராக முதிர்ந்த வயதுவரை வாழ்ந்திருந்தும் அவரது இறப்பு ஏற்படுத்திய இடைவெளியை நிரப்புவது மிகக்கடினம்.

இரா. சம்பந்தன்,
*பாராளுமன்ற உறுப்பினர்*
*திருகோணமலை மாவட்டம்*
*செயலாளர் நாயகம் -*
*தமிழர் விடுதலைக் கூட்டணி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from the Secretary General
## Hon. R. Sampanthan, M.P.

The late Mr. S. Thondaman was a great leader with rare leadership qualities. He was the undisputed leader of an underprivileged people who had been denied basic fundamental rights in a Country in which they were domiciled for several decades before the Country attained independence. They had toiled to build the Country's economy, but they were economically and socially the most underprivileged people in the Country. Such a people needed a strong and wise leader and the late Mr. S. Thondaman very ably filled that demand. Perhaps no one else could have assumed that role as ably as he did.

He was a courageous and dedicated visionary with a single mindedness of purpose; which was to alleviate the plight of his people and give them an equal status in the country. In his endeavors to do so, he initially faced the severest of odds. A weaker leader would have wilted. But Mr. Thondaman relentlessly strode on until he achieved success. The rights achieved by the Plantation Tamils are attributable to the sagacity and skills of the late Mr. S. Thondaman. He has laid the foundation on which everything else could be built. He has earned for himself a treasured and indelible place in their History.

The late Mr. Thondaman was also concerned about the plight of the indigenous Tamil population. He worked in co-operation with Tamil leaders. He was one of the founder Presidents of the Tamil United Liberation Front along with the late Mr. S. J. V. Chelvanayagam Q. C. and the late Mr. G. G. Ponnambalam Q. C.

He wanted all the people to whom Sri Lanka was their home to be equal citizens, in a free and united country.

Though the late Mr. Thondaman lived up to a ripe old age, the void created by his demise would by very difficult to fill.

**R. Sampanthan**

*Member of Parliament*
*Trincomalee District*
*Secretary General*
*Tamil United Liberation Front*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# துணிவு, ஆளுமை, தலைமைத்துவம் நிறைந்த மக்கள் தலைவர் சௌ. தொண்டமான்



இருபதாம் நூற்றாண்டின் மலையக மண்ணில் ஒரு மா மனிதன் மாண்புமிகு தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள், துணிவு, ஆளுமை, தலைமைத்துவம் என்பதற்கு இலக்கணமாக விளங்கியவர். தலைவர் தொண்டமான் அவர்கள் நம் வாழ்நாளில் தொழிற்சங்க மற்றும் அரசியல் தலைவராக மட்டும் மலையக தமிழ் மக்கள் மத்தியில் திகழவில்லை. அவர் ஓர் அரசியல் மற்றும் தொழிற்சங்க ஆசிரியராகவும், வழிகாட்டியாகவும் இருந்தார். அவரின் வழிகாட்டலின் பின்னரே மலையகத்தில் பல பேர் அரசியல் உரிமைகளைப் பற்றி சிந்திக்கவும், செயற்படவும் துணிந்தார்கள். இன்று அரசியல் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள அனேகர் தலைவர் தொண்டமானின் அரசியல் பள்ளியில் பாடம் கற்றவர்களே ! இதை எவரும் மறுக்க முடியாது.

அரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் எம் மக்களின் நிலை என்னவாக இருந்திருக்கும் என்பதை நான் கூறி விளக்கத் தேவையில்லை. அந்நிலையிலும் எம் மக்களை ஒன்றுபடுத்தி தலைமை தாங்கி வழிநடத்த முன் வந்தமை ஒரு மனிதனின் அபாரத் துணிவும் அர்ப்பணச் சிந்தையுமே என்பதில் எவரும் ஐயம் கொள்ளத் தேவையில்லை.

இலங்கையில் தமிழ் மக்கள் மத்தியில் பல தமிழ்த் தலைவர்கள் வாழ்ந்தார்கள். பலரோடு ஒருவராக தலைவர் தொண்டமான் இருக்கவில்லை. அந்தப் பலரில் ஒருவராக அடையாளம் காணப்பட்டார். தனித்துவம் என்பதற்கு அர்த்தம் புகட்டியவர்.

தலைவர் தொண்டமான் மறைவு மலையக மக்களுக்கு ஏற்பட்ட சாதாரண மறைவு எனக் கருத முடியாது. மலையக மக்களுக்கு இத்தனை ஆண்டுகள் நிழல் தந்த ஒரு பெரிய குடையை இயற்கை சரித்து விட்டது. இருந்த போதும் அன்று தந்த நிழல் என்றும் மக்களுக்கு ஆறுதலாக இருக்கும்.

*தலைவர் தொண்டமானின் வழிகாட்டலில்*

முத்து சிவலிங்கம்

*பாராளுமன்ற உறுப்பினர்*

*நுவரெலியா மாவட்டம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சரித்திரம் மறக்காத சாதனைகள்....

சட்டத்துறையில் தமது காலத்தைக் கழித்திருக்கவேண்டிய ஒருவர் தென்னாபிரிக்க இந்தியர்களின் அவலத்தைக் கண்ணுற்றதால் ஓர் உபகண்டத்தின் விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமைதாங்கி, மகாத்மாவாக விஸ்வரூபமெடுத்து வெற்றிவாகை சூடியதை அனைவரும் அறிவோம்.

இலங்கைப் பெருந்தோட்டங்கள் பலவற்றுக்கு உல்லாசமான உரிமையாளராக இருந்திருக்கவேண்டிய அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களும், மத்திய மலை நாட்டில் இந்திய தொழிலாளர்களின் அடிமைத் தளையைத் தகர்த்து அவர்களின் உரிமையைப் பெற்றுத் தருவதற்காக தம் வாழ்வினை அர்ப்பணித்து - அஹிம்சை வழியை ஆயுதமாக்கி தளபதியானார்.

20ஆம் நூற்றாண்டின் மாமனிதர்களில் ஒருவராகவும் இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்களின் அரசியல் தந்தையாகவும் சரித்திரத்தில் அவர் பெயர் பதியப்பட்டிருக்கிறது. வெள்ளைக்கார துரைத்தனத்தை எதிர்த்து தொழிலாளர் போராட்டங்களை முன்னெடுத்த கால கட்டங்களில், அவரும் பல தோட்டங்களின் உரிமையாளராகவே இருந்தார். தம்முடைய தனிப்பட்ட கௌரவமும், செல்வாக்கும் தாம் மேற்கொண்ட போராட்டங்களை மழுங்கடிக்க ஒருபோதும் அவர் இடங்கொடுக்கவில்லை. அவருடைய இறுதிக் காலத்தில், தோட்ட முகாமைத்துவ கம்பனிகளோடும் அரசோடும் போராடவேண்டிய நிலை ஏற்பட்டபோது கூட, தாம் வகித்த அமைச்சர் பதவியை, அப்போராட்டங்களுக்கு வலுசேர்க்கும் ஓர் ஆயுதமாகவே பயன்படுத்தினார்.

மறைந்த அமரர் தொண்டமான் அவர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்வும் இந்திய வம்சாவளி மக்களின் தொழில், கல்வி, கலாசார மேம்பாட்டுக்கான அவருடைய பகீரதப் பிரயத்தனங்களுக்குக் கட்டியம் கூறுவனவாகவே இருக்கின்றன.

அவருடைய இமாலய சாதனைகள் தமிழர் நெஞ்சங்களில் என்றும் நிலைத்திருக்கும். காலத்தால் அழியாத அந்த நினைவுகளுக்கு இம் மலர் சான்றாகத் துலங்கும். வாழ்த்துக்கள்.

இரா. யோகராஜன்
*பாராளுமன்ற உறுப்பினர்.*
*கொழும்பு மாவட்டம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய மாகாண முதலமைச்சர்
# மாண்புமிகு நந்திமித்ர ஏக்கநாயக்க அவர்களின் ஆசிச்செய்தி

தோட்டத் தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய தலைவரும், சிரேஷ்ட அரசியல்வாதியுமாகிய மறைந்த அமைச்சர் எஸ். தொண்டமான் அவர்கள் என்னுடன் மிகவும் அன்புடனும், நெருக்கமாகவும் பணியாற்றிய ஒரு தலைவராக அறிமுகப்படுத்த விரும்புகின்றேன்.

அவரின் வாழ்நாளில் கூடிய நேரத்தை அல்லலுறும் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிப்புச் செய்தார். தோட்டத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவராக இருந்து இனப்பிரச்சினையைத் தீர்த்து சமாதானத்தை உருவாக்குவதற்கு அர்பணிப்புடன் சேவை செய்த, மக்கள் நாயகனாக இவரை இனங்காட்டவும் முடியும்.

தோட்டத் தொழிலாளர்களுக்குப் பிரஜா உரிமையைப் பெற்றுக் கொடுத்தல், தோட்டப் பாடசாலைகளைத் தரமுயர்த்துதல், தொழிலாளர்களின் வேதன உயர்வைப் பெறுவதற்கும் ஆவன செய்தல், தோட்ட வீடமைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் போன்ற மக்கள் சேவைகளைச் செய்த அவரின் மறைவு எமது நாட்டுக்கு ஈடுகொடுக்க முடியாத இழப்பாகும். அவர் உயிருடன் இருந்த காலத்தில் மேற்கொண்ட மேற் கூறிய சேவைகளை நடைமுறைப்படுத்தி நலம் பெறுவதே நாம் அவருக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும். ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்கள் உட்பட்ட பொது சன ஐக்கிய முன்னணி அரசாங்கமும் மத்திய மாகாண சபையும், இந்நாட்டுக்குப் பணத்தை ஈட்டிக்கொடுக்கும் அந்த தோட்டத் தொழிலாளர்களுக்காக எப்போதும் சேவை செய்ய உடன் பட்டிருக்கின்றோம். என்றும், தோட்டத் தொழிலாளர்களின் அபிவிருத்திக்காக ஆவன செய்வோம் என்றும் இங்கு குறிப்பிடுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

மலையகத் தலைநகர் கண்டி மாநகரிலே இயங்கிய "செய்தி" அச்சகத்தின் நிர்வாகியாக நான் செயற்பட்டபோது பெற்றுக் கொண்ட அனுபவங்கள் கற்றுக் கொண்ட பாடங்கள்! ஆம்! அவையே எனது வாழ்க்கையின் ஆதாரத்துணையாக அமைந்துவிட்டது.

அச்சக உரிமையாளராகி, "அகிலம்" கலை, இலக்கிய அறிவியல் சஞ்சிகையின் வெளியீட்டாளராகவும், ஆசிரியராகவும் நாடறிய என்னை நடைபோட வைத்ததே இந்தப் பதிப்பிக்கும் தொழில்தான்!

எழுத்துக்களை அச்சுவாகனமேற்றிப் பார்ப்பதோ எல்லையில்லாத மகிழ்ச்சியை ஏற்படுத்தும் செயலாகும். இன்றைய நவீன கால கணனிமய வேகம் பதிப்பிக்கும் பணிகளிலும் நிறைய பரவியுள்ளது. கண்ணைப் பறிக்கும்படியும், காண்போரை மயக்கும்படியும் பதிப்பிக்கும் தொழிலில் கணனியின் ஆட்சி சிறப்பாகவும், வேகமாகவும் நிலை கொண்டுள்ளது.

இந்த துரித வேகத்திற்கிடையிலே தான், மத்திய மாகாணக் கல்வி (தமிழ்) இந்து கலாசார அலுவல்கள், தோட்ட உட்கட்டமைப்பு, கால்நடை அபிவிருத்தி அமைச்சர், மாண்புமிகு வே. இராதகிருஷ்ணன் அவர்கள் மலையகத்தின் மாபெரும் தலைவர் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களின் நினைவு மலர் வெளியிடும் பணியை என்னிடம் கையளித்தார். அமைச்சரதும் அமைச்சிலுள்ள பிரத்தியேகச் செயலாளர் திரு. விஜயநாதன் கலாசார அலுவலர் திரு. வி. சாந்தகுமார், இணைப்பாளர்கள், ஏனைய பொறுப்பாளர்களதும் வேண்டுகோட்படி "தலைவர் அமரர் தொண்டமானது நினைவு மலர்" வெளியிடும் பதிப்பாசிரியர் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டேன்.

இம்மலரில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள், கவிதைகள், பிற நிகழ்வுத் தோரணங்கள் முதலியவற்றை மலையகத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஏனைய பெருமக்கள் வழங்கியுள்ளார்கள். மலருக்கு மகுடம் வைத்தாற் போல தமிழகத்திலுள்ளவர்களது படைப்புக்களும் இடம்பெற்று இனிமை சேர்த்துள்ளது.

ஏதோ ஒரு வகையில் தலைவர் தொண்டமானோடு தொடர்புடையவர்களின் ஆக்கங்களே இம்மலரை அலங்கரிக்கின்றன. நானும் தலைவர் தொண்டமான் அவர்களுடன் பலவழிகளில் சம்பந்தப்பட்டுள்ளேன். பதுளை சரஸ்வதி வித்தியாலயத்தில் 1956ல் நான் பயிலும் போது தலைவர்கள் சௌ. தொண்டமான், ஏ. அசிஸ் இருவரும் சரஸ்வதி வித்தியலாயத்தின் விரிவாக்க முயற்சியின் பயனாக மஹியங்கன வீதியில் அமைந்து காட்சி தரும் இன்றைய சரஸ்வதி மத்திய மகா வித்தியாலயத்தின் (தேசிய பாடசாலை) அடிக்கல் நாட்டு விழாவிற்கு வருகை தந்து கலந்து கொண்டார்கள். அத் தேசிய பாடசாலையில் ஊவாமாகாண கல்வி (தமிழ்) இந்து கலாசார அமைச்சர் மு. சச்சிதானந்தன் தலைமையில் நடைபெற்ற தமிழ் சாகித்திய விழாவின் போது தலைவர் தொண்டமான் அவர்கள் எனது "அகிலம் சஞ்சிகை"யை வெளியிட்டு வைத்து என்னைப் பாராட்டிக் கௌரவித்ததை பெரும் பாக்கியமாகவே கருதுகிறேன். தொடர்ந்து கண்டி மத்திய மாகாண இந்து கலாசார மண்டபத்தில் என்னால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மலையகத் தளபதி அமரர் இர. சிவலிங்கம் அவர்களின் கண்ணீர் அஞ்சலிக் கூட்டத்தில் தலைவர் தொண்டமான் அவர்கள் கலந்து கொண்டு "அகிலம் சஞ்சிகை" வெளியிட்ட சிறப்பு நினைவு மலரை வெளியிட்டுவைத்து ஆற்றிய உரை அனைவரையும் கவர்ந்தது. இறுதியில் வெவண்டன் ஆஞ்சநேயர் ஆலயத்தில் நடைபெற்ற கூட்டம் வரை நான் அமரர் தொண்டமானோடு சம்பந்தப்பட்டிருந்தேன்.

இதன் பொருட்டே என்னவோ? அப்பெரும் தலைவரின் நினைவு மலரை நானே பதிப்பித்து வெளியிடும் பொறுப்பு என்னை வந்து சேர்ந்துள்ளது.

எனவே எனக்கு அளிக்கப்பட்ட இவ்வரிய, பெரிய பணியை நல்லதோர் வாய்ப்பாகப் பயன்படுத்தி சிறப்பாக இந்நினைவு மலரை மத்திய மாகாண இந்து கலாசார தமிழ்க் கல்வி அமைச்சிடம் ஒப்படைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்பணியை நற்பணியாக நிறைவுறச் செய்ய உதவிய அனைவருக்கும் என் உளங்கனிந்த நன்றியினை மகிழ்வோடு உரித்தாக்குகின்றேன்.

*அகிலம் பதிப்பகம்*
*308, திருகோணமலை வீதி, கண்டி.*

கே. வி. இராமசாமி ஜே. பி.
*பதிப்பாசிரியர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய மாகாண சபை -

முதலாவது தமிழ் சாகித்திய விழா

ஹட்டன்



மாண்புமிகு அமைச்சர்

வேலுசாமி இராதாகிருஷ்ணன்

*மத்திய மாகாண கல்வி (தமிழ்), இந்து கலாசார,*

*கைத்தொழில், கால்நடை அபிவிருத்தி, வர்த்தகம், வாணிப,*

*சுற்றுலாத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு, சமூக சேவைகள் அமைச்சு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழ் மக்கள் உள்ளங்களில் புகழ்பூத்த மலர்
# தலைவர் தொண்டமான்

எமது தலைவர் கௌரவ சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் தமிழ்த் தலைவர்களில் தலைசிறந்த தலைவர் என்பது மட்டுமல்ல, அவர் காலத்தில் பெரும் சாதனைகளைச் சாதித்துக் காட்டியவர். அதனால்தான் அவரது 50 ஆண்டுகால அரசியல் வாழ்வின் பிற்பகுதியான 30 ஆண்டுகள் அவர் பெரும் கௌரவத்திற்கும், புகழுக்கும், பாராட்டுக்கும் மட்டுமல்ல உலகத் தமிழ் மக்களின் உள்ளங்களில் புகழ்பூத்து நின்றார். அவர் எம்மை விட்டு மறைந்து ஓராண்டு காலம் இன்னும் பூர்த்தியடையாத நிலையில் புத்தாயிரம் ஆண்டில் மத்திய மாகாண இந்து கலாசார, கல்வி (தமிழ்) அமைச்சின் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்ட தமிழ் சாகித்திய விழாவில் அவரது நினைவாக ஓர் மலர் வெளியிடுவதையிட்டு எனக்குக் கிடைத்த பேறாகக் கருதுகிறேன். தமிழ் மக்கள் செறிந்து வாழும் அட்டன் மாநகரில் நடைபெறும் தமிழ் சாகித்திய விழாவில் நம் தலைவருக்காக ஓர் நினைவு மலர் வெளியிடுவது மிகவும் பொருத்தமானதே.

இந்தச் சந்தர்ப்பத்தில் நமது தலைவர் அவர்களுடன் நான் எவ்வாறு பழகினேன் என்பதையும் அவர் எந்த அளவிற்கு பழக இனியவராக இருந்தார் என்பதையும் நினைத்துப்பார்க்கின்றேன்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டமான் அவர்கள் தோட்டத் தொழிலாளர்களின் தலைவர். தொழிலாளர்களுக்காக போராட்டங்களை நடத்தி அவர்களின் உரிமைகளை வென்றெடுத்துக் கொடுப்பதில் வல்லவர் என்பதை அறிவேன்.

அவருக்கும் எனக்கும் இடையில் ஒரு உறவு, பழக்கம் ஏற்படும் என்று என்றுமே நான் நினைத்ததில்லை. அவரைச் சந்தித்தது, எனக்கு ஏற்பட்ட ஓர் காணிப்பிரச்சினை தொடர்பாக எடுத்துக் கூறி அவரிடம் உதவி பெறவேண்டுமென்று நினைத்தாலும் அவரிடம் சென்று பேசும் அளவுக்கு என்னிடம் துணிச்சல் இல்லை. தலைவருக்கும் எனக்கும் ஓர் உறவுப் பாலமாக இருந்து எங்களைச் சந்திக்க வைத்தவர் என்றும் என் மதிப்பிற்குரிய நாடாளுமன்ற உறுப்பினரும் இ. தொ. கா. நிதி செயலாளருமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. முத்து சிவலிங்கம் தான். ஒரு மாபெரும் தலைவரைச் சாதாரணமான எனக்கு அறிமுகப்படுத்திய திரு. முத்து சிவலிங்கம் அவர்களை என்றும் நன்றியோடு நினைவுபடுத்திக் கொள்கிறேன். இன்று நான் பெற்றுள்ள பெருமைகளுக்கும், பதவிகளுக்கும், வளர்ச்சிகளுக்கும் என்றும் என் அன்புத் தலைவர் திரு. தொண்டமான் அவர்களும், அவரை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்த திரு. முத்து சிவலிங்கம் அவர்களும் தான் முழுமுதற் காரணகர்த்தாக்கள்.

அன்று நான் காணிப்பிரச்சினையைக் கூறியதும் அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்களுடன் நேரில் பேச்சுவார்த்தை நடத்தி எனக்கு நியாயம் கிடைக்கச் செய்ததன் மூலம் என்கற்பனையில் இருந்த தலைவர் எனது மானசீக தலைவராக என்றும் என் வழிகாட்டியாக அமைத்தார்.

இந்த நிகழ்ச்சியின் பின் தலைவர் நுவரெலியாப் பகுதிக்கு வரும் போதெல்லாம் அவரைச் சந்தித்து உரையாட நான் தவறியதில்லை. என் ஆர்வத்தினால் அவரது பிறந்த தினத்தை நான் முன்னின்று ஏற்பாடு செய்து நடத்தியதோடு தலைவரின் "வெற்றியின் ரகசியம்" என்ற ஒரு புத்தகத்தையும் தலைவரின் பெயரில் வெளியிட்டு வைத்ததின் மூலம் என் வாழ்க்கையில் ஒரு படி உயர்ந்தேன் என்பதைவிட தலைவரின் மனதில் ஆழமான ஓர் இடத்தைப் பிடித்தேன் என்று தான் கூற வேண்டும்.

1987 ம் ஆண்டில் என்னை நுவரெலியா பிரதேசசபையின் உறுப்பினராக மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவரதும், மக்களதும் நல்லெண்ணத்தைப் பெற்று எனது கடமைகளைச் செய்து வந்தேன். இதன் காரணமாக மக்கள் மனதிலும், நம் தலைவர் மனதிலும் நல்லிடத்தையும், நல்லெண்ணத்தையும் பெற்றேன். இதன் காரணமாகத்தான் நுவரெலியா பிரதேசசபையின் தலைவராக என் அந்தஸ்த்தை தலைவர் உயர்த்தினார். இதன் மூலம் தலைவர் தொண்டமான் அவர்கள் என் மீதும் என் திறமைமீதும் எந்த அளவு நம்பிக்கை கொண்டிருந்தார் என்பதை உணரும் ஒரு பெரும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

மத்திய மாகாண ரீதியிலும், அகில இலங்கை ரீதியிலும், பிரதேச சபைகளின் நடவடிக்கைகள், செயற்பாடுகள், நிர்வாகம் என்பவற்றில் சிறந்த சபைகளுக்கான பரிசு அன்றைய ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ அவர்களால் வழங்கப்பட்டது. அதில் முதல் பரிசுசையும், பாராட்டையும், பணப்பரிசையும் எனது தலைமையின் கீழ் இயங்கிய நுவரெலியா பிரதேசசபை அடுத்தடுத்துப் பெற்று நமது தலைவரின் தலைமைக்கும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும், இந்திய வம்சாவளி மக்களுக்கும் பெருமையும் புகழையும் சேர்த்துக் கொடுத்தது.

இச்சம்பவத்தால் நம் தலைவர் நெகிழ்ந்து போனார். அதன் காரணமாக நுவரெலியா பிரதேச சபையின் ஜமின்தார் என்று என்னைப் புகழ்ந்து புகழாரம் சூட்டிக் கௌரவித்தார். அவர் சூட்டிய இந்த புகழ்மாலையினால் பூரித்துப் போனேன். நமது மக்களுக்கு நாம் செய்ய வேண்டிய பணிகளுக்காக சட்டதிட்டங்களையும் பிரதேச சபைக்குட்பட்டவரம்புகளையும் எண்ணிக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை செய்யமுடியாது. மனிதாபிமானத்துடன், கடமை உணர்வோடு பின்தள்ளப்பட்ட மக்களை முன்னேற்ற வேண்டும் என்ற உணர்வோடு சட்டத்துக்கும் அப்பால் சென்று நல்லதை நியாயமானதை செய்ய வேண்டும் என்று எனக்கு உற்சாகமும் ஊக்கமும் ஊட்டியதினால் என் அதிகாரத்திற்கு மேலும் நான் சேவையாற்றினேன். இப்படி உற்சாகம் கொடுத்த தலைவர் போன்று ஒருவரும் நமது சமூகத்தில் எப்போதும் தோன்றியதில்லை. ஏனைய சமூகத்தில் இருந்தார்களா என்பது கேள்வி குறிதான்.

அடுத்து நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் நமது மலையக இந்திய வம்சாவளி மக்கள் நாம் எதிர்பார்த்ததற்கு விரோதமாக இழந்திருந்த உரிமைகளை பெற்றுக் கொடுத்தவர்கள் நமது தலைவரும் இ. தொ. காவும் தான் என்பதை மறந்து விட்டு தன் போக்கில் வாக்களித்து நமது தலைமையின் பலத்தை பலவீனப்படுத்தியதோடு அபகீர்த்தியையும் ஏற்படுத்தினாலும் தலைவர் எனது நல்ல சிறந்த சேவையை மதித்து மீண்டும் மாகாண சபைத் தேர்தலில் என்னை போட்டியிட வைத்து வெற்றி பெற வைத்தார். அது மட்டுமல்ல மத்திய மாகாண சபையின் அமைச்சரவையில் என்னையும் ஓர் அமைச்சராக நியமித்து மேலும் மக்களுக்கான பணி செய்ய என்னை உற்சாகப்படுத்தினார்.

நான் பதவி ஏற்று சில மாதங்களிலேயே தலைவர் அமரரானார். அது என் மனதில் பெரும் தாக்கத்தையும் கலக்கத்தையும் ஏற்படுத்தி விட்டதென்றாலும் தலைவரின் எதிர்பார்ப்பை அவரது வழியில் முன்னெடுத்துச் சென்ற அன்புத் தம்பி கௌரவ ஆறுமுகம் தொண்டமான் தலைமையில் சிறப்பாக செயல்படுத்துவதன் மூலமாக தலைவரின் ஆத்மா திருப்தியுற பணியாற்றுவதே எனது முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறேன். இப்பணிக்கு அனைவரின் அன்பான ஒத்துழைப்பை நன்றியோடு எதிர்பார்க்கிறேன்.

கௌரவ. வி. இராதாகிருஷ்ணன்
*அமைச்சர், மத்திய மாகாண சபை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# *Hon. Saumyamoorthy Thondaman*

Late Hon. Saumyamoorthy Thondaman could undoubtedly be referred to as the father of the Plantation Civilization. The yeomen services he rendered to his people who made him the Leader, is unparalleled, in the service to humanity in this country and will be written in letters of gold in the annals of history of this island nation. The feeling he had for his fellow people was not for personal aggrandizement but one born out of a genuine sympathy for the lot of the plantation workers, who were a much deprived group of people at one time politically, socially, economically and culturally.

He succeeded in giving able leadership to a class of people, who had no bargaining strength, by organizing them into one of the most formidable Trade Unions in the country, namely the Ceylon Workers Congress.

Through this movement he completely transformed the social environment in the plantations by introducing reforms in Education, Health, Infrastructure, Housing, that led to a rise in the standard of living of the estate folk in a very remarkable way. Thondaman is a legend of the new Estate Culture and he has carved out an everlasting niche in the hearts and minds of the estate population.

This colossus of a leader was a trailblazer and made the down trodden community to emerge from its slumber and backwardness in society and stand in par with the rest of the citizens in the country.

Hon. Thondaman was an slumber politician, who had no equal when it came to bargaining for the rights of his people. He was an intellect par excellence and a gentleman of the highest order. He never minced him words in giving expression to his convictions. His benevolence was not confined only to his people but transcended to other communities as well be they Sinhala, Muslims, Burgher or any others. Therefore he was held in high esteem not only the people in the plantation sector but by all the other communities in Sri Lanka.

I was particularly fortunate to have had the privilege of associating him for nearly a decade as a public officer and during this period I had the rare opportunity of witnessing the diplomacy and astuteness, with which he handled co-ordination work between state officials and politicians.

Hon. Thondaman was a man who had a vision and a mission to accomplish and he left no stone unturned until he realized his goal; a lesson to be well taken by all of us in this country.

I am sure the memory of Hon. Thondaman will be everlasting and his ideologies will reverberate in the hills for generations to come.

**_Palitha Elkaduwa_**

*Secretary*

*Ministry of industries, Trade and Commerce Tourism, Estate Infrastructure, Livestock Development, Hindu Cultural Affairs Education (Tamil) Social Service & Rehabilitation, Central Province.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மனிதநேயமிக்க தனித்துவமான தலைவர்
# அமரர் தொண்டமான்

நித்தம் நினைவு கூரப்படவேண்டிய மலையகத்தின் தலைமைத் தலைவர் அமரர் தொண்டமானுக்கு மத்திய மாகாண கைத்தொழில், வர்த்தக வாணிப உல்லாசப் பயணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு, கால்நடை அபிவிருத்தி, இந்து கலாசார சமூக சேவைகள், புனருத்தாரணம், கல்வி (தமிழ்) அமைச்சு நினைவு மலர் வெளியிடுவது சாலப்பொருத்தமுடையதாகும்.

ஒடுக்கப்பட்ட ஒரு சமூகத்திற்காக தன்னையே அர்ப்பணித்துப் போராடி சோதனைகளில் சாதனை படைத்த பெருந்தலைவர். மலையகப் பெருந்தோட்டப் பாடசாலைகளின் கல்வி வளர்ச்சிக்கும், மலையக கலை கலாசாரம் என்பவற்றின் விருத்திக்கும் அரும்பணியாற்றியவர் தலைவர் தொண்டமான். மனித நேயம் மிக்கவர். உழைக்கும் வர்க்கத்தின் உயிர் நாடியாக உந்து சக்தியாக நேர்வழி காட்டியவர்.

எனது ஆசானாக இருந்து எனது வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர். அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி எனது அரசியல் பயணத்தைத் தொடர்ந்து வருகின்றேன். தனித்துவமான குணாதிசயம் மிக்க அமரர் தொண்டமான் நான் மதிக்கும் தனித்துவமான தலைவர். நிறைந்த மனதோடு மலர்களால் மறைந்த தலைவருக்கு அஞ்சலி செலுத்துகின்றேன்.

துரை. மதியுகராஜா
மத்திய மாகாணசபை உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஒப்பற்ற உலகத் தமிழ்த் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான்

"ஓம் நமசிவாய" இது இந்துக்களின் ஐந்தெழுத்து மந்திரம் "தலைவர் தொண்டமான்" இது மலையக மக்களின் தாரக மந்திரம். "தொண்டமான்" என்ற மாபெரும் சக்தி கடந்த அறுபது ஆண்டுகளாக மலையக மக்களை ஈர்த்தெடுத்து அவர்களின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்துள்ளது.

மலையக மக்களுக்குச் சேவை செய்வதற்கென்றே கடவுளால் படைக்கப்பட்ட காந்தச்சுடர்தான் தொண்டமான். வாக்குரிமை பறிக்கப்பட்ட மலையக மக்களுக்கு எந்தக் கட்சி அரசாங்கத்தின் காலத்தில் பறிக்கப்பட்டதோ அதே அரசாங்கத்தின் ஆட்சியில் மீண்டும் வாக்குரிமை பெற்றுக் கொடுத்தவர் தான் எங்கள் வரலாற்று நாயகன் தொண்டமான்.

தமது சொத்துச் சுகங்களைப் பின்தங்கியிருந்த மலையகச் சமுதாயத்தின் விடிவிற்காகவும், விழிப்புணர்வுக்காகவும் அர்பணித்து இறுதி மூச்சுவரை இடையறாது பாடுபட்ட எங்கள் தலைவர் இலங்கை இந்திய அரசியற் தலைவர்களை மாத்திரம் அல்லாது உலகத் தலைவர்களையும் சந்தித்து எமது மக்களின் தேவைகளையும் உரிமைகளையும் துணிச்சலோடு எடுத்துக் கூறியிருந்த விதம் ஏனைய தலைவர்களை எரிச்சல் கொள்ளச் செய்தாலும் "எமக்கு இத்தகைய ஒரு தலைவர் இல்லையே" என்று ஏங்க வைத்ததை நாம் கண்கூடாக அறிவோம்.

அடிப்படை உரிமையான அரசியல் உரிமை பெற்றால் தான் தலை நிமிர்ந்து வாழ முடியும் என்பதை உணர்ந்து மலையக மக்கள் பிரஜாவுரிமை பெறுவதற்காகப் போராடினார். அவரின் தீர்க்க தரிசனம், அரசியல் சாணாக்கியம், அனுபவ முதிர்ச்சி அஞ்சா நெஞ்சம் இவற்றின் துணை கொண்டு ஐ. தே. க ஆட்சிக் காலத்தில் பறிக்கப்பட்ட வாக்குரிமையை அதே ஆட்சிக் காலத்தில் பெற்றுக் கொடுத்தார்.

அமரர் தொண்டமானின் தலைமையிலும் வழிநடத்தலிலும் இன்று பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் மாகாணசபை நிர்வாகம் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சிப் பொறுப்பு முதலான இன்னோரன்ன வாய்ப்புக்களைப் பெற்றுள்ளோம்.

1984ஆம் ஆண்டு அவரின் தலைமையில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் ஒன்றுபட்டதன் விளைவாக ஆண், பெண் தொழிலாளர்களுக்கு சம சம்பளம் கிடைத்தது. எமது சமூகம் கல்வித் துறையில் முன்னேறினால் தான் ஏனைய சமூகங்களுக்கு ஈடுகொடுத்து வாழ முடியும் என்பதை உணர்ந்த தலைவர் தொண்டமான் தமது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து பாடசாலைகளுக்கும் கட்டிடங்களைக் கட்டிக் கொடுத்தார்.

அவர் மேற்கொண்ட முயற்சியின் பயனாகப் பெருந் தோட்டப் பாடசாலைகளில் கல்வி அபிவிருத்தியை மேற்கொள்ள சுவீடன் நாட்டு நிதியுதவியுடன் "சீடா" செயற்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் கோடிக்கணக்கான ருபா செலவில் பெருந்தோட்டப் பாடசாலைகளுக்குக் கட்டிடங்கள் தளபாடங்கள், அதிபர், ஆசிரியர் விடுதிகள் மற்றும் ஆசிரிய நியமனங்களும் பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன. மாட்டுக் கொட்டில்களைவிட மோசமான நிலையில் காணப்பட்ட பெருந்தோட்டப் பாடசாலைகள் புதுப் பொலிவுடன் சிறந்த பெறுபேறுகளைக் காணவும் அவர் வழி அமைத்துள்ளார். தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புக்களும் சுற்றியுள்ள காணியும் அவர்களுக்கே சொந்தமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்று வலியுறுத்திய அமரர் தொண்டமானின் கனவு இன்று நனவாகி வருகின்றது. அவரது வழியில் அவரால் வளர்த்தெடுக்கப்பட்ட அன்னாரது பேரனான கௌரவ அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த அயராது பாடுபட்டு வருகின்றார். அவரது ஆற்றலில் மலையக சமுதாயம் முழு நம்பிக்கையுடன் இருக்கின்றது. தோட்டத் தொழிலாளர்கள் அவர்கள் இருக்கும் இடத்திலேயே சகல வசதிகளையும் அனுபவிக்க வேண்டும் என்ற அமரரின் எண்ணம் நிறைவேறும் விதத்தில் தோட்டங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருவதும் முகவர் தபால் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருவதும் மலையக மக்கள் என்றென்றும் நன்றியுடன் நினைவு கூருவார்கள்.

ஒரு சமூகத்தை வழிநடத்தக்கூடிய, தலைமை தாங்கக் கூடிய தலைவர் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர். தமிழினம் மாத்திரமல்லாது இலங்கையில் பெரும்பான்மையினத்தவராலும் மதிக்கப்பட்ட மாமனிதராக அவர் விளங்கினார். தமது மனதுக்குச் "சரி" எனப்பட்டதை ஆணித்தரமாக அச்சமின்றி எடுத்துக் கூறும் பண்பு அவரிடம் மேலோங்கியிருந்தமை மலையக மக்களின் நல்வாழ்வுக்கு வித்திடக்கூடிய பல நல்ல திட்டங்களையும் சேவைகளையும் முன்னெடுத்துச் செல்லப் பெருந்துணை புரிந்தது. ஒரு சிறுபான்மை இனத்தவரான அமரர் தலைவர் தொண்டமான் பெரும்பான்மை இனத்தவரின் ஆட்சியில் அமைச்சராக இருந்து கொண்டு தமது சமூகத்தின் மேம்பாட்டுக்காக தோட்டத் தொழிலாளர்களின் நல்வாழ்வுக்காகப் போராட்டம் செய்தார் என்றால் அது உலக வரலாற்றில் எவருஞ் செய்திராத பெருஞ் சாதனை என்று தான் கூற வேண்டும். மலையத்தில் படித்த இளைஞர் யுவதிகள் ஆசிரியராகவும், பொலிஸ் உத்தியோகத்தராகவும், வங்கி அலுவலர்களாகவும் பதவி வகிக்கக் காரண கர்த்தாவாக விளங்கியவர் அமரர் தொண்டமான்.

ஆட்சியாளர்களின் கைப்பொம்மையாக அவர் என்றுமே விளங்கியதில்லை. இந்த நாட்டின் அரசாங்கத்தைத் தீர்மானிக்க வைக்கும் சக்தியாக மலையக மக்களை விளங்க வைத்த அவர் அந்த மக்களின் வாழ்வில் விடிவை ஏற்படுத்தவும் மாற்றத்தைக் காணவும் சுயநலமின்றி பாடுபட்டார்.

அவரின் அரசியல் சாணக்கியம் இந்த நாட்டிலுள்ள ஏனைய சமூகங்களைச் சேர்ந்த தலைவர்களையே ஆச்சரியப்பட வைத்தது. எனவே தான் மாற்றுக் கருத்துக் கொண்டிருந்தவர்களாலும் மதிக்கப்பட்ட மாமனிதனாகத் திகழ்ந்தார். மலையக மக்களை ஒன்றிணைத்துச் செயற்பட வேண்டும் என்று அவர் விரும்பினார். சகல தொழிற்சங்கத் தலைவர்களையும் "இந்திய வம்சாவளி மக்கள் பேரவை" யின் கீழ் கொண்டுவரப் பாடுபட்டார். கருத்துப் பேதங்கள் முரண்பாடுகள் காணப்பட்டாலும் எமது சமுதாயம் ஒன்றுபட்டால் தான் உன்னத நிலையை அடைய முடியும் என்று அவர் உறுதியாக நம்பினார்.

அந்தப் பெருந் தலைவரின் அனுபவமும் சிந்தாந்தமும் எதிர்காலச் சந்ததியினருக்கு வரலாற்றுப் பாடமாக அமைய வேண்டும். அவரின் வாழ்க்கையும் சேவையும் மனவுறுதியும் அரசியல் தொழிற்சங்கத் தலைவர்கள் ஏற்று நடக்கக்கூடியதாக அமைந்துள்ளது. அவரின் இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது மலையக மக்களின் தலையாய கடமையாகும்.

இந்த நாட்டில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களினால் வேண்டப்பட்ட ஒரு தலைவராகத் தலைவர் தொண்டமான் திகழ்ந்தார். இறுதி யாத்திரையின் போது கிடைத்த அரச மரியாதையையும்............ இலட்சோப இலட்ச மக்களின் கண்ணீர் அஞ்சலியையும் அமரர் தொண்டமானை சரித்திரப் புருஷராக வாழ வைத்துக் கொண்டே இருக்கும்.

*மலையகத்தின் தாரக மந்திரம்*
*தலைவர் தொண்டமான்*
*அவர் என்றும் வாழ்ந்து கொண்டே*
*இருக்கிறார்.*

**எஸ். வெள்ளையன்**
*மத்திய மாகாணசபை உறுப்பினர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





### சப்ரகமுவ மாகாண சபை பிரதித் தலைவர்

### கணபதிப்பிள்ளை இராமச்சந்திரன் அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

மலையகத்தின் மணிமகுடமாய்த் திகழ்ந்து தமிழர் இதயங்களில் இரத்தின தீபமாய் பிரகாசித்துக் கொண்டிருக்கும் மறைந்தும் மறையாத நம் தலைவர் பற்றிய செய்தியை இம் மலரில் வெளியிடக் கிடைத்த இவ் வாய்ப்பினை பெரும் பாக்கியமாகக் கருதும்போது உள்ளம் நெகிழ்கின்றது.

எனக்கு அரசியல் வழிகாட்டலின் ஆசானாகவும், இன்று சப்ரகமுக மாகாண சபையின் பிரதித் தலைவராகவும் நான் கடமையாற்ற ஆக்கமும் ஊக்கமும் தந்த என் இதய தெய்வத்திற்கு என் நன்றிகளை இச் சந்தர்ப்பத்தில் காணிக்கையாய் அர்ப்பணிக்கின்றேன்.

இலங்கை அரசியல் வரலாற்றில் குறிப்பாக மலையக அரசியல் களத்தில் தனக்கும் தன் மக்களுக்கும் ஒரு தனித்துவத்தையும், அரசியல் சாணக்கியத்தையும் கொண்ட ஒரு மாமேதை என்றால் அது அமரர் தொண்டமான் ஐயாவுக்கு நிகர் அவரே. இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களின் இன்னல்களுக்கு விடிவுகாண வேண்டுமென்பதற்காக சுயநலமற்ற பொது நோக்கம் கொண்ட கொள்கையை தன்னகத்தே கொண்டு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்ற ஸ்தாபனத்தை ஆரம்பித்து கட்டுக் கோப்புடனும் கடமையுணர்வோடும் செயலாற்றி அதன் மூலம் தொழிலாள வர்க்கத்தின் அடிப்படை உரிமைகளை வென்று இ. தொ. கா. என்றால் அது மாபெரும் ஆலவிருட்சம் என்று ஏனையோர் வியந்து, வியர்த்து ஐயாவின் தயவை நாடி அவரின் அனுசரணையுடன் ஆட்சியமைக்க வழியமைத்த பெருமையும் ஐயாவையே சாரும். அதேவேளை, இந்திய வம்சாவளி மக்களாகிய தோட்டவாழ் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க அவர் நடாத்திய அறப் போராட்டங்கள் சொல்லில் அடங்காது, அவர் செய்த அரசியல் சாணக்கியம் கலந்த சாகஸங்கள் வியக்கத்தக்கவை. அதன் விளைவாகவே மலையகக் கல்வி, சுகாதாரம், குடியிருப்பு, மின்சாரம் உட்பட இன்னோரன்ன அபிவிருத்தித் திட்டங்களும் மலையகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அத்துடன் நின்றுவிடாது மலையகம் விழிப்படைய வேண்டுமென்றும், மலையக மைந்தனும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்க வேண்டுமென்ற பெருந்தன்மையின் முயற்சியினால் இன்று பாராளுமன்றம், மாகாண சபை, நகர, மாநகர, பிரதேச சபைகளிலும் பரிணமிப்பதைக் காணும் தமிழ் இரத்தம் ஓடும் ஒவ்வொருவரின் இதயமும் பூரிக்கவே செய்யும் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஆகவே, எம்மையெல்லாம் அரசியற் களம் புகுந்து கறைபடாது சேவையாற்ற உருவாக்கி காங்கிரஸ் என்ற அசைக்க முடியாத விழுதுகள் கொண்ட ஆலமரத்தை கட்டிக் காத்திடவும் நம் மக்களின் தன்மானமும், தனித்துவமும் பேணப்படவும் ஐயா காட்டிய வழியிலும், அவர் கற்றுக் கொடுத்த கட்டுப்கோப்புடனும் பணிசெய்யும் பயணத்தைத் தொடருவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீர்க்க தரிசனமிக்க மாமனிதர்

## தலைவர் தொண்டமான்



மாண்புமிகு அமரர் சௌ. தொண்டமான் அவர்கள் உலகத் தமிழ்த் தலைவர் என உலக வாழ் தமிழ் மக்களால் ஒரு மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர். இதற்குக் காரணம் அவரிடம் காணப்பட்ட உன்னத தலைமைத்துவப் பண்புகளாகும். தீர்மானம் மேற்கொள்ளலில் அவர் ஒரு தீர்க்கதரிசனமிக்க மாமனிதராய் விளங்கினார். மேலும் பொது நிர்வாக உத்தியோகஸ்த்தர்கள் மத்தியில் மிகுந்த நன்மதிப்பு கொண்டவராகக் காணப்பட்டார்.

இன்று மலையக சமுதாயம் தனக்கென தனித்துவம் கொண்ட ஒரு சமுதாயமாக இந்நாட்டில் வாழ்வதற்கு மூலகாரணம் எமது தலைவர்தான். அவர் காட்டிச் சென்ற வழியில் அவர் சுவட்டினைப் பின்பற்றுவது நாம் அவருக்குச் செலுத்தும் நன்றிக் கடனாகும்.

தலைவர்கள் மறைந்த பின் அவர்களை நினைவு கூருவது உலக வழக்கமாகும். ஹட்டன் தமிழ் சாகித்திய விழாவில் வெளியிடப்படும் இச்சிறப்பு நினைவு மலருக்கு சகல விதத்தாலும் எங்களது கௌரவ அமைச்சர் வி. இராதாகிருஷ்ணன் தலைமையின் கீழ் செயற்பட்ட சாகித்திய விழாக் குழுவினருக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எனது தொழில் நிமித்தம் நான் எனது மலையக சமுதாயத்தை விட்டுத் தற்காலிகமாக பிரிய நேரிட்ட போதும் எங்கு, எந்நிலையில் இருந்தாலும் தலைவர் அமரர் தொண்டமான் வழி சென்று எனது சமுதாயத்திற்கான எனது கடமையைச் செய்வேன் என உறுதி கூறுகின்றேன். அமரரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

லோகநாதன் விஜயநாதன்

*(கௌரவ அமைச்சர் வி. இராதாகிருஷ்ணன் அவர்களின் முன்னாள் பிரத்தியேகச் செயலாளர்.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தின் ஒற்றுமையில் அதீத அக்கறை காட்டியவர் மறைந்த தலைவர் எஸ். தொண்டமான்

இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான சௌமியமூர்த்தி தொண்டமான் மறைந்து பல மாதங்கள் கழிந்து விட்டன.

இன்று அவரை நினைவு கூருமுகமாக மத்திய மாகாண கைத்தொழில், வர்த்தக, வாணிப, சுற்றுலாத்துறை, தோட்ட உள்ளகக் கட்டமைப்பு, கால்நடை அபிவிருத்தி, இந்து கலாசார அலுவல்கள் கல்வி (தமிழ்), சமூக சேவைகள், புனருத்தாரண அமைச்சு சிறப்பு நினைவு மலரை வெளியிடுவது வரவேற்கத்தக்கதாகும்.

ஒரு தனி மனிதனுக்கு நாடு என்ன செய்தது என்பதைவிட நாட்டுக்கு அவர் என்ன செய்தார் என்பதைச் சீர்தூக்கிப் பார்ப்பதே சிறப்பு.

அவ்வகையில் மறைந்த சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் இந்த நாட்டுக்கு குறிப்பாக இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களுக்கு என்ன செய்தார், எத்தகைய பங்களிப்பை நல்கினார் என்பது குறித்து சீர்தூக்கிப் பார்ப்பது இன்றைய காலகட்டத்திற்குப் பொருத்தமானதாகும்.

மறைந்த எஸ். தொண்டமான் அவர்கள் மலையகத் தலைவராக மாத்திரமல்ல இந்நாட்டின் வரலாற்றில் மூத்த அரசியல் தொழிற்சங்கத் தலைவராகவும் திகழ்ந்தார். அவரது மறைவு மலையகத்துக்கும் நாட்டுக்கும் பேரிழப்பாக அமைந்து விட்டது.

1948ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டம் இலங்கைவாழ் இந்திய தமிழ் வம்சாவளி மக்களை இந்நாட்டின் தேசிய நீரோட்டத்தில் இருந்து விலக்கிவைத்தது. இதனால் மலையக சமூகம் பல்வேறு இழப்புக்களைச் சந்தித்தது.

இந்த இழப்புக்களை ஈடு செய்யவென பிரஜாவுரிமைச் சட்டங்களும், ஒப்பந்தங்களும் ஏற்படுத்தப்பட்டபோதும் இவ் ஏற்பாடுகள் மூலம் மலையகம் மீட்சி பெறுவதாக அமையவில்லை.

இவ்வேளையில்தான் 1977 ஆம் ஆண்டு தனி ஒருவராகப் பாராளுமன்றம் புகுந்த மறைந்த எஸ். தொண்டமான் அவர்கள் பிரஜாவுரிமை விடயத்தில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வரக்காரண கர்த்தாவாக இருந்ததுடன் நாடற்றோர் எனக்கருதப்பட்ட இந்திய வம்சாவளி மக்கள் இலங்கைப் பிரஜைகள் என்ற அந்தஸ்தைப் பெறுவதற்கு வழி வகுத்தார்.

மறைந்த எஸ். தொண்டமான் அவர்கள் மலையகத்தின் ஒற்றுமை, கட்டுக்கோப்பு என்பன காப்பாற்றப்பட வேண்டும் என்பது குறித்து அதீத அக்கறை காட்டி வந்தார். அவரது இந்த அபிலாஷையைப் பூர்த்தி செய்வது இன்றைய அவசர அவசியத்தேவையாகும். நாட்டின் இன்றைய அரசியல் யதார்த்தத்தை நோக்கின் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம். இதுவே அவருக்கு மலையகம் செய்யும் கைமாறாகவும் அமையும்.

திரு. எம். ஜி. வென்சஸ்லோஸ்

*நிர்வாகப் பணிப்பாளர்,*

*வீரகேசரி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகின் தலைசிறந்த தமிழன்



அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் நினைவுச் சிறப்புமலருக்கு தினகரன் சார்பில் செய்தியொன்றினை அனுப்பிவைப்பது உவகையைத் தருகிறது. மத்திய மாகாண மலையகத் தமிழ் மக்கள் புதிய நூற்றாண்டில் தமது முதலாவது சாகித்திய விழாவைக் கொண்டாடுவது மிகப் பொருத்தானது.

தனது இதயத்தின் இறுதித் துடிப்பு நிற்கும்வரை அறுபதாண்டுகாலம் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்காகவும் சர்வதேச தொழிலாளர் வர்க்கத்திற்காகவும் உலகத் தமிழ் மக்கள் அனைவருக்காகவும் குரலெழுப்பிப் போராடிய மாமேரு தனது இயக்கத்தை நிறுத்தி இளவல்களிடம் பொறுப்புகளை ஒப்படைத்து ஓய்ந்துவிட்டது.

இந்துக்களின் காலக் கணிப்பீட்டின்படி அறுபது ஆண்டுகள் என்பது ஒரு பூரண வாழ்க்கைச் சுற்றாகும். தோற்றத்திலும் திடவுறுதியிலும் கொள்கைப் பற்றிலும் மாமேரு மலையையொத்த தொண்டமான் தனது வாழ்க்கையின் பூரண சுற்றுக்காலம் மக்கள் மேம்பாட்டிற்காகத் தொண்டாற்றியுள்ளார். அவரை நினைவுகூர்ந்து சிறப்பு மலரொன்றை வெளியிடுவது மத்திய மாகாண மலையகத் தமிழ் மக்களின் செய்நன்றி மறவாத சிறந்த பண்பை நன்கு புலப்படுத்துகிறது.

தமிழ் நாட்டின் மூதறிஞர் குழு 1992 ஜூலை 15 ஆந் திகதி "உலகின் தலைசிறந்த தமிழன்" எனும் விருதினை உலகில் தலைசிறந்த மனிதர்களில் ஒருவரான அமரருக்கு வழங்கி கௌரவம் சேர்த்துக்கொண்டது. மலையகத் தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகப் போராட்டங்களில் மட்டுமின்றி அம் மக்களின் கலை, இலக்கிய, கலாசார மேம்பாட்டிற்கும் அயராதுழைத்த மாமனிதரை மலையக தமிழ் சாகித்திய விழாவின்போது நினைவுகூர்வது சாலப்பொருத்தமானது.

அழகிய ஹற்றன் மாநகரில் நிகழ்வுறும் மலையக தமிழ் சாகித்திய விழா வெற்றிகரமாக நிறைவுபெறவும் செழிப்புமிகுந்த மலையக மண்ணில் தமிழ் கலை, இலக்கிய, கலாசாரச் செயற்பாடுகள் செழித்தோங்கவும் இவை உலகத் தழிழர்களின் பண்பாட்டுக் கூறுகளாகப் பரிணாமம் பெறவும் வாழ்த்துக்கள்.

2000.05.02

ராஜ ஸ்ரீகாந்தன்

*பிரதம ஆசிரியர் – தினகரன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மத்திய மாகாண இந்து மாமன்றத் தலைவர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

மலையக மக்களின் வரலாற்றில் இமய மலையாக நிமிர்ந்து நின்று வழிகாட்டி வந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் இன்று நம்மோடு இல்லை. எவருமே எதிர்ப்பார்த்திராத தருணத்தில் அப்பெருமகன் அமரத்துவம் அடைந்து விட்டார்.

தோட்ட உரிமையாளர், தொழிற்சங்கத் தலைவர், நாடாளுமன்ற அங்கத்தவர், அமைச்சர், தேசிய தலைவர் என கடந்த 50 வருடங்களாக தன் அப்பழுக்கற்ற சேவையினால் படிப்படியாக உயர்ந்து நற்பணியாற்றிய அருந்தலைவர் இன்று நம்மோடு இல்லை. மலையக மக்களின் உயர்வே தனது உயர்வு என வாழ்ந்த மாமலை சரிந்துவிட்டது.

எக்காலக்கட்டத்தில் அவருடைய தலைமைத்துவம் நமக்கு, மிக அதிகமாகத் தேவைப்படுகிறதோ அச்சந்தர்ப்பத்தில் காலன் அவரைக்கவர்ந்து சென்று விட்டான். 50 வருடங்களுக்கு அதிகமாக ஒரு ஸ்தாபனத்திற்கு தலைமை தாங்கி, தனது சமூக மக்களை வழி நடத்திச் சென்ற சாதனை உலக வரலாற்றில் வேறு எங்கும் இடம்பெற்றதாக நாமறியோம். போற்றுபவர் போற்றட்டும், தூற்றுபவர் தூற்றட்டும் என எதனையும் பற்றி கவலைப்படாமல் தனது மனதிற்கு எது சரியெனப்படுகிறதோ அதனை துணிவுடன் எடுத்து சொல்லி செயலாற்றி வந்த வல்லமைமிக்க தலைவரை நாம் இழந்து தவிக்கிறோம். இது மலையக சமூகத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பு என்பது வெறும் வார்த்தைகளல்ல. சத்திய வாக்குகள்.

அவருடைய மறைவுடன் நமது சமூக வரலாற்றில் ஒரு சகாப்தம் முடிவடைந்து விட்டது. தனது வாழ்நாளில் அவர் எந்த இலட்சியங்களுக்காக போராடினாரோ அந்த இலட்சியங்களை நாம் அனைவரும் சேர்ந்து நிறைவேற்றுவதுதான் நாம் உண்மையிலேயே அவருக்கு செலுத்தும் நன்றிக் கடனாகும்.

முயல்வோம் ! வெல்வோம் !!

அ. துரைசாமிபிள்ளை, ஜே. பி.
*தலைவர்*
*மத்திய மாகாண இந்து மாமன்றம்*
*கண்டி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புகழ்பெற்ற தேசியத் தலைவர் வரிசையில்
# அமரர் தொண்டமான்



என் பாடசாலை நாட்களில் என்னை அறியாமலே என் தலைவர் வழியில் ஈர்க்கப்பட்டேன். 1988ல் முதலாவது மாகாண சபைத் தேர்தலில் தலைவரின் மகனுக்காக நான் வாக்குச் சேகரிக்க மஸ்கெலியா நகரில் தங்கியிருந்து தேர்தல் பணியில் ஈடுபட்டதோடு எனது காங்கிரஸ் பிரவேசம் ஆரம்பித்தது. அதன் பிறகு நான் அரச ஊழியரான பின்னர் இன்று வரை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எனது வாழ்க்கையில் பிரிக்க முடியாத ஒரங்கம் ஆகிவிட்டது.

நான் பேச்சுப் போட்டிக்கான ஜனாதிபதி விருதை 1991ம் ஆண்டு வென்ற போது தலைவர் என்னை அன்புடன் விசாரித்ததோடு பாராட்டவும் செய்தார். அவரோடு அருகில் நின்று எடுத்துக் கொண்ட புகைப்படத்தை நான் ஒரு பொக்கிஷமாகவே கருதுகிறேன்.

நான் பல மேடைகளில் தலைவர்களோடு பேசியிருந்தாலும் கடந்த மாகாண சபைத் தேர்தலில் நான் முன்னின்று அமைத்த மேடையில் தலைவரவர்கள் 30 நிமிடம் பேசிக் கொண்டிருந்ததை காதாரக் கேட்டு எனது நீண்ட நாள் ஆசையைப் பூர்த்தி செய்து கொண்டேன்.

அரசியலைப் பலர் வியாபாரமாக்கி இலாபமீட்டிக் கொண்டிருக்கும் போது அரசியலில் சகலதையும் இழந்து மக்களின் மனங்களை மாத்திரம் சம்பாதித்தவர் நம் தலைவர். காந்தீய வழியில் ஒற்றுமையின் வலிமையில் உறுதியான நம்பிக்கை கொண்டவராகவே நம் தலைவர் திகழ்ந்தார்.

பச்சை மலையகம் வெள்ளையாக மாறியதை தலைவர் என்னை விட்டு பிரிந்த போது தான் நான் கண்டேன். முதல்முதலாக ஒரு மலையகத் தமிழன் ஸ்ரீலங்கா குடியரசின் சுதந்திர சதுக்கத்தில் தீயோடு விண்ணில் கலந்தபோது நானங்கு கண்ணீரில் விடை கூறி நின்றேன்.

என் தலைவர் எமக்குச் சகல விதத்திலும் உகந்த வழிகளை ஏற்படுத்தி விட்டே பிரிந்துள்ளார். அவரால் உருவாக்கப்பட்ட அரசியல் தலைவர்கள் எம்மைத் திறம்பட வழிநடத்துவார்கள் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. குறிப்பாக இளைய தலைவர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களின் பல நடவடிக்கைகளை நான் அருகில் நின்று அவதானித்தவன் என்ற வகையில் இதை எழுதுகின்றேன்.

நான் கூறிய பல விடயங்களைத் தலைவர் செய்தார்கள். இருப்பினும் அவரால் முடியாத ஒன்றை அவரை இழந்த ஆற்றவொண்ணா துயரத்தில் நான் கேட்டேன். அது,

*"ஆண்டாண்டு காலமாய் எமை ஆண்ட தலைவா*
*மீளாத் துயிலினின்றும் மீண்டு வா*
*மீண்டும் எமை ஆளவா"*

*அன்புடன்*

**விஸ்வநாதன் சாந்தகுமார்**
*கௌரவ அமைச்சரின் இணைப்பதிகாரி*
*இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு.*
*41, கெட்டம்பே, பேராதெனிய.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நெஞ்சுரமிக்க நிலையான தலைவர்

# சௌமியமூர்த்தி தொண்டமான்



இலங்கை இந்திய சமுதாயப் பேரவையின் உபதலைவர்களில் ஒருவர் என்ற முறையில் அமரர் தொண்டமான் அவர்களோடு மிகவும் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. இதனைப் பெரும் பாக்கியமாகவே நான் மதிக்கின்றேன்.

எனது வணக்கத்திற்கும், மதிப்பிற்கும் என்றுமே உரித்தான அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் நாடறிந்த, நெஞ்சுரமிக்க ஒப்பற்ற மாமனிதர். ஆம், உலகமறிந்த ஒரு தலைவர்.

இந்த உண்மையை அவரின் இறுதிநாள் நிகழ்ச்சி எடுத்துக் காட்டியது. அனைத்து மக்களின் மனங்களிலும் அது சித்திரமாகப் பதிந்துள்ளது.

எல்லா வகையிலும் ஒரு முழுமை பெற்ற தலைவராகவே விளங்கியவர் அமரர் சௌ. தொண்டமான். இலங்கைவாழ் இந்திய சமுதாயத்தின் நலன் கருதி உருவாக்கப்பட்ட இலங்கை இந்திய சமுதாயப் பேரவையின் தலைவராகவிருந்து வழிநடத்தியதோடு ஒவ்வொரு செயற்பாட்டிலும், சேவையிலும் அவர் நேரடியாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

எப்பொழுதும் அவரது சிந்தனை தனது மக்களின் நல்வாழ்விலும், வளத்திலுமே நாட்டங் கொண்டிருந்தது. ஒரு தைரியமிக்க தலைவராகவும், தன்னம்பிக்கையோடு நினைத்தவற்றை நடத்திக் காட்டுவதில் மிக்க ஆர்வம் கொண்ட ஒருவராகவே அவர் உறுதியாக இருந்து உழைத்தவர்.

மேல் மாகாணத்தில் களுத்துறை மாவட்டத்திலுள்ள தோட்டப் பாடசாலைகளில் பணியாற்றிய தொண்டர் ஆசிரியர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் இலங்கை இந்திய சமுதாய பேரவை அன்பளிப்பு வழங்கி அவர்களை ஊக்குவிக்க அமரர் தொண்டமானே வழிகாட்டியாவார்.

அட்டன், பண்டாரவளை மாவட்டத் தோட்டப் பாடசாலைகளில் கல்வி பயின்ற உயர்தர வகுப்பு மாணவ - மாணவிகளுக்கு வழிகாட்டப் பயிற்சி நெறி வகுப்புக்களை இலங்கை இந்திய சமுதாயப் பேரவை தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் தலைமையின் கீழ் சிறப்பாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. அவரது 81வது பிறந்த நாள் விழாவை வெகுவிமரிசையாக இலங்கை இந்திய சமுதாயப் பேரவை கொழும்பு கால்பேஸ் ஹோட்டலில் கொண்டாடி அவரைக் கௌரவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை இந்திய அணிகளுக்கிடையே நடைபெற்ற கிரிக்கட் ஆட்ட வீரர்களையும், இலங்கை அணித் தலைவர் திரு. அர்ஜுன ரணதுங்காவும், இந்தியத் அணித் தலைவர் திரு. அஸாருதீனும் தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்ற விருந்துபசாரத்தின் போது தலைவர் தொண்டமான் அவர்களால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள். மேலும் உலகமறிந்த மலையகத்து மாணிக்கம் சுழற்பந்து வீச்சாளரான திரு. முத்தையா முரளிதரன் 05.08.1998ல் இலங்கை இந்திய சமுதாய பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்ட விருந்துபசாரத்தில் தலைவர் தொண்டமான் அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

இலங்கை இந்திய சமுதாயப் பேரவையைப் பொறுத்தமட்டில் தலைவரின் பிரிவு ஒரு பெரிய இடைவெளியாகவே உள்ளது. அவர் ஆரம்பித்த பணியை நாமும் தொடர்ந்து முடிப்போம். அதுவே நாம் அமரர் தொண்டமான் அவர்களின் ஆத்மா சாந்திக்கு அளிக்கும் மிகப் பெரிய கடப்பாடாகும்.

பெரு. இராதாகிருஷ்ணன்

*(தலைவர், இலங்கை இந்திய சமுதாயப் பேரவை)*

## பிறந்த தினவிழா வரவேற்பின் போது



இந்தியத் தூதுவர் நரேஸ்வரதயாள், தலைவர் தொண்டமான்,
உபதலைவர் பெ. இராதாகிருஷ்ணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்து மாமலை





பேராசிரியர் மா. செ. மூக்கையா
*உபவேந்தர்,*
*கிழக்குப் பல்கலைக்கழகம்,*
*வந்தாறுமூலை, செங்கலடி.*

பெருமதிப்பிற்குரிய சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் எம்மை விட்டுப்பிரிந்து விட்டார் என்பது உண்மையானாலும், அவருடைய அரசியல் பணிகளும், சமூகப் பணிகளும், அவர் வழங்கிய வழிகாட்டல்களும், தலைமைத்துவமும், மனிதாபிமான முறையில் பிரச்சினைகளை அணுகிய பாங்கும் இன்னும் அவரைப் பற்றிய நினைவுகளை எமது உள்ளங்களில் பசுமையாகவே வைத்திருக்கின்றன.

சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களை இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவராக நீண்ட காலமாக நான் அறிந்திருந்த போதிலும் கடந்த 20 வருடங்களாக அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தமையினை ஒரு பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன். தொழிலாளர் வர்க்கத்தின் வழிகாட்டியாகத் திகழ்ந்த அவர் தன்னை ஒரு சராசரி மனிதனாகச் சிந்திக்காது, தனது குடும்பம், தனது சொத்து என்ற எண்ணங்களுக்கு அப்பால் வாழ்க்கையின் பல துறைகளிலும் வஞ்சிக்கப்பட்ட ஒரு சமூகத்தின் எழுச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.

பெருந்தோட்ட உரிமையாளராக, துரைத்தன வாழ்க்கையில் அவரைக் காலம் உருவாக்கியிருந்த போதிலும் புத்தர் பெருமானைப் போன்று சுக போகங்களைத் துறந்து, உலகில் துன்பத்தில் வாடும் சாராரைப் பற்றிச் சிந்திக்கக் கூடிய பக்குவத்தினை இளம் பிராயத்திலேயே பெற்றுக்கொண்டது தான் இறைவன் அவருக்களித்த வரம். தான் பெற்ற வரத்தினை தனது வாழ்க்கையுடன் இறுகப் பிணைத்துக் கொண்டார் அவர்.

அவரது தொழிற் சங்க அரசியல் வாழ்க்கையின் முதல் நாற்பதாண்டுகள் அவரது மக்களான தோட்டத் தொழிலாளர்கள் இழந்திருந்த அடிப்படை உரிமைகளை மீண்டும் பெற்றெடுப் பதிலேயே கழிந்தன. 1948 முதல் 1977 ஆம் ஆண்டு வரை அவர் மேற்கொண்ட போராட்டங்கள் தான் அடுத்து வந்த 22 வருடங்களில் மலையகத் தமிழ் மக்களுக்குப் படிப்படியாக அரசியல் உட்பட பல்வேறு துறைகளிலும் எழுச்சிக்கான நம்பிக்கை ஒளியினை ஊட்டின.

அரசியலில் அடிப்படை உரிமைகளையே இழந்திருந்த மக்கள் கூட்டத்தினை, பல சக்திகளும் பொறுப்புடன் கவனிக்க வேண்டிய ஒரு நிலை இன்று உருவாகியுள்ளது. பிரதான அரசியல் கட்சிகள் மலையக மக்களின் அரசியல் ஆதரவினை வேண்டி நிற்பதற்கான அடித்தளம் உருவாக்கப்பட்டுள் ளமையினை அச்சமூகத்தின் அங்கத்தவர்களில் ஒருவன் என்ற முறையில் நன்றியுணர்வுடன் நினைவு கூருகின்றேன்.

தன்னை ஒரு தொழிற் சங்கவாதி, தொழிலாளர்களுக்காகப் போராடுபவர் என ஒரு புறத்தில் அவர் இனங்காட்டிக் கொண்டாலும்,

## தும்பைப்பூ வெண்பாவில் தொண்டமான்.......

*ஈழத் தமிழரோடு தோட்டத்தொழிலாளரெல்லாம்*
*வாழத்தன் வாழ்வை வகுத்தளிக்கும் - யாழொத்த*
*தொண்டர்மான் தொண்டமான் என்றுலகம் போற்றவளர்*
*தண்டமிழ்மான் வாழ்க தழைத்து.*

*– பாவலரேறு ச. பாலசுந்தரனார் – தஞ்சை.*

*குமாரவேல் பிள்ளை குலக்கொழுந்து பண்பில்*
*இமயம்! எழுஞாயி றேபோல் - நமரானவர்*
*எண்பது காணுதிரு தொண்டமான் நூறுதாண்டி*
*திண்மையொடு வாழ்க செழித்து.*

*– கவியோகி பேகன், சென்னை–24.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத் தமிழ் மக்கள் அரசியலில் மாத்திரமன்றி சமூக, பொருளாதார, கல்வி வளர்ச்சிகளிலும் ஓரங்கட்டி விடப்பட்டனர் என்பதனை அசட்டை செய்யவில்லை. அதற்காக அவர்களின் அனைத்துத் துறைசார் வளர்ச்சியினையும் தனது அரசியல் நிரலில் இணைத்து அவர் செயலாற்றியமைக்கு வரலாறு சான்று பகரும்.

தொழிற் சங்கம், மலையகம் என தான் ஏற்படுத்திக் கொண்ட அரசியல் வியூகத்தின் அடுத்த வட்டத்தில் இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் யாவரதும் நலன்களையும் மனதிற் கொண்டு குறிப்பாகக் கடந்த ஒன்றரை தசாப்தங்களில் அவர் செய்த பணிகளும், மேற்கொண்ட அஞ்சா நெஞ்சத்துடனான செயல்களும் தேசிய எல்லைக்குள் மாத்திரமன்றி அவ்வெல்லைகளைக் கடந்து பல மட்டங்களிலும் போற்றப்படுகின்றன என்பதற்கும் சான்றாதாரங்கள் பல உள்ளன.

அவருடைய தலைமைத்துவத்தில் விஸ் தரிக்கப்பட்ட அடுத்த வட்டம் தேசியத்துடன் இனங்காணப்பட்டது. மத்திய அமைச்சராக அவர் ஆற்றிய பணிகள் செயல் வீரர் என்ற அடையா ளத்தினைப் பல்லின மக்கள் மத்தியிலும் ஏற்படுத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அவரது அடுத்த வட்டம் சர்வதேசியத்தை நோக்கி விரிகின்றது. தொழிற் சங்கத்தில் ஆற்றிய போற்றத்தகு பணிகள் அவரைச் சர்வதேச தொழிற் சமூகங்களினதும், உயர்மட்ட சர்வதேச நிறு வனங்களினதும், பார்வையில் போற்றத்தகு தகைமை கொண்டவராக அங்கீகாரம் வழங்க வழிவகுத்தன. கிழக்குத் திசையில் யப்பான், நியூசிலாந்து முதல் மேற்கில் ஐக்கிய அமெரிக்கா, பிரேசில் வரை ஐரோப்பிய, ஆபிரிக்க நாடுகள் உட்பட்ட பல நாடு களிலும் இம்மாமனிதரது புகழ் பரவியுள்ளமைக்குப் பல்வேறு சான்றுகளை நேரில் பார்த்தும், கேட்டும் அறிந்திருக்கின்றேன்.

மலையகத்தின் மலை போல மண்ணிலே காலூன்றி சர்வதேசியம் என்ற வானத்தை நோக்கி அகன்று விரிந்து நீண்ட மாமனிதர் அவர். இவ்வாறான ஒரு மாமனிதரது அறிமுகம், நீண்டகால நட்பு, உறவு, இணைந்து பணியாற்றிய அனுபவங்கள், அவ்வப்போது பெற்ற வழிகாட்டல்கள் (கண்டிப்புக்களும் இடையிடையே) எனது வாழ்வில் எனக்குக் கிடைத்த அரிய பெரும் வாய்ப்புக்களே.

உடலளவில் எம்மைவிட்டு மறைந்தாலும் எமது பெருமதிப்பிற்குரிய சௌமியமூர்த்தி தொண்டமான், என் உள்ளத்தில் பசுமையான நினைவுகளுடன் வீற்றிருப்பதே நான் அன்றும் இன்றும் கொண்டுள்ள பலம்.

அவர் புகழ், மலையகத் தமிழ் மக்கள், இலங்கையின் பெருந்தோட்டத் தொழிலாளர், இலங்கையின் தொழிற் சங்க வரலாறு, இலங்கையின் சனநாயக மரபுகள் ஆகிய அனைத்துடனும் காலம்காலமாக நினைவு கூறப்படப் போகின்றது என்பதில் ஐயமில்லை.

*முத்துவிழா நாயகனாம் முதறிஞன் தொண்டமான்*
*வித்தகனை வாழ்த்தி வணங்கிடுவோம் - உத்தமனே!*
*பல்லாண்டு வாழ்க! பலவளமும் பெற்றிடுக!*
*எல்லோரும் போற்ற இனிது.*

***– புலவர் தணிகை உலகநாதன் கொளத்தூர் சென்னை –99.***

*கண்டமான் பற்பல! கன்னித் தமிழ்மானாம்*
*தொண்டமான் போல்மானும் தோன்றிடுமோ? - உண்டமான்*
*எல்லாம் கவரிமான் என்றாமோ? கல்விமான்*
*நல்லார் புகழ்வாழ்க நன்கு.*

***– முனைவர் புலவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிலம் பயனுற வாழ்வதற்கே?



தெ. ஈஸ்வரன்
*மொரிஷியஸ் நாட்டுக்கான*
*இலங்கைத் தூதுவர்.*



மகாகவி பாரதி அன்னை பராசக்தியிடம் வேண்டினான். காணிநிலம் கேட்டான். தூணில் அழகியதாய் நன்மாடங்கள் கேட்டான். காணி நிலத்திடையே ஓர் மாளிகை கட்டித்தர வேண்டும் என்று கேட்டான். இன்னும் பலப்பலவும் சக்தியிடம் கேட்டான். கடைசியிலே அவன் சொன்னான், "பராசக்தி தாயே! காளி, எனக்கு நீ வல்லமை தரவேண்டும். ஏன் வல்லமை என்றா கேட்கிறாய்? நான் இந்த மானிலம் பயனுற வாழவேண்டுமம்மா" என்று முடித்தான். பாரதி சொல்லுவான் "அம்மா மற்றவர்கள் சோறு நிதம்தின்று, சின்னஞ்சிறு கதைகள் பேசி, பிறர்வாட பல செயல்கள் செய்து கடைசியில் மூப்பெய்து மடிந்து போகிறார்கள். பராசக்தி! இந்த வேடிக்கை மனிதரைப்போல நானும் விழவேண்டுமா?" என்று கேட்டான். இல்லை இல்லை இல்லை என்று அடித்துச் சொல்லியது அவன் மனம்.

பாரதியார் சொன்னதுபோல் வல்லமையுடன் இந்த மானிலம் பயனுற வாழ்ந்தவர்களை விரல் விட்டு எண்ணலாம்.

தலைவன் என்று பெயர் பெற்றவர்கள் பலர். ஆனால் தலைவர் தொண்டமானைப் போல் வாழ்ந்தவர்கள் ஒரு சிலர்.

நாமக்கல் கவிஞர் தலைவர் தொண்டமானைப் பற்றிப் பாடிய பாட்டு இது.

*அன் பொழுகும் திருவுருவே,*
*அருள் அமரம் ஆசனமே,*
*துன்பமுற்றோர் துணைக் கரமே,*
*துயர் நீக்கும் தூதுவனே!*
*இன்ப மெல்லாம் பிறக்குதவி*
*இன்னலெல்லாம் தாங்கி நிற்கும்*
*மென் மனத்தும் பெருந்தகையே!*
*மேன்மை யுற வாழ்த்துகிறேன்!*

இந்த பாடலின் ஒவ்வொரு சொல்லும் கோடிபெறும். தலைவரின் சரித்திரம் இந்த ஒரு பாடலில் சொல்லப்பட்டிருக்கின்றது.

அமரர் தொண்டமான் அவர்களின் உள்ளத்தில் அன்பும் அருளும் எப்பொழுதும் பொங்கி வழிந்து கொண்டேயிருந்தது என்பது மறுக்கமுடியாத உண்மை. தன் இனத்தவர் மதுவினால் மங்கிப்போன போதும், சிந்தனையற்ற பலசெயல்களில் ஈடுபட்டபோதும், தவறுகள் செய்து பிடிப்பட்டபோதும், அடிப்பட்டபோதும், குற்றவாளிக் கூண்டில் ஏற்பட்ட போதும் அவர்களுக்காகப் பேசியது தலைவர் தொண்டமான் மாத்திரமே! அவர்கள் செய்த குற்றமெல்லாம் மறந்து அவர்களுக்குக் கைகொடுத்து உதவியது தலைவர் தொண்டமான் தானே! உடம்பெல்லாம் அன்பு நிறைந்திருந்தால் தானே இப்படி தன் மக்களுக்காக பிணைகொடுக்க முடியும். ஒன்றா, இரண்டா ஆயிரம் சந்தர்ப்பங்களில் இது நடந்தது.

*வண்டமிழர் வாழ்வுயர வாழ்வினை ஈந்தவர்*
*தொண்டமான் பேர்கொண்ட தூயவர் - தொண்டினால்*
*மக்கள்தம் நெஞ்சில் மாண்புறத் தங்கியே*
*எக்காலும் வாழ்வார் இனிது.*
*— கவிஞர் நெ. அ. பூபதி சைதை, சென்னை – 15.*

*தரணி புகழும் தலைவன், அறிஞன்,*
*பரணி படைத்தபோர் வீரன் - முரணிலாத்*
*தொண்டுடையோன், நல்ல துணிவுடையோன் மெய்க்கீர்த்தித்*
*தொண்டமான் வாழ்க தழைத்து.*
*— புலவர் பி. சி. கணேசன், கலைஞர் கருணாநிதி நகர், சென்னை – 78.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய வம்சாவளி மக்கள் துன்பமுற்ற போதெல்லாம் துணைக்கரமாய் நின்றது அவர்தானே! ''தோட்டக்காட்டான்'' என்று இழிவுபடுத்திச் சொல்லப்பட்ட அந்தச் சமூகத்திற்குத் துயர்நீக்கும் தூதுவனாகத் தன்தலை கொடுக்க முன்வந்தது இந்தத் தலைவன் தானே! எடுத்துச் சொல்லப் போனால் புத்தகம் ஒன்றல்லவா எழுத வேண்டும். கட்டுரையில் இவன் புகழை எப்படிப்பாட முடியும்? ''என் மக்கள் அவர்கள், என் உதிரம், என் உயிர்'' என்று இன்று யாரே சொல்லுவார்?

தன் மக்களின் உரிமையை நிலை நாட்டுவதற்காக ஒருநாள் தோட்ட உரிமையாளர்களுடன் போர் தொடுத்தான் தலைவன். வேலை நிறுத்தம் என்ற கொடிபிடித்தான். வருவதும் வரட்டும் வெற்றி நமதே என்று முழுங்கினான். நாட்கள் கடந்தன. வாரங்கள் உருண்டோடின. ''சலிக்காதீர்கள் உண்மை நம்பக்கம் இன்னும் பொறுங்கள்'' என்றான் மக்கள் கூட்டம் மாபெரும் தலைவனின் வார்த்தைகளை மதித்து வயிற்றை ஒடுக்கி காத்திருந்தது. மாதமும் பிறந்தது. எதுவும் நடக்கவில்லை. பால்கேட்டு குழந்தைகள் அழுதன. அடுப்படியில் பூனை உறங்கியது. பசியினால் வாடினோர் தன்னைப்பார்க்க வந்தபோது நெஞ்சம் பதைபதைத்தான். ''நூற்றுக்கணக்கான மக்கள் என் வார்த்தையினாலன்றோ உணவில்லாமல் தவிக்கின்றார்கள். இவர்களுக்கு உணவு வேண்டும். உண்மை வெல்ல வேண்டும். நாளை இவர்கள் குரல் மதிக்கப்பட வேண்டும். காலினால் மிதிக்கப்படுகின்ற சருகுகளல்ல என் மக்கள் கூட்டம். எப்படி இந்தப் போராட்டத்தை எடுத்துச் செல்வது'' என்று திணறினான். இன்னல் எல்லாம் தான் தாங்கி தனித்து நின்றான்.

வழி ஒன்று பிறந்தது. தனது சொந்த தோட்டத்தை அடகு வைத்தான். வங்கியிலே பணம் எடுத்தான். பகிர்ந்து கொடுத்தான். தலைவனைக் காக்க தொண்டர் கூட்டம் பணம் கொடுப்பர். இது கேள்விப்பட்ட கதை. இங்கோ ஒன்றல்ல இரண்டல்ல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் பசியாறத் தனது சொந்தத்தோட்டத்தை அடகு வைத்த அமரர் தொண்டமானை எங்கு காண்போம் இனி? நாமக்கல்லார் ''இன்பமெல்லாம் பிறர்க்குதவி இன்னலெல்லாம் தாங்கி நிற்கும் மென்மனத்துப் பெருந்தகையே'' என்று பாடியது சாலப் பொருத்தமன்றோ?

''என் மக்களுக்கு உரிமை வேண்டும். அவர்கள் ரத்தத்தைத் தேயிலைச் செடிக்குத் தண்ணீராக ஊற்றி வளர்த்தவர்கள். அடிமைத் தளையிலிருந்து விடுபட்டு ஆளும் வர்க்கம் மதிக்கு மனிதனாக வாழ வேண்டும்'' என்று 1930களிலேயே கனவுகாண முற்பட்டார். இந்த இலட்சியத்தை நோக்கியே அல்லும் பகலும் இடையறாது பாடுபட்டார். அவரது கனவைக் கேட்டுப் பலர் சிரித்தனர். அவர் அசந்து விடவில்லை. இன்னும் பலர் ''திருப்பியனுப்பப்பட வேண்டிய கூட்டத்திற்கு என்ன உரிமை வேண்டிக்கிடக்கிறது'' கூலிவேலைக்கு கூட்டிவரப்பட்டவன் ஒட்டுரிமை கேட்பது கண்டறியாத ஒன்று'' என்று வசைபாடினர். எங்கள் தங்கத்தலைவன் தன்னம்பிக்கை இழக்கவில்லை. தன் மக்களுக்காகத் தினமும் பேசினான். வாரங்கள் தோறும் மேடை ஏறினான். மாதங்கள் தோறும் பெரும் தலைவர்களைச் சந்தித்தான். வருடங்கள் தோறும் சர்வதேச அரங்குகளில் குரல் எழுப்பினான். அவன் கனவு நனவானது. ஆனால் அந்தோ அவன் வாழ்க்கை கனவாகிவிட்டது இன்று. ஆனாலும் அவரின் நினைவு என்றும் மக்களின் இதயங்களில் வாழும்.

*தோட்டத் தொழிலாளர் துன்பம் துடைத்தமகன்*
*பாட்டாளி மக்களுளப் பங்காளி! - ஏட்டில்*
*இளஞ்செழியன் வார்க்கும் இனியமலர்த் தேனாய்*
*வளஞ்சேர்க்க வந்த வனப்பு.*

*– புலவர் அருணா பொன்னுசாமி, கரூர் – 2.*

*ஏழாம் அகவையில் ஈழம் அடைந்தங்கே*
*பாழாம் தமிழன் எனப்பதைத்து - வீழா*
*அடிப்படை ஆங்கமைத்தே*
*துடித்தெழுந்தோன் தொண்டமான் காண்.*

*– புலவர் அரங்க. நாராயணசாமி துரையூர், திருச்சி மாவட்டம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவனாய் நின்ற துணைவனே



# தொண்டமான்



- கலாபூஷணம் தமிழோவியன் -

தோட்ட முதலாளியின் மைந்தனாய் பிறந்தவர்
தொண்டமான் என்ற துணிவுடைய இளைஞர் !
தோட்டத் தொழிலாளர் நல்வாழ்வு பெற்றிட
தொண்டாற்ற வல்ல தலைவன் தானென ;
நாட்டார் அறிந்திட நாளெல்லாம் உழைத்த
நாயகன் சௌமிய மூர்த்தியின் பெருமையை
பாட்டாய் முழங்கியே பாட்டாளி வர்க்கம்
பயன்பெற்ற நிலைகளைப் பாடுங்கள் தோழர்காள் !

***

மாட்டுப் பட்டி போன்ற லயத்துள் வாழ்வோர்,
மனைகள் அமைத்து மகிழ்ந்து, வாழ்ந்திட
தோட்டங்கள் தோறும் அரசின் திட்டத்தை
தொடர்ந்து நடைமுறைப்படுத்திடச் சொன்னவர் !
நாட்டில் வெளிவரும் நாளேடுகள் அனைத்தும்
நடமாடும் அமைச்சராம் தொண்டமான் பற்றியே,
தீட்டிய செய்திகளோடு அத்தீரனின் படத்தையே
தினமும் தாங்கியே வந்ததை அறிவோம் !

***

சொத்தையும் நிலத்தையும் பறித்திட்ட போதும்,
சோர்ந்து மனமும் தளர்ந்து விடாமல்;
எத்தருக்கஞ்சியே இடங் கொடுத்திடாமல்;
எப்போதும் தோட்டமக்களை அணி திரட்டியே;
எடுத்த பணியைத் தொடுத்து முடித்திட்ட
ஏந்தல் தொண்டமானும் இயற்றிய பணியை;
தொடுத்துக் காட்டியே கவிதைத் தோரணங் கட்டுங்கள் !
தொழிலாள வர்க்கத்தின் தோழனைப் பாடுங்கள் !

***

இலங்கையில் வாழும் எல்லா இனத்தாரும்
இரவும் பகலும் இயம்பியதோர் நாமம்
கலங்கா நெஞ்சன் "தொண்டமான்!" - என்பதை
கருத்திற் கொண்டு கணித்துப் பார்த்தால்;
காலத்தை தன் வசமாக்கி விந்தைகள் செய்த,
கவலையே இல்லாத தலைவரும் இவரே !
காலந் தவறாமல் விழாவிலும், கூட்டத்திலும்
கலந்து கொண்டு காட்சியளித்தவரும் இவரே !

***

நாடாளு மன்றத்தின் உறுப்பினராகவும், பின்னர்
நாடறிந்த நல்அமைச்சராகவும் உலா வந்தே,
கேடுகள் சூழ்ந்த போதும் ஒதுங்காமல்,
கேள்விகள் கேட்டே உரிமைகள் மீட்டவர் !
அறப்போராட்டத்தை ஆலய வழிபாட்டின் மூலம்
அறிமுகஞ் செய்து குடியுரிமை, வாக்குரிமையை
மறுப்போர் மனம்மாறி தருக ! - என்றே
மலையகத்தாரைஅணிதிரட்டியே முழங்கிச்செய்தோன்

***

உலகத் தொழிலாளர் அமைப்பில் தொண்டமான் குரல்
உழைக்கும் தோட்டத் தொழிலாள வர்க்கத்தின்
நலத்தை நாடியே ஓங்கி ஒலித்திட,
நன்மைகள் கோரிய மலைநாட்டுத் தலைவனாம்
"தானே தோட்டத் தொழிலாளரின் தலைவன்!" - என
தரணி எங்கும் உலாவும் வந்தோன்.....
தானைத் தளபதி சௌமிய மூர்த்தி - என்னும்
தொண்டமான் என்றதோர் துணைவனாய் நின்றோன் !

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சௌ. தொண்டமான் ஆய்வியல் – ஓர் அறிமுகக் குறிப்பு



*பேராசிரியர் சோ. சந்திரசேகரன்*

*விஞ்ஞான பீடம்*

*கொழும்பு பல்கலைக்கழகம்*

*கொழும்பு.*



அமரர் சௌ. தொண்டமான் அவர்கள் மறைந்து சில மாத காலங்களே சென்றுள்ள நிலையில் அவர் தேசிய ரீதியாகவும் குறிப்பாக மலையக மக்களுக்கும் ஆற்றிய பணி, பங்களிப்பு பற்றிக் காய்தல், உவத்தல் இன்றி ஆராய இது சந்தர்ப்பமன்று. எனினும் அவருடைய இயக்கத்துக்கு எதிரணியில் உள்ளவர்கள் தமது ஊடகங்களில் அவருடைய பங்களிப்பைப் பற்றி விமர்சித்து வருவது குறிப்பிடத்தக்கது. ஆயினும் அவ்வணியினர், அன்னாரின் பணிகள் பற்றிய விமர்சனங்களை அவர் உயிரோடு இருந்த காலத்திலே வெளியிட்டு வந்துள்ளனர். அன்னாரின் பணிகள் பற்றிய பக்கச் சார்பற்ற, அறிவு ரீதியான மதிப்பீடு ஒன்று இன்றைய தேவையாகவும் உள்ளது. இத்தகைய மதிப்பீடானது அன்னாரின் அரசியல் ஆளுமையையும் பங்களிப்பையும் எடைபோடும் நோக்குடன் மட்டுமன்றி, மலையகத் தலைமைத்துவம் எதிர் காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள், கொள்கைகள் பற்றித் தீர்மானிக்க உதவும் நோக்குடன் செய்யப்படல் வேண்டும். அமரர் தொண்டமானின் அணுகு முறைகள், கொள்கைகள் என்பனவும் அவை மலையக மக்களின் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்க்கையில் ஏற்படுத்திய தாக்கங்கள், முன்னேற்றங்கள் என்பனவும் எதிர்காலவியல் நோக்கில் ஆராயப்பட வேண்டியன. அன்னார் பற்றிய ஆய்வுகள் முற்றிலும் அவரைப் பற்றியதாக மட்டும் அமையாது ஒட்டு மொத்தத்தில் 11 – 12 இலட்சம் (எமது மதிப்பீடு) மலையக மக்கள் கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் நடந்து வந்த பாதையையும் அவர்கள் கடந்து வந்த பாதையையும் நன்கு தெளிவுபடுத்தும். அந்த அளவுக்குத் தொண்டமான் அவர்களின் அரசியல் வாழ்க்கை வரலாறும் மலையக மக்களின் அரசியல், சமூக வரலாறும் பின்னிப் பிணைந்து காணப்படுவதை மறுக்க முடியாது.

அமரர் தொண்டமான் பற்றிய ஆய்வுகளில் ஈடுபடுவோர் அவரது அரசியல் வரலாற்றில் பல கட்டங்களை இனங்காண முடியும். இவை தொடர்பற்ற கட்டங்களாக அமையாது சங்கிலித் தொடர்போல ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். நாம் வகுத்துக் கூறும் கால கட்டங்கள் முற்றாகக் கலந்துரையாடித் திருத்தத்துக்குரியவை.

அவையாவன :

1. 1947 ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றி பெற்று 7 உறுப்பினர்கள் பாராளுமன்றம் சென்ற காலம் வரை உள்ள முதலாவது கட்டம்.

2. 1948 இல் குடியுரிமைச் சட்டங்களும் தேர்தல் சட்டங்களும் கொண்டு வரப்பட்டு மலையக இந்திய மக்களின் குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டு சிறிமா – சாஸ்திரி (1964), சிறிமா – இந்திரா காந்தி ஒப்பந்தங்கள் (1970) கைச்சாத்திடப்பட்ட காலம்வரை உள்ள இரண்டாவது கட்டம்.

*தொழிலாளர் வாழ்ந்திடவே தொண்டு புரிந்து*
*பழிநாணும் நற்குணத்தைப் போற்றி – எழிற்றமிழர்*
*நல்வாழ்வைப் பேணி நலம்பெறவே காவலனாய்ப்*
*பல்லாண்டு வாழ்க பரந்து.*

*– கவிஞர் கருவூர் கோ. செல்வம்.*

*முத்துவிழாக் காண்கின்ற மோகனனே! ஈழத்தின்*
*சொத்தான தோட்டத் தொழிலாளர் – வித்தகனே!*
*இத்தரையில் நீயாற்றும் தொண்டுக்கு ஈடுண்டோ?*
*புத்தரைப்போல் வாழிபுக ழோடு.*

*– புலவர் ப. சத்தியபாமா எம். ஏ., பிஎட். கருவூர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. 1970 தொடக்கம் 1977 வரை சுதந்திரக் கட்சி தலைமையில் ஐக்கிய முன்னணி ஆட்சி செய்த காலம் மூன்றாவது கட்டம்.

4. 1977 தொடக்கம் 1994 வரை உள்ள 17 ஆண்டு கால ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்க காலம் நான்காவது கட்டம்.

5. 1994க்குப் பிற்பட்ட பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலம் ஐந்தாவது கட்டம்.

இக்கால கட்டங்கள் முற்றிலும் சரியானவை, தொண்டமான் பற்றிய ஆய்வுநெறியொன்றுக்கு முற்றிலும் பொருத்தமானவை என்பது எமது வாதமல்ல. தொண்டமான் ஆய்வுகளுக்கு உதவக்கூடிய ஓர் ஆலோசனையாக இதனைக் கொண்டு அதனை நன்கு திருத்தி அமைக்கலாம். இவ்வாறான கால கட்டப் பிரிப்பு முறை என்ன அடிப்படையில் செய்யப்பட்டது என்பதை இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும் என்பதால் அதனை இவ்விடத்து விளக்கிச் சொல்ல முற்படவில்லை.

முதலாவது கட்டத்தில், டொனமூர் அரசியல் யாப்பு நடைமுறைப்படுத்தப்பட்ட காலத்தில் அப்போதைய இந்தியத் தமிழர்களை வாக்கா ளர்களாகப் பதிவு செய்வதிலும் உள்ளூராட்சித் தேர்தல்களில் அவர்கள் வாக்களிப்பதிலும் சொத்துக்களை வாங்குவதிலும் சில பல தடைகள் உருவாகிய காலம். இக்கால கட்டத்தில் இந்தியப் பிரதமர் நேரு அவர்கள் இலங்கை வந்து, இங்கு வாழ்ந்த இந்தியர்கள் ஓர் அமைப்பாக ஒன்று சேர்ந்து தமது பிரச்சினைகளையிட்டு இலங்கை அரசுடன் போராட வேண்டும் என்ற முறையில் ஆலோசனை வழங்கினார். இக்காலப் பகுதியில்தான் தொண்டமான் மற்றும் தலைவர்களின் முயற்சியில் இலங்கை இந்திய காங்கிரஸ் (இ. இ. கா.) தொடங்கப்பட்டு குடியுரிமைப் பிரச்சினையில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இக்கால கட்டத்தில் இ. இ. காவினதும் தொண்ட மானினதும் பணிகள் பற்றி ஆங்காங்கு விரிவாக எழுதப்பட்டிருந்தாலும் இக்காலகட்டம் பற்றி விரிவாக ஆராய மேலும் இடமுண்டு. இக்கால கட்டத்தினைப் பொறுத்தவரையில் தொண்டமான் ஆய்வு நெறி எவ்வாறு அமையலாம் என்பதற்கான சில ஆலோசனைகளை நோக்குவோம் :

★ இக்கால கட்டத்தில் இந்தியப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சமூக, பொருளாதார, அரசியல், கல்வி நிலை பற்றிய ஆய்வுகள்.

★ இ. இ. கா. தாபனம் உருவாக வழிவகுத்த சூழ்நிலைகள் பற்றிய ஆய்வுகள்.

★ இ. இ. கா.வின் அமைப்பு, கொள்கை, செயற்பாடுகள் பற்றிய ஆய்வுகள் .

★ இந்திய மக்களின் நிலைமைகள் பற்றிய இந்திய – இலங்கை அரசுகளின் நிலைப்பாடுகள்.

★ டொனமூர் யாப்பின்படி அமைக்கப்பட்ட அரசாங்க சபையில் இந்தியர் பிரதிநிதித்துவமும் இந்தியர் பிரச்சினையும்.

★ இலங்கையின் தேசிய அரசியல் இயக்கங்களின் இந்தியர் பற்றிய நோக்கு.

இங்கு தரப்பட்டுள்ள ஆய்வுப் பரப்புகள் ஒன்றும் புதியவையல்ல. இவை பற்றிய எழுத்துக்கள் ஏற்கனவே பரவலாக உள்ளன. ஆனால் இவ்விடயங்கள் ஒரு புதிய நோக்கிலும் கோணத்திலும் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். அப்புதிய நோக்குகள் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும் :

*தொண்டமான் முத்து சுழலும் விளையாட்டாய்க்*
*கொண்ட குடியுரிமை கொண்டாடும் - மண்டலந்தான்*
*வாராதோ என்று வாயூறும் மக்களுக்குத்*
*தீராதோ தேம்பல் சிறிது.*

— முனைவர் செங்கைப் பொதுவன், பழவந்தாங்கல், சென்னை.

*எண்ணற் கருந்திறலோன் ஏந்தல்நம் தொண்டமான்*
*நுண்ணியோன் நல்லறிஞன், வன்தொண்டன் - மண்ணில்*
*வலங்கொண்ட வெண்ணிலவு, வையக்கோன், வாழ்க*
*நலங்கொண்ட நாயகனாய்த் தான்.*

— திருவான்மியூர் டி. எஸ். பாலு, சென்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ இக்காலப் பகுதியில் இந்திய சமூகத்தின் அணுகுமுறைகளையும் எதிர் நடவடிக்கை களையும் உருவாக்குவதில் தொண்டமானும் இ. இ. கா. வும் எத்தகைய பங்களிப்பை வழங்கினர்?

★ இவ்வணுகுமுறைகளின் எதிர்காலவியல் பரிமாணங்கள் யாவை?

★ இந்தியப் பெருந்தோட்ட சமூகம் இக் காலப் பகுதியில் அடைந்திருந்த விழிப்புணர்வு, போராட்டங்களில் அவர்களின் பங்களிப்பு.

இவற்றுடன் நுணுகி ஆராயப்பட வேண்டிய மற்றொரு ஆய்வுப் பொருளையும் கருத்திற் கொள்ள வேண்டும். இதில் பல அம்சங்கள் உண்டு. முதலாவது குடியுரிமை இழந்ததன் பின்னர் வாக்குரிமையற்ற, அரசியல் பலமற்ற ஒரு சமூகமாக மாறிய மலையகத்தவர்கள் அனேகமாக சகல பிரதான அரசியற் கட்சிகளாலும் கைவிடப்பட்டனர். இவ்விடத்து மலையகத்தில் சிறிய அளவிலேனும் பரவலான சித்தாந்த பாதிப்பை ஏற்படுத்தவல்ல இடதுசாரித் தொழிற் சங்கங்கள் தொடர்ந்து இயங்கி வருவதைக் குறிப்பிட வேண்டும். இவ்விடயங்கள் ஒருபுறம் இருக்க, இவ்வலுவற்ற மக்களுக்கு, அரசியல் இலாபம் ஈட்டிக் கொடுக்க முடியாத ஒரு மக்கள் கூட்டத்துக்கு எத்தகைய பின்புலத்தில் மத்திய வகுப்புப் பின்னணியைக் கொண்ட திரு. தொண்டமான் மற்றும் அவர் காலத்துத் தலைவர்கள் அரசியல் ரீதியாகவும் தொழிற் சங்க ரீதியாகவும் தலைமைத்துவம் தர முன்வந்தனர். மார்க்சிய பாணியில் சொன்னால், எப்போதுமே எதிரும் புதிருமான மத்திய, உயர்தர மற்றும் தொழிலாளர் சமூகத்தினர் சகல உரிமைகளை ஒட்டுமொத்தமாக இழக்க நேரிடும்போது, முரண்பட்ட சமூக வகுப்பினர்கள் ஒன்றிணைந்து போராடும் நிலை மலையகத்தில் ஏற்பட்டதை விளக்குவதற்கான கோட்பாட்டுச் சட்டகம் (Conceptual framework) ஏதேனும் உண்டா? இவை யாவும் ஆய்வுக்குரிய அம்சங்களேயாகும்.

சௌ. தொண்டமான் பற்றிய ஆய்வியலானது அவரது சொந்த வாழ்க்கை பற்றி அமையாது மலையக மக்களின் அரசியல், சமூக, பொருளாதார, கல்வி வரலாறுகளையும் இணைந்த முறையில் அமையும் என்பதால் இதற்கான நிறுவன அமைப்பு ஒன்று தேவைப்படுகின்றது. தொண்டமான் நம்பிக்கை நிதியம் அல்லது மலையக ஆவணக் காப்பகம் போன்ற நிறுவனங்கள் இவற்றை முன்னெடுத்துச் செல்லலாம்.

தொண்டமான் ஆய்வியல் பற்றி இவ் வறிமுகக் குறிப்பு பற்றி மலையகத்தில் பலதரப்பட்டவர்களும் மேலும் சிந்திக்க வேண்டும். அவர்களுடைய சிந்தனைகளையும் கருத்துக்களையும் எனக்கு எழுதலாம். ஆய்வுகளும் ஆராய்ச்சிகளும் இன்றி அபிவிருத்தி ஏற்பட முடியாது என உறுதியாக நம்பப்படும் யுகத்தில் நாம் வாழுகின்றோம். இவ்வகையில் எமது மக்கள், எமது பிரச்சினைகள், எமது இயக்கங்கள், தலைமைத்துவங்கள் என்பன பற்றிய பயனுள்ள ஆய்வுகள் எமது எதிர்கால மேம்பாட்டுக்கான கொள்கைகளையும் நிலைப்பாடு களையும் உருவாக்க உதவும் என்பது எமது நம்பிக்கை.

*ஏழாம் வயதினிலே ஈழத்தை நண்ணியவர்*
*வேழமாய்த் தொண்டாற்றும் வித்தகர் - தாழாத்*
*தொழிலாளர் போற்றுகின்ற தொண்டமான் தூயர்*
*எழிற்றமிழ்போல் வாழ்க இனிது.*

*— புலவர் தமிழ்ப்பித்தன் எம். ஏ., மதுரை.*

*காந்தியைத்தென் னாப்பிரிக்கா கண்டதைப்போல் நல்லிலங்கை*
*ஏந்தியதே சித்தம்மை ஈன்றவனைக் - காந்தியெனக்*
*கண்டித் தொழிலாளர் கண்ட முதல்தலைவன்*
*தொண்டமான் வாழ்க தொடர்ந்து.*

*— புலவர் துரை, தில்லான், திண்டுக்கல்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியவர் – அரியவர்





என். சோமகாந்தன்

பிரசாரக் குழுத் தலைவர்

இலங்கை சின்மய மிஷன், கொழும்பு.

அமரர் தொண்டமான் ஐயாவுக்கும் இலங்கை சின்மய மிஷனுக்கும் உள்ள நெருக்கமான உறவும் தொடர்பும் வெளியில் பலருக்குத் தெரியாது. இரு தசாப்தங்களுக்கும் மேலாகச் சின்மய இயக்கத்தின் செயற்பாடுகளுடன் அவர் பின்னிப் பிணைந்திருந்தார் என்பது அநேகமானவர்களுக்கு ஆச்சரியந்தரும் செய்தியாகும்.

தான் சார்ந்த மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை, வாழ்க்கைத் தரம், கூலி உயர்வு, கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி முதலியவற்றின் மேம்பாட்டுக்காக ஓய்வு ஒழிச்சல் இன்றிப் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் அயராது போராடி, படிப்படியாக உரிமைகளை வென்றெடுத்ததிலும், இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராக முழக்கமிட்டு அவர்களின் அபிலாஷைகளுக்கு வழி கோல வேண்டுமென்பதிலும் அக்கறை செலுத்தியவரான தொண்டமான் ஐயாவுக்கு, ஆன்மீக இயக்கமான சின்மய மிஷனுடன் ஈடுபாடு கொள்வதற்கு நேரம் எங்கிருந்தது? அதற்கான காரணம் என்ன? எனப் பலர் மூக்கின் மேல் விரலை வைத்து ஆச்சரியப்படுவர்!

அவர் பன்முகச் செயற்பாட்டாளர். சொன்னதைச் செய்பவர்! செய்வதையெல்லாம் மேடை போட்டுச் சொல்லிச் சுய விளம்பரம் தேடும் குணமும் அவரிடம் இருந்ததில்லை. 'கடமையைச் செய், பலனை எதிர்பாராதே' என்ற கீதை வாக்கியத்தின் உண்மையில் அவர் மிகவும் திளைத்தவர்.

பகவான் கிருஷ்ண பரமாத்மா குரு சேஷத்திரத்தில் வைத்து அர்ச்சுனனுக்கு உபதேசித்த வாழ்க்கையின் கடமைகளைப் பற்றிய புத்திமதிகள் பல்லாயிரம் ஆண்டுகளாக ஏட்டிலும் அவ்வப்போது உபந்நியாசகர்களின் வாயிலும் மட்டுமே இருந்தன. இந்த உன்னதக் கருத்துக்களை உலக அரங்கில் எடுத்துச்சென்று, மக்களின் உள்ளங்களில் விதைத்த பெருமை, இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற ஆன்ம ஞானியாக விளங்கிய குருதேவர் சுவாமி சின்மயானந்தா அவர்களுக்கேயுரியது. அவரின் ராஜரிஷி போன்ற தோற்றமும் கணீரென்ற குரலில் அளித்த தெளிவான விளக்கங்களும் உலகெங்கும் புதிய சிந்தனையையும் இந்து மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தின.

சுவாமிஜி அவர்கள் 1979ஆம் ஆண்டு தமது முதலாவது விஜயத்தின் போது கொழும்பில் நிகழ்த்திய ஞானயக்ஞத்தில் கலந்து கொண்ட தொண்டமான் அவர்களை, அவரின் உரைகள் வெகுவாக ஈர்த்தன. அடுத்த ஆண்டு சுவாமிஜி கொழும்பில் மட்டுமல்ல, கண்டிக்கும் சென்று அங்கு ஒரு பேருரையை நிகழ்த்தினார். அப்போது ரம்பொடையில் உள்ள தமது இல்லத்துக்கு சுவாமியை அழைத்து, பக்திபூர்வமான வரவேற்பளித்து உபசரித்தார் அமரர் தொண்டமான்.

ரம்பொடையின் ரம்மியமான சூழலும் பசுமை போர்த்த நெடிந்துயர்ந்த மலைகளும் அவற்றின் உச்சியிலிருந்து பொங்கிப் பாயும் அழகு மிகு நீர்வீழ்ச்சிகளும், நுவரெலியா மாவட்டத்தின் இராமாயண இதிகாசத் தொடர்புகளும் அங்கு ஓர்

*இலங்கைத் தமிழரின் இன்னல்கள் நீங்க*
*கலங்கா துழைக்கும் குணத்தோய் – உலகினில்*
*சீரான வாழ்வினிலே எண்பதாண்டு கண்டநீ*
*நூறாண்டு வாழ்க இனிது.*

*– புலவர் ஆ. வே. இராமசாமி வைரிசெட்டிப் பாளையம்.*

*அன்பின் இருப்பாய் அறிவுக் களஞ்சியமாய்*
*இன்பின் பிறப்பாய் எழிலுருவாய் – இன்னலிலாத்*
*தொண்டு புரிகின்ற தூயரவர்! தொண்டமான்*
*தொண்டு வளர்க தொடர்ந்து.*

*– புலவர் பெருந்தகை சீ. ஈ. எஸ். பெருமாள் காஞ்சிபுரம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக நிலையத்தை அமைக்க வேண்டுமென்ற எண்ணத்தைச் சுவாமிகளின் உள்ளத்தில் தோற்றுவித்தன. அதற்கென தமது இல்லத்துக்கு அண்மையிலுள்ள வெவண்டன் மலையின் 10 ஏக்கர் நிலத்தை, இலங்கை சின்மய மிஷன் 1981ல் அரசிடமிருந்து அடக்க விலையில் கொள்வனவு செய்வதற்கு, அமரர் தொண்டமான் அவர்கள் புரிந்த உதவிகளும் ஒத்துழைப்புகளும் வழிகாட்டல்களுமே அச்சாணியாக அமைந்தன. அதனைத் தொடர்ந்து குரு தேவருக்கும் அவருக்குமுள்ள தொடர்புகள் நெருக்கமாக விளங்கின. இலங்கை சின்மய மிஷனை ஊக்கமூட்டி வளர்ப்பதில் அமரர் தொண்டமான் பெரிதும் அக்கறை எடுத்துக் கொண்டார்.

1983 ஆடிக் கலவரம் தமிழர்களுக்கு எதிராகப் பேயாட்டம் புரிந்தது. தமிழர்களின் சமய, கலாசாரச் செயற்பாடுகள் பல ஆண்டுகளாக ஸ்தம்பித்தன. சின்மய மிஷன் செயற்பாடுகளும் முடங்கியிருந்த காலத்தில் சின்மய மிஷன் ரம்பொடையில் கொள்வனவு செய்த காணியை எவரும் அத்துமீறி அபகரிக்காமல் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்தவர் அமரர் தொண்டமான் அவர்களே.

1993ல் குருதேவர் மகாசமாதி எய்தியதை யொட்டி வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் அமரர் தொண்டமான் அவர்கள், "மகாஞானிகள் மறைந்தாலும் அவர்களின் கருத்துக்களும் எண்ணங்களும் அவர்களுடன் மறைவதில்லை. அவை புதிய வீச்சுடன் செயலுருவம் பெறும். மலையகத்தின் உச்சியிலிருந்து ஆன்மீக ஒளி இலங்கை முழுவதும் பரவ வேண்டும் என குருதேவர் திட்டமிட்டிருந்தவாறு அதனை முன்னெடுத்துச் செல்வதே அவருக்கு நாம் செய்யக்கூடிய கைமாறு. அதனை நாம் அனைவரும் சேர்ந்து நிறைவேற்ற வாரீர்" என உறுதியும் நம்பிக்கையும் அளிக்கும் வகையில் அன்று எம்மைத் தூண்டிவிட்டார்.

உலக சின்மய இயக்கத்தின் தற்போதைய ஆன்மீகத் தலைவராக விளங்கும் சுவாமி தேஜோமயானந்தா அவர்களுடன் சின்மய மிஷன் தலைவர் தெ. ஈஸ்வரன், செயலாளர் கே. வி. சோமசுந்தரம், நான் மற்றும் சில உறுப்பினர்கள் 1996 நவம்பர் மாதத்தில் ஒரு தினம் வெவண்டன் மலையைத் தரிசிப்பதற்கும், அங்கு ஆஞ்சநேயர் ஆலயம் அமைப்பது பற்றி தொண்டமான் அவர்களுடன் கலந்துரையாடு வதற்குமாக அவரின் இல்லத்திற்குச் சென்றிருந்தோம்.

வாழை, தென்னங்குருத்துகளாலான தோரணங்கள், பூச்சரங்கள் என வழியெங்கும் அலங்கரித்து, வாசலில் பூரணகும்பத்துடன் உற்சாகமும் பக்தியும் பரவி நிறக மலர்ந்த முகத்துடன் குருஜி அவர்களுக்கு வரவேற்பளித்தார். பாராளுமன்ற உறுப்பினர்கள் இராஜரட்ணம், சதாசிவம் அப்போதைய அம்பேகமுவ பிரதேச சபைத் தலைவரும், இப்போது மத்திய மாகாண தமிழ் கல்வி, இந்து கலாசார, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமாக விளங்கும் திரு.வீ. இராதாகிருஷ்ணன் முதலியோர் ஐயாவின் இல்லத்தில் நடந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இப்போது இருப்பது போல ஆஞ்சநேயர் ஆலயத்துக்குச் செல்வதற்கு அப்போது பாதை இருக்கவில்லை. வழுக்கலானதும் செங்குத் தானதுமான ஒற்றையடிப்பாதை ஒன்றினூடாக நடந்து சென்று தொலைவில் நின்றுதான் மலையைப் பார்க்க முடியும். குருஜியையும் கூட்டிக்கொண்டு அந்த ஒற்றையடிப் பாதையால் விறுவிறுவென தொண்டமான் அவர்கள் ஏறிச் சென்று விட்டார். அந்த வயதிலும் என்ன வைராக்கியம் என்ன கம்பீரம், எத்தனை சுறுசுறுப்பு! தட்டுத்தடுமாறி அவரைத் தொடர்ந்த நாங்கள் பாதி வழியில் களைப்புற்று நின்று விட்டோம்.

விருந்துபசரணையின் பின் நடந்த கலந்துரையாடலின் போது திட்டத்தை வெகுவாகப் பாராட்டிய அவர் அப்பகுதி மக்களின் ஆன்மீக எழுச்சிக்கு மட்டுமல்ல அவர்களின் பொருளாதார மேம்பாடு, தொழில் வாய்ப்பு முதலியவற்றுக்கும் இவ்வாலயத்தினால் பெரும் பயன்கிட்டும் எனக் கூறி, ஆலயத்துக்கான வரைபடம் முதலியவற்றை விரைவாகத் தயாரித்து வேலைகளை ஆரம்பிக்குமாறு ஊக்கமளித்தார். மலைக்குச் செல்வதற்கான தார் ரோடு அமைக்கும் பணியைத் தாமே ஏற்பாடு செய்து தருவதாகப் பொறுப்பு ஏற்றுக்கொண்டார்.

*கருணா கரத்தொண்ட மான்வழியில் தோன்றிக்*
*கருணையொடு மக்கள் தொண்டாற்றும் - கரணியத்தால்*
*பேர்மிகுந்த பட்டமாம் தொண்டமான் என்னும் பேர்*
*பாரடா பாரடா பார்.*

***– பேராசிரியர் முனைவர் இரா. மணியன் மந்தவெளி, சென்னை – 28.***

*தேயிலைத் தோட்டத்துத் தென்றலினைத் தொண்டுக்கோர்*
*வாயிலாய் வாய்த்தசீர் மன்னவனை - நோயிலனாய்*
*எண்பதாண் டான இளைஞனைத் தொண்டமானை*
*வண்ணமழை என்றேநீ வாழ்த்து.*

***– கவிஞர் மன்னர் மன்னன், புதுவை.***

ஆலயத்தின் பூர்வாங்க வேலைகள் நடைபெற்ற காலத்தில், ரம்பொடைக்குச் செல்லும் நாட்களில் நாம் உணவுண்டு களைப்பாறிக் கொள்ளும் இடமாக ஐயாவின் இல்லம் கை கொடுத்தது.

1997ல் கொட்டகலையில் மத்திய மாகாண தமிழ்க் கல்வி, இந்து கலாசார அமைச்சு நடத்திய சாகித்திய விழாவில் நான் பேசுவதாக ஏற்பாடு. முதல் நாள் ஆலய வேலைகளைப் பார்வையிட ரம்பொடை சென்ற நானும் நண்பர் தெ. ஈஸ்வரனும் இரவு நுவரெலியாவில் தங்கிவிட்டோம். என்னை கொட்டகலையில் சேர்த்து விட்டு, அவர் கொழும்பு திரும்புவதாகத் திட்டம். ஆனால் காலை உணவை தம்முடன் சேர்ந்து உண்ண வேண்டுமென முதல் நாளே ஐயா எம்மிடம் கூறியிருந்தார். சாப்பிடும் போது தாமும் கொட்டகலை விழாவுக்குச் செல்வதாயும், தம்முடன் என்னையும் கூட்டிச் செல்வதாகக் கூறி திரு. ஈஸ்வரனின் பாரத்தைக் குறைத்தார். அமரர் தொண்டமான் பகட்டோ, படாடோபமோ இன்றி யதார்த்தத்தைக் கருத்தில் நிறுத்திச் செயலாற்றிய பெரியார் அவர். அவரை அரசியல்வாதி, தொழிற் சங்கவாதி என எண்ணியிருந்த நான் அன்று அவருடன் பயணஞ் செய்தபோது இலக்கியத்தைப் பற்றிக் கூறிய கருத்துக்கள் இலக்கியவாதிகளைப் பற்றி அவர் எத்தனையோ விஷயங்களைத் தெரிந்து வைத்திருக்கிறார் என என்னை வியப்படையச் செய்தது.

"இலக்கியம் படைப்பவர்கள் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு எழுதக் கூடாது. நமக்குக் கீழேயுள்ள மக்கள் படும் துன்பங்களைப் பார்த்து அவர்களை உயர்த்துவதற்கு உதவும் வகையில் தமது பேனாக்களைப் பயன்படுத்த வேண்டும்". வெட்டொன்று துண்டு இரண்டு என அவர் கூறும் கருத்துக்கள் பல தடவைகளில் பலரைச் சினமூட்டியுள்ளன. உண்மையைப் புரிந்து கொள்ள முடியாதவர்களுக்கு அது கசக்கும் தானே.!

23.4.1997 அன்று ஆஞ்சநேயர் கோவிலுக் கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்ற போது அமரர் தொண்டமான் அவர்களின் முகத்தில் பூரிப்பும் பிரகாசமும் பொங்கிப் பிரவகித்தன. அடிக்கல்லை நாட்டிவிட்டு அங்கு உரையாற்றுகையில் "சகல சித்திகளையும் தரவல்லவரான ஸ்ரீ ஆஞ்சநேயரின் ஆலயம் இப்பகுதியில் அமைவது இங்குள்ளவர்கள் செய்த புண்ணியத்தின் பலாபலனாகும். விரைவில் ஆலயக் கட்டட வேலைகளை முடித்து, பெருமானை எழுந்தருளச் செய்துவிட்டால் எம்மைப் பீடித்திருந்த கஷ்டங்கள் எல்லாம் எம்மைவிட்டு ஓடி மறைந்து விடும்" என உணர்ச்சிவசமாகக் கூறினார்.

தொண்டமான் ஐயா அவர்கள் ஸ்ரீ ஆஞ்சநேயர் பெருமான் மீதும், சின்மய மிஷன் மீதும் எத்தனை பக்தியும் பற்றும் கொண்டிருந்தா ரென்பதற்குச் சான்றாக, அவர் அமரர் ஆவதற்கு முன்பு இறுதியாகக் கலந்து கொண்ட பொது வைபவம் சுவாமி தேஜோமயானந்தா அவர்களுக்கு 24.10.1999 அன்று ஆஞ்சநேயர் ஆலயத்தில் அளிக்கப் பெற்ற வரவேற்புக் கூட்டம் என்பதைக் குறிப்பிடலாம். 18 அடி உயரமான ஆஞ்சநேயப் பெருமானையும் 20 அடி உயரத்துக்கு எழுந்து விட்ட ஆலயச் சுவர்களையும், பார்த்த பூரிப்பில் அங்கு திரண்டிருந்த பல்லாயிரம் மக்கள் முன்பு அவர் உறுதியாகப் பிரகடனஞ் செய்தார்.

"மலையக மக்கள் மது அருந்துவது போன்ற கெட்ட பழக்கத்தை இனிக் கைவிட வேண்டும். அவர்களை பக்தியுள்ளவர்களாக வாழ வழிகாட்ட ஆஞ்சநேயராலயம் எழுந்துவிட்டது. பழனி, திருப்பதி போல இந்த ஆலயம் விளங்கப் போகிறது. அங்கு செல்பவர்கள் எல்லோரும் இனி இங்குதான் வருவார்கள். அதனால் இப்பகுதிக்கு அருள் மட்டுமல்ல பொருள்வளமும் செழிக்கும்".

எத்தனை தீட்சண்யமான வார்த்தைகள்!

தமிழினத்தின் விடிவுக்காகவும் அம் மக்களின் உரிமைகளுக்காகவும் அஞ்சா நெஞ்சுடன் உறுதியாகச் செயற்பட்ட மலையகத்தின் மண்டேலா இப்போது எம் மத்தியில் இல்லை.

இலங்கை சின்மய மிஷனும் தமிழ் மக்களும் சுற்றிப் படர்ந்து வளரத் துணை நின்ற கொழு கொம்பு சரிந்து விட்டது!

ஆனால் அவர் தூரதிருஷ்டிமிக்க தலைவர். அதனால், தமது பாசறையில் வளர்ந்த, பல இளந் தளபதிகளை கொழுகொம்பாக வளர்த்துவிட்டுச் சென்றிருக்கிறார். அவர் நாமம் வாழ்க!

*மக்கள் தலைவராம் தொண்டமான் மாண்பெல்லாம்*
*ஒக்க உரைத்தல் எளிதாமோ? - தக்கவிதம்*
*சிக்கல் அறுத்துச் சிறக்கத் தொழிலாளர்*
*பக்கம் புரக்கும் படை.*

*– ஓவியப் பாவலர் மு. வலவன், சென்னை.*

*கடல்சூழ் இலங்கை கவின்பெறச் செய்த*
*தடந்தோள் தமிழர் அடையும் - இடர்நீக்க*
*எண்பதிலும் காந்தியாய் ஏறுநடை போடுகின்ற*
*தொண்டமானின் தொண்டுதான் தொண்டு.*

*– புலவர் நா. இளங்கோ, எம். ஏ. எம். எட் தஞ்சை – 6.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைத் தோட்டத் தொழிலாளர் செங்கொடிச் சங்க பொதுச் செயலாளர் O. A. இராமையா அவர்களின் வாழ்த்துரை



அமரர் கௌரவ. சௌமியமூர்த்தி தொண்டமான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவராகவும், நீண்டகாலமாக அமைச்சராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும், கடந்த சில ஆண்டுகள் இந்திய வம்சாவளிப் பேரணியின் தலைவராகவும் செய்த சேவைகளும், சாதனைகளும் அனைவரும் அறிந்ததே. அரசியல், தொழிற்சங்க, சமூக, கலாச்சார, பொருளாதார ரீதியில் அரசு மற்றும் ஆதிக்க சக்திகளினால் புறக்கணிக்கப்பட்ட, பாகுபாடு காட்டப்பட்ட மலைநாட்டுப் பாட்டாளி வர்க்கத்தினது மேம்பாட்டிற்காக அளப்பரிய சேவையை அமரர் தொண்டமான் செய்தார் என்பது வரலாற்றில் அங்கமாக முத்திரை பதிக்கப்பட்டதாகும்.

மறைந்த அமரர். தொண்டமான் அவர்கள் இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்தின் மாபெரும் தந்தை என்றே கூறவேண்டும். இவர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியோடும், அதன் தொழிற்சங்க இயக்கத்தோடும் தொடர்புகள் வைத்திருந்தார். பொதுக்கோரிக்கைகளை வென்றெடுக்க ஐக்கிய முன்னணிக் கொள்கையை ஆதரித்தார். உதாரணமாக, 1984ம் ஆண்டு சம்பள உயர்வுக் கோரிக்கைப் போராட்டம், அதனைத் தொடர்ந்து நடந்த குடியுரிமைப் போராட்டம் போன்றவைகளை நடத்து வதற்கு முன் செங்கொடிச் சங்கத்தோடும் கலாந்தாலோசித்து ஆதரவைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

குடியுரிமைக்கான அவரது இயக்கத்தை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும், செங்கொடிச் சங்கமும் ஆதரித்தன. சித்தாந்த மற்றும் அரசியல் இருந்தபோதிலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசோடு தொழிலாளர் நலன்களைப் பாதுகாக்கக்கூடிய போரட்டங்களை நாங்கள் ஆதரித்து வந்துள்ளோம். ஐக்கிய முன்னணி கொள்கைகளை அமரர் ஆதரித்ததன் பலனாகவே சம்பள உயர்வுக்கான ஐக்கிய தொழிற்சங்க செயற்பாடும் தோற்றமும் உருவாக ஒரு முக்கிய காரணம் என்பதை இச்சந்தர்ப்பத்தில் நாம் நினைவூட்ட வேண்டும்.

அமரர் தொண்டமான் அவர்களின் இழப்பு இலங்கைத் தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல உலகத் தொரிலாளர் வர்க்கத்துக்குமே ஏற்பட்டுள்ள பாரிய இழப்பாகும். இவரது இழப்பு ஏற்பட்டுள்ள தாக்கத்தைப் பல்வேறு கோணங்களிலிருந்து ஆராயப்பட வேண்டியுள்ளது.

*கண்கண்ட தெய்வம் எனப்போற்றும் நற்றலைவன்*
*பண்கண்ட செய்தொழி லாளர்தம் - புண்ணியன்*
*தொண்டமான் என்றென்றெ பண்டும் வருநாளும்*
*ஒண்புகழே செப்பும்இப் பார்.*

*– பெரும்புலவர் இர. திருஞானசம்பந்தர், சென்னை – 88.*

*தொண்டுமான் ஆகச் சுடர்சௌ மியமூர்த்தி*
*தொண்டமான்! போற்றிப் புகழ்தொழிலர் - தொண்டர்மான்*
*"எண்டிசையும் வாழி!" யெனக் கொண்டாடல் காண்மினோ!*
*கொண்டிசைக்க வந்த நிலா.*

*– கவிஞர் முருகு வண்ணன், பெரம்பூர், சென்னை – 11.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் தலைமைத்துவப் பண்புகள்



பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜா
பேராதனைப் பல்கலைக்கழகம்



## அறிமுகம் !

1913 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30ஆம் திகதி திரு. குமாரவேல் கருப்பையாபிள்ளைக்கும் சித்தம்மைக்கும் அந்தக்கால இராமநாதபுரம் ஜில்லாவில் இந்தக் காலப் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திலுள்ள திருக் கேஸ்டியூருக்குப் பக்கத்திலுள்ள புதூர் என்ற விவசாயக் கிராமத்தில் மைந்தனாகப் பிறந்தவர். அந்த ஊரில் தொண்டமான்கள் படைத்தலைவர்களாகவும் தளபதிகளாகவும் சிலசமயம் விளங்கினார்கள். இவரது தந்தையார் திரு. குமாரவேல் ஆரம்பத்தில் கம்பளைப் பகுதியில் காப்பித்தோட்டம் ஒன்றில் நாள் ஒன்றுக்குப் 13 சதம் சம்பளம் பெற்று, தோட்டத் தொழிலாளியாக வாழ்க்கையை ஆரம்பித்தவர். பின்னர் இலங்கை யிலேயே சகல மதிப்பும் மரியாதையும் பெற்ற தோட்டத் தொழிலாளியாக இருந்து ஒரு கோடீஸ்வரராக மாறியவராவார்.[2] இவர் கொஞ்சம் கொஞ்சமாகச் சேகரித்து மிச்சம் பிடித்து 1909 ஆம் ஆண்டில் வெவண்டன் என்ற தோட்டத்தை வாங்கினார். திருக் கேஸ்டியூரில் சௌமிய நாராயணப் பெருமாள் திருவருளாலே குழந்தை பிறந்ததால் அக்குழந்தைக்கு சௌமியமூர்த்தி என்ற பெயர் சூட்டப்பட்டது. திரு. எஸ். டி. சிவநாயகம் குறிப்பிட்டது போல் பிற்காலத்தில் தொண்டமானிடம் காணப்படுகின்ற வீரதீரத்துக்கும் சமயோசித புத்திக்கும் நெருக்கடியான கட்டத்தில் துணிச்சலுடன் பொருத்தமான பதில் கொடுத்து நிலைமையை சமாளித்துவிடும் ஆற்றலுக்கும் வித்து அவருடைய அன்னையாரான சித்தம்மைக் கருவிலிருந்தே உருப்பெற்றது.[3] தனது ஏழாவது வயதில் தந்தையை முதன் முதலாகக் கண்ட சௌமியமூர்த்தி கல்விகற்பதில் தனக்கு உள்ள ஆசையை வெளிப்படுத்தினார். அதற்கு இணங்க சிறுவனை இலங்கைக்கு அழைத்துச் சென்று அங்கு நல்ல கல்வி புகட்டத் தந்தை விரும்பினார். அதனால் 11 வயதில் சௌமியமூர்த்தி இலங்கைக்கு வந்தார். முதலில் தோட்டப் பள்ளியில் கற்றபின் தனது மகனுக்கு ஆங்கிலக் கல்வி புகட்ட விரும்பி 14ஆம் வயதில் அவரைக் கம்பளை ஆன்ட்ரூஸ் கல்லூரியில் சேர்த்தார். திருமணம் ஆகி இலங்கைக்கு வந்த பின்னர்தான் அவருக்கு வம்சப் பெயரான தொண்டமான் என்ற பெயரை வைத்துக் கொண்டார்.[4]

இந்தப் பின்னணியில் 1939ஆம் ஆண்டில் இலங்கையின் அரச சபையில் ஒரு முக்கியமான சம்பவம் இடம்பெற்றது. "நீண்ட காலம் தூபம் போட்டு வளர்க்கப்பட்டு வந்த தமிழ் இனத் துவேசத்தின் முதல் வெற்றியின் வெளிப்பாடாக பிரதிபலித்தது."[5] அதாவது 1934 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாந் திகதிக்கு பிறகு அரசாங்க சேவைக்கு நியமிக்கப்பட்ட இந்திய வம்சாவளியினர் அனைவரையும் நாடு கடத்த வேண்டும் என்ற தீர்மானமாகும். இலங்கை அரச ஊழியர்களாக வேலை பார்த்து வரும் இந்தியர்களில் 10 வருடத்துக்குக் குறைவாகச் சேவையில் இருப்பவர்களை அவர்கள் வகிக்கும் பதவிகளிலிருந்து நீக்கி விட வேண்டும் என்ற தீர்மானம்[6] டீ. எஸ். சேனநாயக்காவினால் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இலங்கையிலிருந்த சங்கங்கள்

*இலங்கைத் தொழிலாளர் இன்னல் உறாமல்*
*கலங்கரை, யாகியே காப்பர் - அலங்கார*
*முத்துவிழாக் காணும் முதிர்ந்த தலைவரை*
*இத்தரையில் போற்றுவோம் ஏற்று.*

**— கவிஞர் உதயை மு. வீரையன், சென்னை – 5.**

*மாட்சிக் குரியர், நற் காட்சிக் கினியரே!*
*ஆட்சி அமைச்சர்; அமுதனையார் - மீட்சி*
*தமிழர் அடையத் தனிப்போர் புரிந்தார்*
*நிமிர்ந்தநடை வேழம் இவர்.*

**— புலவர் கரந்தை கணேசன், சென்னை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை காந்திஜீயிடம் முறையீடு செய்தன. அவர் இலங்கை அரசிடம் பேசி ஒரு முடிவுக்கு வரும்படி ஜவர்கர்லால் நேருவை இலங்கைக்கு அனுப்பி வைத்தார். நேரு பிளவுபட்டுக் கிடந்த இந்தியர்களை ஒன்றுபடுத்தி தோட்டத் தொழிலாளர்களையும் இணைக்கும் வகையில் 1939 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆம் திகதி அதிகாலை இலங்கை இந்தியர் காங்கிரசை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.[7] வி. ஆர். எம். வி. லக்ஸ்மணன் செட்டியார் இதன் முதலாவது தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காங்கிரஸ் துரிதமாகச் செயற்பட்டு மாவட்டக் கமிட்டிகள் உருவாக்கப்பட்டன. கம்பளை மாவட்டக் கமிட்டிக்குத் தொண்டமான் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இக்கம்பளை ஜில்லாக் கமிட்டி இ. இ. காவின் அங்குரார்ப்பண மகாநாட்டை நடத்த முன் வந்தது. இங்கு வரவேற்புச் சபையின் காரியதரிசியாகத் தொண்டமான் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். 1940 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7ஆம் 8ஆம் திகதிகளில் இம்மாநாடு நடைபெற்றது. மாநாட்டின் வரவேற்புச் சொற்பொழிவைத் தொண்டமான் நிகழ்த்தினார். "தொண்டமானுடைய கன்னிப்பேச்சு பல உண்மைகளைத் தெளிவாக்கும் ஒரு ஆழமான பேச்சாக அமைந்தது."[9]

1939ஆம் ஆண்டு தனது 26 ஆவது வயதில் இலங்கை இந்தியக் காங்கிரசை கையேற்று தமது 37 ஆவது வயதில் 1950ல் அதை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்று பெயர் மாற்றம் செய்து 1999ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி மறையும்வரை அந்த ஸ்தாபனத்தை வழிநடத்திவந்த பெருமைக்குரியவர். தனியே மலையக மக்களின் அல்லது தோட்டத் தொழிலாளர்களின் தலைவராக மட்டுமன்றி இலங்கையின் தேசிய அரசியலில் குறிப்பிடக்கூடிய அளவு செல்வாக்குமிக்கவராக அதாவது ஒரு கிங்மேக்கராகவும் விளங்கிய தொண்டமான் அவர்களைப் பலர் வெறுத்தார்கள். வேறுபலர் அவர்களைக் கண்டு பயந்தார்கள். இவ்வாறு மலையக மக்களை வழிநடத்திச் சென்ற தொண்டமானின் தலைமைத்துவப் பண்புகளைப் பற்றியதொரு ஆய்வாகவே இக்கட்டுரை அமைகின்றது.

மக்ஸ்வேபர் என்ற அறிஞர் 1968ல் வெளியிட்ட வசீகரத்துவமும் ஸ்தாபனங்களைக் கட்டியெழுப்புவதும்[10] என்ற நூலில் சட்டப்படி அமைந்த அதிகாரிகளின் வேறுவகைப்பட்டவர்கள் என்று குறிப்பிட்டார். (1) பகுத்தறிவு தலைமையில் எழும் தலைமை. (2) மரபு ரீதியாக எழுச்சியடையும் தலைமை. (3) வசீகரத்துவ அடிப்படையில் எழுச்சியடையும் தலைமை.[11]

இவற்றுள் வசீகரத்துவ தலைமைத்துவம் என்பதை எமது கவனத்துள் எடுப்போம்.

## I

## வசிகரத் தலைமைத்துவத்தின் இயல்பு

வசீகரத்துவம் என்ற பதம் இயற்கையை மீறிய மனித ஆற்றலுக்கு மேம்பட்ட குணாதிசயங்களை உடைய சாதாரண மனிதர்களில் இருந்து வேறுபடுத்தக் கூடிய சில வகையான ஆளுமைப் பண்புகளைக் கொண்ட ஒருவரைக் குறிக்கவே பயன்படுத்தப்படுகிறது. ஆகக் குறைந்தது அருமையாகக் காணப்படும் அதிகாரங்களையும் பண்புகளையும் கொண்ட ஒருவரைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. தெய்வீகப் பரம்பரையில் வந்த அல்லது மற்றவர்களுக்கு முன் உதாரணமாக அமையக் கூடிய குணங்களின் அடிப்படையில் கொண்ட ஒரு தனிப்பட்டவரை ஒரு தலைவராகக் கொள்ளப்படலாம். ஆதிகால சூழ்நிலைக்கு இக்குறிப்பிட்ட தனிமை கொண்ட போதனையாளர்களாக நோய்களைக் குணப்படுத்தக் கூடியவர்களாக சட்டஞானம் உடையவர்கள் எனவும் கொள்ளப்பட்டார்கள். இத்தொடரில் எது மிகவும் முக்கியமானதெனில் வசீகரத்தன்மை கொண்டோர் அவர்களைப் பின்பற்றுவோராக எவ்வாறு மதிக்கப்படுகிறார்கள் என்பதே முக்கியமானது.

*விண்ணைச் சுருட்டி விரலிடுக்கில் வைத்தவராய்*
*மண்ணில் அரசியலில் மார்தட்டும் - புண்ணியர்முன்*
*கண்ணியராய் வாழ்ந்துகாட்டும் காவிய நாயகனாம்*
*தொண்டமானே தூயர் உணர்.*
*– புலவர் பா. வீரமணி பி. லிட்., சென்னை.*

*உண்மை உழைப்பிற்கும் ஓயாத தொண்டிற்கும்*
*எண்ணி உரைக்க எவருண்டு? - மண்மீதில்*
*அண்டித் துயர்துடைக்க அண்ணல் நெறியாளர்*
*தொண்டமான் அன்றியார் சொல்.*
*– சு. இலம்போதரன், சென்னை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசீகரத்தன்மை கொண்டவர்கள்[12] என்பதைத் தீர்மானிக்கும் பெறுமானப்படுத்துவது எதுவெனில் அவர்களைப் பின்பற்றுவோர் வழங்குகின்ற அதிகாரத்தினையே ஆகும். இதுவே வசீகரத்துவம் கொண்டவர்களின் அடையாளம் ஆகும். நிருபணமும் ஆகும். ஆரம்பத்தில் அதிசயம் நிகழ்த்தக் கூடியவர்களாகவும் தமது கதாநாயகர்களைக் கொள்ளக் கூடியவர்களாகவும் அல்லது அத் தலைவர்களில் முழுமையான நம்பிக்கை வைக்கக் கூடியவர்களாகவும் இருந்தனர். ஆனால் வசீகரத்துவம் என்பது உண்மையில் அதுவலிய சட்டப்படி உரிமை கொண்டாடுவதற்கான அடிப்படையாகும். மாறாக வசீகரத்துவ இலக்கை அடைந்தவர்கள் அதனை அங்கீகரித்து அதன் பண்பினைக் கண்டுகொண்டு அதன்படி செயற்பட்டு கடமையாற்றுவதை அடிப்படையாகக் கொண்டதும் உளரீதியாக இந்தப் பண்பினைக் கொண்டவருக்கு முழுமையான தனிப்பட்ட அர்ப்பணிப்பை வழங்குதல். இது நம்பிக்கையீனம் அதீத விருப்பு என்பவற்றால் ஏற்படுவதாகும்.

## II

## தலைவர் தொண்டமானின் வசீகரத்துவ தலைமைத்துவத்தின் இயல்புகள்

வசீகரத்துவம் கொண்ட ஒரு தலைவர் தனது தேசத்துடன் மர்மமான ஒட்டுறவினைக் கொண்டவராகவும் அதனால் அந்தத் தேசத்தின் தலைவிதியைநிர்ணயிப்பவராகவும் மாறுகின்றார். ஆசிய நாடுகளில் அத்தகைய பல தலைவர்கள் இருந்துள்ளனர். மகாத்மா காந்தி, ஜவர்கார்லால்நேரு, முகமட் அலி ஜின்னா, டி. எஸ். சேனநாயக்கா, மாஒ சேதுங், சுகர்னோ இவர்கள் எல்லோரும் ஆட்சியின் கீழ் தமது மக்களுக்கு ஏற்பட்ட அநீதிகளையும் அவமதிப்புக்களையும் உணர வைத்ததோடு அம்மக்களது அபிலாஷைகளின் உருவகங்களாகவும் மாறினர். இந்த வகையில் திரு. தொண்டமான் அவர்களும் தனது மக்களான இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்கள் பட்ட துன்பங்களையும் துயரங்களையும் வெளிக்கொணர்ந்ததோடு அவர்களது அபிலாஷை களை வெளிப்படுத்தும் ஒருவராகவும் மாறினார்.

தலைவர் தொண்டமான் என்ற நூலை எழுதிய திரு. எஸ். டி. சிவநாயகம் அவர்கள் "தலைவர் தொண்டமான் ஒரு அதிசயமான மனிதர், அற்புதமான மனிதர், அளவிட முடியாத மனிதர் அதாவது ஆழமான மனிதர்"[13] என்று குறிப்பிட்டுப் பாராளுமன்றத்தில் அங்கத்தவர்களோடு காரசாரமாகப் பேசி மோதிக் கொள்வார். ஆனால் வெளியே வந்ததும் அவ்வளவு பேரும் தொண்டமானுடைய இரு கரங்களையும் பிடித்துக் கொண்டு 'தொண்டா ப்ளீஸ் டோன்ட் மிஸ் அண்டஸ்ராண்ட் மீ' என்று ஒவ்வொருவராக குழைவார்கள்."[14] என்று குறிப்பிட்டு இத்தகைய வசீகரம் அவருக்கு எப்படி வந்தது? என்ற கேள்விக் குறியை எழுப்புகிறார். மேற் சொன்ன கேள்விக்கு விடை காண்பதாகவே இவ்வாய்வு அமைகின்றது. ஒரு வசீகரத்துவ தலைவனுக்குரிய பண்புகள் எவை: (1) ஆளுமைப் பண்பு (2) முன்உதாரணமாக அமையக்கூடிய குணங்கள் (3) பின்பற்றுவோர் வழங்கும் அங்கீகாரம் (4) அர்ப்பணிப்பு மிக்க பணிவு என்பனவாகும்.

## III

### (i) தொண்டமானின் ஆளுமை

ஒரு ஸ்தாபனத்தைக் கட்டிக் காத்து வளர்ப்பதற்கு அதன் தலைவருக்கு அடிப்படையாக இரண்டு திறமைகள் இருக்க வேண்டும். (அ) ஒழுங்கமைக்கும் திறன் (ஆ) நிர்வாகத்திறன்.

### (ii)

திரு தொண்டமானின் ஒழுங்கமைக்கும் திறன், 1940ஆம் ஆண்டிலேயே இலங்கை இந்தியக் காங்கிரசின் முதலாவது அங்குரார்ப்பண மாநாட்டைப் பொறுப்பேற்று நடத்தியதோடு வெளிப்பட்டது. பின்னர் அவர் தோட்டம் தோட்டமாகச் சென்று தோட்டக்

*நீள்புகழும் குன்றா நிறையுழைப்பும் வேண்டுங்கால்*
*ஆள்வலியும் அன்பின் அரவணைப்பும் - தாள்பணியர்கச்*
*சீர்மைக் குணனும் சிறக்கவுள தொண்டமான்*
*பேர்வாழப் போற்றிப் புகல்.*

*— பெரியார் பெரும்பாவலர் கருவூர் பாரி, கரூர்.*

*முத்துவிழாக் காணுகின்ற முத்தமிழ்ப் பேரறிஞர்*
*தத்துகடல் ஈழத் தமிழ்த்தலைவர் - உத்தமர்*
*தொண்டால் உயர்ந்தே தொழிலாளர் காங்கிரசைக்*
*கண்டவர் தொண்டமான் காண்.*

*— பேராசிரியர் டாக்டர் கரு. நாகராசன், செங்கற்பட்டு.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமிட்டிகளையும் மாவட்டக் கமிட்டிகளையும் மாகாண அமைப்புக்களையும் ஏற்படுத்தினார். பின்னர் அதை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்ற ஆல விருட்சமாக வளர்த்தார். ஒரு லட்சமாக இருந்த அங்கத்தவர் தொகையை நான்கு லட்சமாக அதிகரித்தார்.[15]

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மாதர் காங்கிரஸ், சமூக அபிவிருத்தித்துறை தோட்டச் சேவையாளர் காங்கிரஸ், இலங்கை ஆசிரியர் காங்கிரஸ். காங்கிரஸ் தொழில் நிறுவர், சட்டப்பிரிவு, சர்வதேச உறவுகள் பிரிவு எனப்பல உள்ளமைப்புகள் இ. தொ. கா. வுக்கு உண்டு.

இவ்வளவையும் இயக்குவதற்கென்று அதிகாரிகளையும், சேவகர்களையும் இப்பகுதிகளில் நியமித்து எல்லாவற்றையும் கட்டிக் காத்து நிர்வகித்து வந்தவர் தொண்டமான். அவரது நிர்வாகத் திறமை ஒவ்வொரு செயலிலும் ஒவ்வொரு அமைப்பிலும் பிரதிபலித்தன. அவர் ஒரு தலைசிறந்த நிர்வாகியாவர்.[16]

## (iii) முன் உதாரணமாக அமையக்கூடிய குணங்கள்.

புளத்கோபிட்டிய என்ற இடத்துக்குப் பக்கத்தில் உள்ள நேவ்ஸ் பேரி தோட்டத்தில் சுமார் 400 ஏக்கர் பிரதேசத்தில் தொழிலாளர்கள் காடு வெட்டி நிலம் திருத்தி மரக்கறித் தோட்டம் போட்டார்கள். இந்தத் தொழிலாளர்களுக்கு வெளியேற்ற அறிவித்தல் கொடுக்கப்பட்டது. அரசாங்க உத்தரவுப்படி தொழிலாளர்கள் காலி செய்யவில்லை என்பதால் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்கள். அவர்களுள் 363 பேருக்கு 1000 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அவர்கள் தலைவர் தொண்டமானை நம்பினார்கள். இ. தொ. கா. விடம் போதிய நிதி இருக்கவில்லை. ஆயினும் தொண்டமான் கலங்கவில்லை. உடனடியாக அவர் தமது சொந்தத் தேயிலைத் தோட்டத்தை அடமானம் வைத்து வட்டிக்குப் பணம் புரட்டி கோட்டில் பிணை கட்டி அவ்வளவு தொழிலாளர்களையும் விடுதலை செய்தார்.[17]

## (iv) பின்பற்றுவோர் வழங்கும் அங்கீகாரம்.

எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா பிரதமராக இருந்த போது 1958ஆம் ஆண்டு ஒரு இனக்கலவரம் வெடித்தது. அந்த நேரத்தில் பொகவந்தலாவையில் மோட்டார் வண்டியில் வந்த இரு தமிழ் இளைஞர்கள் அந்தச் சிங்களவர்களை அடித்து விட்டார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அதனைத் தொடர்ந்து பெரும் பதற்றம் ஏற்பட்டது. கலவரம் தொடங்கிக் கட்டுக்கடங்காமற் போய்விட்டது. செய்தியை அறிந்ததும் பிரதமர், தொண்டமானுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உதவி செய்யும்படி கேட்டார். உடனே புறப்பட்டுச் சென்றார். மிக்க துணிவோடு அவர், மோதிக் கொண்ட இருசாரருடனும் பேசினார். வருபவர் தொண்டமான் என்பதை அறிந்ததும் ஆத்திரம் தணிந்தார்கள்.[18] இது அவரைப் பின்பற்றியோர் அவருக்கு வழங்கிய அங்கீகாரம் ஆகும்.

## (v) அர்ப்பணிப்பு மிக்க பணிவு.

1970ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்த பின்னர் காணிச் சீர்திருத்தச் சட்டம் ஒன்றினைக் கொண்டு வந்து தோட்டங்களையெல்லாம் தேசிய மயமாக்கினார் சிறிமாவோ. தொண்டமானுடைய பலநூறு ஏக்கர் தோட்டங்கள் கூடப் பறிக்கப்பட்டன. இக்கட்டத்தில் இ. தொ. கா. வையும் தொண்டமானையும் பலவீனப்படுத்த முயற்சித்தனர். வெஸ்டுவாட்ஹோ என்ற ஒரு தோட்டத்தை அபகரிக்கும் நோக்குடன் நுவரெலியா அரசாங்க அதிபர் நிலத்தை அளந்து எடுப்பதற்காக நில அளவையாளர்களும் அதிகாரிகளும் வந்தார்கள். தோட்டத் தொழிலாளர்கள் அவர்கள் பிரவேசத்தை

*இன்தமிழர் வாழ்வுயர இம்மியுமே சோம்பலின்றிப்*
*பன்னாளாய்ப் பாடுபட்ட பண்பாள! – நன்மொழியாம்*
*செந்தமிழே யாகச் செழிப்போடு பல்லாண்டு*
*நிந்தையின்றி வாழி நிலத்து.*

*– புலவர் தி. குலோத்துங்கன் எம். ஏ., சென்னை – 48.*

*வான்பொய்க்கும் வையகத்தில் வஞ்சியர்கள் காதலும்*
*தான்பொய்க்கும்; ஆனால் தமிழ்த்தொண்டமான் போன்றோர்*
*பொய்யா திருப்பதனால் அன்றோ புவியிங்கே*
*உய்யுமா றாயிற் றுரை.*

*– கவிஞர் வீ. கே. கஸ்தூரிநாதன் குழிபிறை, புதுக்கோட்டை மாவட்டம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்த்தார்கள். வந்தவர்கள் பலவந்தமாக உள்ளே புகமுயன்றார்கள். அந்தச் சமயத்தில் இ. தொ. கா. வைச் சேர்ந்த வீராங்கனைகளான தோட்டத் தொழிலாளப் பெண்கள் ஒரு துணிகரமான செயலைச் செய்தார்கள்.

ஜீப் வண்டிகளில் ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக வந்து கொண்டிருந்தார்கள். தொழிலாளர் தடுத்தும் அவை நிற்கவில்லை. உடனே பெண்கள் தங்கள் இடுப்பில் இருந்த பச்சைக் குழந்தைகளைத் திடீரென ஜீப் வந்து கொண்டிருந்த பாதைகளில் வரிசையாகக் கிடத்தினார்கள். வந்தவர்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. வந்தவழி திரும்பிப் போனார்கள். இதுதான் திரு தொண்டமானுக்கு இருந்த அர்ப்பணிப்பு மிக்க பணிவாகும்.

## (vi) தொண்டமான் பின்பற்றிய அரசியல் சித்தாந்தம்.

எஸ். டி. சிவநாயம் குறிப்பிட்டதுபோல் இளம் தொண்டமானைக் கவர்ந்தவர்கள் இருவர் ஒருவர் காந்தி. மற்றவர் கண்ணன். கண்ணனை ஆத்மீகத்திற்கு அவர் ஏற்றுக் கொண்டமையினால் நாம் காந்தியின் சிந்தனைகள் திரு தொண்டமான் மீது எவ்வாறு செல்வாக்குச் செலுத்தியது என்பதைக் காண்போம். தொண்டமான் ஒரு மாணவராகக் கம்பளை சென் அண்ட்ரூஸ் கல்லூரியில் சேர்ந்த 1927ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். 1927ஆம் ஆண்டில் கொழும்பு ஜிந்துப்பிட்டி மண்டபத்தில் ஒரு மாபெரும் வரவேற்பு அவருக்கு வழங்கப்பட்டது. ஓர் அந்நிய நாட்டில் எப்படி நாம் நடந்து கொள்ள வேண்டும் என்ற வழிமுறைகளை மகாத்மா காந்தி அன்றைய பேச்சில் எடுத்துக் கூறினார். மகாத்மாகாந்தி அங்கு நடத்திய அருமையான ஆழமான பேச்சு தொண்டமானிடம் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது. அன்று முதல் இறக்கும் வரை தொண்டமான் காந்தியைத் தனது அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டார். மகாத்மா காந்தியின் அகிம்சா தர்மமே தொண்டமானின் அரசியல் தர்மமாயிற்று.

"எல்லாவற்றுக்கும் மேலாக மகாத்மா காந்தியைப் போலவே தொண்டமானும் தேச ஒற்றுமையையும் தேச விடுதலையையும் வேண்டி நின்றார்"[20]

## (vii) தொண்டமானின் அரசியல் சாணக்கியம்.

1940ஆம் ஆண்டு முதல் தொண்டமான் அரசியலில் ஈடுபட்டு மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்காகப் பல அரசியல் போராட்டங் களை நடத்தி வெற்றிகளையும் தோல்விகளையும் கண்டிருக்கிறார். ஆனால் இவற்றுக் கெல்லாம், முடிவைத்தது போன்ற வெற்றி இந்திய வம்சாவழியினர் இழந்த உரிமைகளை அதாவது இந்திய வம்சாவளியினரின் பிரஜா உரிமையையும் வாக்குரிமையையும் பெற்றுக் கொடுத்தமையே ஆகும். இது பற்றிக் குறிப்பிடும் போது திரு. எஸ். டி. சிவநாயகம் அவர்கள்:

சாணக்கியரான தொண்டமான் இந்த வெற்றியை இரத்தம் சிந்தும் போராட்டத்தின் மூலமோ அல்லது வேறு எந்த வன்முறைப் போராட்டத்தின் மூலமோ சாதித்து விடவில்லை. தமது அரசியல் மதியுகத்தால் அரசியல் பகடை ஆட்டத்தில் சரியான நேரத்தில் சரியான காய்களை நகர்த்துவதன் மூலம் கட்சியாளர்களை வசப்படுத்தி தமக்கு வேண்டிய வெற்றியை வெகு சாமர்த்தியமாகப் பெற்றுக் கொண்டார்.

## (viii)

வழமை நிலைக்காலத்து தலைமைக்கும் வரலாற்று ஒழுங்கில் ஏற்படும் குறிப்பான ஓர் இக்கட்டு நிலைக்காலத்துத் தலைமைக்கும் இடையேயும், வேறுபடுவதற்கு நிச்சயமற்ற நிலை சமூகச் சீர்கேடு,

*அறநிதியம் கண்ட அழகராம், நல்ல*
*மறவர்குலத் தென்றல், மா மேதை! - திறமுடையார்*
*செய்தக்க செய்து சிறப்புற்றார், ஒன்றேனும்*
*செய்தக்க அல்ல செயார்.*

*— கவிஞர் இராவி பாரதி, சென்னை – 93.*

*சோழர் தளபதி தொண்டைமான் தோன்றலாய்*
*வாழும் தலைவரைநாம் வாழ்த்துகிறோம் - வேழமன்னார்*
*நாளும் தமிழர் நலம்காத்தார்! அன்னாரின்*
*ஆளுமைக் கேது நிகர்?*

*— கவிஞர் எழிற்பித்தன், சென்னை – 5.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் நிர்மூலம் என்ற பேராபத்துக்களை எதிர்நோக்கும் மக்களிடையே அத்தகைய வரலாற்றுக் கட்டத்தில் தாங்கொணா நெருக்கடிப் பிரவாகத்துக்கு உளவியல் ரீதியான பதில் தலைவன் ஒருவனின் வசீகரமாகும். இலங்கையில் வாழ்ந்த இந்திய வம்சாவளி மக்கள் 1948, 49ஆம் ஆண்டுகளின் பின்னர் அத்தகைய ஒரு கட்டத்தில் திரு. தொண்டமான் அவர்கள் ஒரு சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பித்தார். இதன் நோக்கம் இலங்கையில் இருந்த அரசற்ற, வாக்குரிமையற்ற இந்திய வம்சாவளியினரின் நிலைமையினை எடுத்துக் காட்டுவதாக இருந்தது. தெரிவு செய்யப்பட்ட சத்தியாக்கிரகிகள் பிரதம மந்திரியின் காரியாலயத்தின் முன் உண்ணாவிரதம் இருந்தனர். பிரதிநிதி சபையிலும் பல அமைச்சர்களுக்கும் மேற்கொள்ளப்பட்ட சத்தியாக்கிரகமும் இலங்கையிலும் இந்தியாவிலும் இம்மக்கள் மீது அனுதாபத்தையும் கவனத்தையும் ஏற்படுத்தியது. 1950ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி திரு. தொண்டமானும் அசீஸினதும் தலைமையின் கீழ் 41 சத்தியாக்கிரகிகள் இ. தொ. காங்கிரஸ் காரியாலயத்தில் இருந்து செனேட் சபைக் கட்டிடத்துக்கு ஊர்வலம் சென்றார்கள். இவர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு பல்வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விடப்பட்டார்கள்.[22]

நெருக்கடியிலும் நிலை பிறழாமை என்பதே இத்தகைய இக்கட்டில் வசீகரத் தலைவர் பேணும் முதற்பண்பாடாகும். அத்தகைய பண்பு திரு. தொண்டமானுக்கு இருந்தது. அதனால்தான் அவரை ஒரு வசீகரத் தலைவர் எனக் கொள்கிறோம்.

*குறிப்புகள்:-*


1. எஸ்.டி. சிவநாயகம், தலைவர் தொண்டமான் தமிழ்நாடு: பட்டமங்கலம் திருப்பத்தூர்; தொண்டமான் பாராட்டுக் குழுவினர். 1988, ப.39.
2. மேற்படி ப. 53 ப. 85
3. மேற்படி ப.99
4. மேற்படி ப. 107
5. மேற்படி ப. 143
6. மேற்படி ப. 143–144
7. மேற்படி ப. 147
8. மேற்படி ப. 149
9. மேற்படி ப. 165
10. Max Weber, On Chasisma and Institution Building (Chicago and London: The University of Chicago Press, 1968).
11. Max Weber,op. cit, p.46.
12. op.cit.p.49.
13. எஸ். டி. சிவநாயகம், ப.9.
14. மேற்படி
15. மேற்படி.ப.216.
16. மேற்படி. ப.217.
17. மேற்படி ப. 168–169.
18. மேற்படி ப.209.
19. மேற்படி, ப. 213.
20. மேற்படி, 103.
21. மேற்படி, 244.
22. S.Thondaman,Tea and Politics in Antstography Newrang & Vijitha Yapa Book Shop, 1994.p.92.


*சிங்களத் தீவினுக்கோர் பாலமவர்; செந்தமிழர்*
*வெங்கொடுமைச் சாக்காட்டை வீழ்த்துபவர் – அங்கே*
*பதவிகளில் தூயரவர், பாரதத்தாய் பிள்ளை*
*மதிசிறந்த மாமனிதர் காண்.*

*– புலவர் சண்முகம், சென்னை.*

*உலகத் தமிழர் உயர்வுக் குழைப்பார்*
*கலகம் தடுக்கின்ற காந்தி – திலகம்*
*தொழிலாளர்க் காவலர் துறைகற்ற ஞானி!*
*வழிகாட்டும் வைய விளக்கு.*

*– கவிஞர் காந்திதாசன், சென்னை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் தொண்டமான் பற்றிய சில நினைவுகள்



பேராசிரியர் மு. சின்னத்தம்பி
பொருளியற்றுறை
பேராதனைப் பல்கலைக்கழகம்



அமரர் தொண்டமானது சுயசரிதைக்கு முகவுரை எழுதிய பேராசிரியர் பூல்ட்ஜான்ஸ் அவரைப் பற்றி பின்வருமாறு கூறுகிறார். "முரண்பாடுகள், வஞ்சகப்புகழ்ச்சி, தற்செயலாக நடைபெறும் நிகழ்வுகள் என்பன வரலாற்றில் மலிந்து கிடக்கின்றன. கவனமாகத் திட்டமிட்ட நடவடிக்கைகள் போன்று இவையும் திட்டமிட்ட நடவடிக்கைகள் போன்று இவையும் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. சந்தர்ப்ப சூழ்நிலைகளில் காணப்படும் நிச்சயமற்ற தன்மைகளும் அவற்றிலேற்படும் திருப்பங்களும் பொது வாழ்வில் ஒரு சாதாரண மனிதனை நிலைகுலையச் செய்வதோடு, அவனை நிர்மூலமாக்கியும் விடுகின்றன. ஆனால், வரலாற்று நாயகர்களோ அவ்வித சூழ் நிலைகளையும் நிச்சயமற்ற தன்மைகளையும் அவற்றிலேற்படும் திருப்பங்களையும் தெளிவாக வரையறுக்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்குப் பயன்படுத்தி கொள்கின்றனர். அப்படியானதொரு இலட்சிய புருஷனே சௌமியமூர்த்தி தொண்டமான். மேலும் அவரது வரலாறு வெறுங் கற்பனையும் யதார்த்தமும், அதிர்ஷ்டங்களும், தொலை நோக்கம் நிறைந்த ஒன்றாகும். அதிகாரத்தை மதித்ததோடு, அதனைத் தெளிவுற விளங்கிக் கொண்ட அவர் அதனை மதிநுட்பத்துடன் கையாளும் திறனையும் கொண்டிருந்தார். அவரது இப்பண்புகள் சமகால இலங்கையில் அவரை அதி முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அரசியல் பிரமுகராக்கின. அவர் தனது மக்களால் நேசிக்கப்பட்டார். மற்றையோர் அவரைக் கண்டு அஞ்சினர். இன்னும் சிலர் அவருக்கு மரியாதை செலுத்தினர். அமைப்பான்மை, பேரம்பேசல், எந்த விடயத்தையும் திறமையாகக் கையாளுதல் போன்றவற்றில் அவரிடம் காணப்பட்ட அபார ஆற்றல், கூர்மதி வாய்ந்த அவரது தலைமைத்துவப் பண்பு என்பன இணைந்து, நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக அவரைத் தனது சமூகத்தின் அசைக்க முடியாத தலைவராக்கின". தொண்டமானைப் மதிப்பீடு சரியான தொன்றே. மலையகத் தமிழரிடையே காணப்பட்ட வறியோருள் வறியவர்களான தோட்டத் தொழிலாளரின் பூரணமாக ஆதரவையும் அனுதாபத்தையும் பெற்ற தலைவராக அவர் இறுதி வரையும் வாழ்ந்து மறைந்தார். அவ்வாறான ஒரு தலைவரைப் பற்றிய எனது சில நினைவுகளை ஏனையோருடன் பகிர்ந்து கொள்வதே இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

வையத்தில் ஒரு சிலர் புகழுடன் பிறக்கின்றார்கள். சிலரைப்புகழ் தானே சென்றடைகின்றது. அமரர் தொண்டமானைப் பொறுத்த வரையில் அவர் தனது நற்பணிகளினால் புகழைத்தேடிக் கொண்டார். புகழ் அவரைத் தேடியும் வந்தது. 1952ஆம் ஆண்டின் பின்னரே அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக்கிட்டியது. இந்த வாய்ப்பினை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தவர். முன்னைநாள் இராஜங்க அமைச்சரும் இன்றைய பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ பி. பி. தேவராஜ் அவர்களாவர் அவருக்கு நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுடன் எவ்விதத் தொடர்புகளுமே

*முனைப் புதூரார் முரசு முழங்குகின்ற*
*தானைத் தலைவர், தமிழர்க்குத் - தேனாவார்*
*தேயிலை தேசத்தார் தேடரிய நேசத்தார்*
*கோயிலை ஒத்த குணம்.*
*— புலவர் இராம. காந்தி, ஜெயங்கொண்டம்.*

*போர்க்குணம் கொண்ட புலிநிகர் தொண்டமான்*
*யார்க்கும் நலம்புரியும் நன்னீரார் - தீர்க்காத*
*சிக்கல் அறுக்கும் சிறந்த மதியுடையார்*
*குக்கல் குரைப்பென் செயும்?*
*— புலவர் இராமலிங்கம், நெல்லை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாதிருந்த என்னை "தோட்டத் தொழிலாளரது வேதனங்களும் வருமானங்களும்" தொடர்பான ஆய்வொன்றினை மேற் கொள்ளத்தூண்டுவதன் மூலம் அமரர் தொண்டமான் அவர்களுடன் பழகும் வாய்ப்பினை உருவாக்கித்தந்தார் அவர். 1984 ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற வேலை நிறுத்தமும், அதனைத் தொடர்ந்து வந்த புதிய வேதனங்கள் தொடர்பான பேச்சு வார்த்தைகளும் இதற்கு மேலும் வலுவூட்டின.

மேற்படி வேலை நிறுத்தம் நடந்து கொண்டிருந்த வேளையில் தோட்டத் தொழிலாளரது வேதனங்கள் பற்றி நான் ஏற்கனவே ஒரு ஆய்வினை மேற்கொண்டிருந்ததால், வேலை நிறுத்தத்தின் பின்னர் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளுக்காகப் பல அறிக்கைகளைத் தயாரிக்க வேண்டிய கட்டாய மேற்பட்டது. தனித்தும் திரு. தேவராஜ் அவர்களுடன் இணைந்தும் இவ்வாறான பல அறிக்கைகளைத் தயாரித்ததோடு, தலைவர்களுடன் அவை பற்றிக் கலந்துரையாடவும் நேர்ந்தது. இக்கலந்துரையாடல் களினூடாகத் தலைவர்களிம் காணப்பட்ட சில சிறப்பான ஆற்றல்களையும் அரிய பண்புகளையும் நான் நேரடியாகவே தெரிந்து கொள்ளக் கூடியதாகவிருந்தது. ஐந்து வருடங்கள் மட்டுமே முறையாகக் கல்வி பயின்றிருந்த அவர் உலகம் என்னும் பரந்து விரிந்த பள்ளியிலே அனுபவரீயாகக் கற்றுத்தேர்ந்தவர். எதையும் யதார்த்த பூர்வமாகச் சிந்திக்கக் கூடியவர். தோட்டத் தொழிலாளரின் வேதனங்கள் தொடர்பாக நான் தயாரித்த அறிக்கைகளைத் தனக்கு வாசித்துக் காட்டுமாறு கேட்டார். அவ்வாறு வாசிக்கும் பொழுது ஆரம்ப நாட்களில், நான் எழுதிய விடயங்களை அவர் விளங்கிக் கொள்வாரா என்ற ஐயப்பாடு எனக்குத் தோன்றியதுண்டு. எனினும் அவரைப் பற்றிய எனது இக்கணிப்பு எந்தளவு தவறானது என்பதை நான் தெரிந்து கொள்வதற்கு அதிக நாட்கள் எடுக்கவில்லை. நான் வாசிக்கும் பொழுது வாசிப்பதை நிறுத்தச் சொல்லி விளக்கம் அல்லது கேள்விகள் கேட்பார். நான் எழுதியவற்றை அவர் நன்கு விளங்கிக் கொண்டதோடு, என்னிலும் ஒரு படி மேலே சென்று அதில் காணப்பட்ட தவறுகளையும் குறைபாடுகளையும் சுட்டிக் காட்டி அவற்றை எவ்வாறு எழுதலாமென்பது பற்றி ஆலோசனையும் கூறுவார். அவரது அபாரமான உய்த்துணரும் திறமையும், எதனையும் விரைவாகக் கிரகித்துக் கொள்ளும் ஆற்றலும் என்னைப் பிரமிக்க வைத்தன.

இவ்வாறு வேதனங்கள் பற்றி எழுதும் போது ஒரு நாள் அது பற்றி அதிகம் சிந்திக்காமலேயே நான் கையாண்ட கூலி என்ற சொல் அவரது கவனத்தை ஈர்த்துவிட்டது. உடனே அவர் கூலி என்ற சொல்லிற்கு வேறு தமிழ்ச்சொற்கள் இல்லையா? இது எமது மக்களை இழிவு படுத்துவதற்கு ஆங்கிலத்துரைமார் கையாண்ட ஒரு சொல்லல்லவா? இந்தச் சொல்லைத் தான் கையாளவேண்டுமா?" என்று கேட்டு விட்டார். என்னை விடவும் அவர் எவ்வளவு ஆழமாகச் சிந்திக்கிறார் என்பதையும், எனது சிந்தனா சக்தியின் எல்லையையும் இது என்னை உணர வைத்தது. தலைவரவர்கள் கற்றறிந்த பலருடன் பழகுபவர். ஒரு விடயத்தைப் பற்றிப் பலரது அபிப்பிராயங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்ட பின்னரே அதனை ஏற்கும் பண்பு அவரிடம் காணப்பட்டது.

தொழிற்சங்க பேரம் பேசலில் அவருக்கு நிகர் அவரே தான். பல்கலைக்கழக ஆசானாகிய எனக்கு இதில் பரிச்சயம் இருக்கவில்லை. நான் கூறிய கருத்துக்கள் சில சந்தர்ப்பங்களில், பொருளியல் ரீதியாக அவை சரியானவையாகவிருந்த போதும், தொழிற்சங்கப் பேரம் பேசலுக்குப் பாதகமாக இருந்ததுண்டு. இதை அவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இது பற்றிக் கூறும் பொழுது ஒரு நாள் அவர், "...... சின்னத்தம்பியை நான் வேதன நிர்ணயம் தொடர்பான பேச்சு வார்த்தைகளில் எனது வாதங்களுக்குச் சார்பான ஆதாரங்களைக் காட்டுவதற்காக என்னுடன் அழைத்துச் செல்கிறேன். அவரோ அரசாங்கத்திற்குச் சார்பான வாதங்களை அங்கு முன் வைக்கிறார்......" என்று பலர்

*செல்லும்நாள் எல்லாம் சினவா துபசரிப்பார்*
*நல்லார் இவர்க்கிணையாய் நான்காணேன் - பொல்லார்*
*நடுநடுங்கும் சீலர் நமனுக்கும் அஞ்சார்*
*கொடியர்க்கு என்றுமிவர் கூற்று.*

*– புலவர் பொன்னுசாமி, சென்னை.*

*மக்கள் தலைவர் மதித்திடும் தொண்டராம்*
*தக்க அறிவினர் தன்னுழைப்பே - பக்கபலம்*
*பண்புநெறி கொண்டவர் பார்புகழ நின்றவர்*
*தொண்டமான் தொண்டன்றோ தொண்டு.*

*– புலவர் பூவேந்தன், சென்னை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிலையில் சிரித்துக் கொண்டே கூறினார். இந்த விடயத்தில் நான் ஒரு குழந்தை என்பதை அவர் சொல்லாமலே சொல்லிக் காட்டினார். தனது வாதப்பிரதிவாதங்களினால் எவரையும் மடக்கக் கூடியவர் அவர். பேரம் பேசலில் எதனைக் கூற வேண்டும். எதனை மறைக்க வேண்டும், எதனை வலியுறுத்த வேண்டும் என்பதை நன்கு தெரிந்து வைத்திருந்தார். வேதளன நிர்ணயம் தொடர்பான விடயங்களை நான் ஒரு பொருளியலாளன் என்ற முறையிலேயே அணுகினேன். இதற்கு மாறாகத், தலைவரவர்களோ தொழிலாளருக்கு ஆகக்கூடிய வேதனங்களைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் பேச்சு வார்த்தைகளில் அவற்றை எவ்வாறு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதிலேயே கவனம் செலுத்தினாரென்பது எனக்கு போகப்போகத் தான் புரிந்தது.

பேச்சு வார்த்தைகள் சற்றுக்காரசாரமாக நடந்து கொண்டிருந்த ஒரு சந்தர்ப்பத்தில் அவர் சினமுற்று கூட்டத்தை விட்டு வெளியேற முயன்ற பொழுது அப்போது அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவிருந்த காலஞ்சென்ற திரு. ரஞ்சன் விஜேரத்ன அவர்கள் ஓடிச் சென்று அவரைச் சமாதானம் பண்ணி மீண்டும் கூட்டத்தில் பங்கு பற்ற வைத்தமை பார்க்க சுவாரஸ்யமாகவிருந்தது. திரு விஜேரத்ன அவர்கள் தோட்டத்துரைமார் சங்கத் தலைவராகவிருந்த காலத்தில் தொழிலுறவு சம்பந்தமான விடயங்களில் தலைவருடன் மோதியிருப்பாரென்பதில் ஐயமில்லை. இருந்துங் கூட திரு. விஜேரத்ன அவர்களைப் பற்றிக் கூறும் போது "....... அவர் ஒரு நல்ல மனிதர், தோட்டத் தொழிலாளர்களின் மீது அனுதாபமும், அவர்களது நலன்களின் அக்கறையும் கொண்டவர்" எனக் கூறியமை எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றது. அதேபோன்று திரு. விஜேரத்ன அவர்களும் தலைவர் பால் நன்மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தமையை பல்வேறு சந்தர்ப்பங்களில் நான் காண முடிந்தத.

நான் சுகவீனமுற்று இருதய சத்திர சிகிச்சைக்கு உள்ளாகிய பின்னர் அவரை முதன் முதலாகச் சந்தித்த போது எனது உடல் நலம் பற்றி மிகுந்த அக்கறையுடன் விசாரித்தார். அதன் பின்னர் அவரைச் சந்திக்கும் போதெல்லாம் அது பற்றி விசாரிக்கத் தவறுவதில்லை. அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் என்னுலும் தான் முப்பது வயது மூத்தவர் என்பதையும் முதுமையிலும் தான் சுகதேகியாக இருப்பதையும் சொல்லாமலே உணர்த்தினார். முதிர்ந்த வயதிலும் அவர் மூக்குக் கண்ணாடியின் உதவியின்றி வாசிக்கக் கூடியதாக இருந்தமை அவரது கூற்றை நிரூபிப்பதாக இருந்தது.

ஒரு முறை வைபவமொன்றில் இளைஞர் ஒருவர் தொடர்ந்து அவரிடம் கேள்விக்கணைகளைத் தொடுத்துக் கொண்டிருந்தார். தலைவரும் மிகவும் பொறுமையுடன் தன்னாலான பதில்களைக் கூறிக் கொண்டேயிருந்தார். எனினும், இளைஞர் விட்டுக் கொடுப்பதாக இல்லை. தொடர்ந்தும் கேள்விக்களை எழுப்பிய வண்ணம் இருந்தார். தலைமை வகித்த என்னாலும் இந்த இளைஞரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தலைவரை மடக்கி விடலாமென அவர் எண்ணினார் போலும், பொறுமை இழந்த தலைவர் அந்த இளைஞரைப் பார்த்து "என்னை என்னடா செய்யச் சொல்கிறாய், அது அப்படித்தான்" என்று சற்றுக்காரசாரமாய் கூறியதும் இளைஞர் இருந்த இடம் தெரியாமல் அடங்கிவிட்டார்.

தொண்டமான் காலத்துக்கு காலம் தனது அரசியல் சூதரவை வெவ்வேறு கட்சிகளுக்கு மாற்றிக் கொண்டிருந்தமை சிலருக்குப் புதிராகவும் வேறு சிலருக்கு வேடிக்கையாகவும் இருந்தது. எனது பல்கலைக்கழக சக ஆசிரியர்கள் சிலர் கூட குறிப்பாகப் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தோர், இது பற்றி என்னிடம் கிண்டலாகக் கதைத்ததோடு அவருக்கு "சந்தர்ப்பவாதி" என்ற பட்டத்தையும் சூட்ட முயன்றனர். மலையகத் தமிழினம் போன்ற சிறுபான்மைக்குள் சிறுபான்மையான ஒரு இனம்

*இலங்கையில் தோட்டமெல்லாம் ஏற்றத்தைக் காட்டிக்*
*குலுங்குவதைக் காண்பார் குழைவார் - நலங்கொழிக்கும்*
*பண்டை கருணாகரன் பான்மையில் மேன்மையுறும்*
*தொண்டமான் செய்து வரும் தொண்டு.*
*— மலேசியக் கவிஞர் ஐ. உலகநாதன்.*

*தொண்டிற் பழுத்தபழம் தொண்டமான் நல்லமைச்சர்*
*கொண்டதமிழ் கொள்கைநெறி கூவியே - மண்டுலகில்*
*பண்டிலங்கை மக்களொடு பாரதத்தின் சீர்பரவி*
*என்டிசையும் கொட்டு முரசு*
*—புலவர் நு. ர. ஆறுமுகன், சென்னை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவிதத்திலுமே ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பது முடியாத காரியம். இப்படியானதொரு சூழ்நிலையில், ஏதாவதொரு பெரும்பான்மைக் கட்சிக்கு ஆதரவை அளிப்பதன் மூலம் அம்மக்களுக்கு உரிமைகளையும் சலுகைகளையும் பொற்றுக்கொடுப்பதே அவ்வித சிறுபான்மை இனத்தை பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு தலைவர் செய்யக்கூடிய சிறந்த பணியாகும். தலைவர் தொண்டமான் அதைத்தான் செய்கிறார் எனவும், மலேசியாவிற்கூட சிறுபான்மை இந்தியரது அரசியல் அமைப்பான மலேசிய இந்திய காங்கிரஸ் இதையே செய்கிறது எனவும் நான் கொடுத்த விளக்கத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டனரென எண்ணுகின்றேன். ஏனெனில், இன்று முதல் அது பற்றிக் கேள்வி எழுப்புவதை அவர்கள் நிறுத்திக் கொண்டனர்.

அண்மையில் ஏஞ்சலா லிட்டில் (Angela Little) என்பவர் மலையகக் கல்வி பற்றிய தனது நூலில் கூறியுள்ள கருத்துக்களும் மேலே குறிப்பிட்ட விடயத்தை ஆமோதிப்பதாக இருக்கின்றன. சிறுப்பான்மைத் தமிழரின் மனித உரிமைகளை அரசு உதாசீனம் செய்வதாக இலங்கை அரசின் மீது சர்வதேச மட்டத்தில் குற்றஞ்சாட்டப்படுவதோடு, வடக்கிலும் கிழக்கிலும் தமிழ்க்குழுக்கள் அரச படைகளுடன் போரிட்டுக் கொண்டிருக்கும் அரசியல் நெருக்கடி சூழ்ந்த இக்காலக்கட்டத்தில், தோட்டப்புறப் பாடசாலைகளினதும் ஏனைய தாபனங்களினதும் வளர்ச்சிக்கு வெளிநாட்டு உதவியைத் தொண்டமான் எவ்வாறு பெற்றுக் கொண்டார் என்ற வினாவை எழுப்பி, அவர் தனக்குக் கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் மலையகத் தமிழரின் நலன்களை மேம்படுத்துவதற்கு சரியான வழியில் பயன்படுத்திக் கொண்டதாலேயே இது சாத்தியமாகிற்று என்று அவர் கூறகிறார். இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் இடதுசாரிக் கட்சிகளுக்கு ஆதரவு வழங்கிய அவர், அறுபதாம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் தனது ஆதரவை ஐக்கிய தேசியக்கட்சிக்கு மாற்றினார். தேர்தலில் வெற்றியீட்டிய அக்கட்சி தொண்டமானை நியமன உறுப்பினராக்கிற்று. அதனூடாக மலையக மக்களுக்குப் பல சலுகைகளைப் பெற்றுக் கொடுத்தார். 1970 – 77ம் காலப்பகுதியில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசில் அங்கத்துவம் பெறாத நிலையில் தனது முழுக்கவனத்தையும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் செலுத்தினார். 1977ம் ஆண்டின் பின்னர் பதவிக்கு வந்த அரசுகளில் தொடர்ந்து அமைச்சராகவிருந்த அவர், ஒரு பலம் வாயந்த அரசியல்வாதியாகவும், அதிகாரத்தரகராகவும் விளங்கினார். இக்காலப் பகுதியில் 1949இல் மலையகத் தமிழர் இழந்த குடியுரிமையை மீளப்பெற்றுக் கொடுத்து தேசிய நீரோட்டத்தில் இம்மக்களும் இணைந்து கொள்வதற்கு வழி சமைத்தார். இன்றைய அரசுக்கு ஆதரவளிப்பதனூடாக தோட்டப் புறங்களில் கிராம சேவகர், திருமணப் பதிவாளர், காவற் படையினர் போன்ற அரச துறைப் பதவிகளைத் தோட்டப்புறத் தமிழ் இளைஞரும் பெற்றுக் கொள்வதற்கு ஆவன செய்தார். சமூர்த்தித் திட்டத்தின் நன்மைகளைத் தோட்ட மக்களும் அடைவதற்கு ஏற்பாடு செய்ததோடு, தோட்டப் புறங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கென தனியானதொரு அமைச்சையும் பெற்றுக் கொடுப்பதன் மூலம் தோட்ட மக்களின் வருங்கால முன்னேற்றத்திற்கு உறுதியானதொரு அடித்தளத்தை உருவாக்கியதன் பின்னரே அவர் உயிர்துறந்தார். தனது மக்கள் தனக்களித்த மகத்தான ஆதரவின் மூலம் தான் பெற்ற அதிகாரத்தை மதிநுட்பத்துடன் கையாண்டதாலேயே இவை யனைத்தும் சாத்தியமாகின என்பது கண் கூடு.

சுருங்கக்கூறின், அவர் அரசியல் சாணக்கியமும், தன்னம்பிக்கையும் நிறைந்த ஒரு சிறந்த தலைவராக விளங்கினார். எனினும், குறைகள் இல்லாத மனிதரே இல்லை. அவரிடமும் சில குறைகள் இருக்கவே செய்தன. தான் கட்டிவளர்த்த தாபனத்திற்குள்ளேயே அவர் சனநாயகப்பாரம் பரியங்களை மதித்து நடந்தாரா என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது. அதன் விளைவாக, அவர் வாழ்ந்த காலத்திலேயே அத்தாபனம் பிளவு படவும் நேர்ந்தது

*இன்சொலர் காட்சிக் கெளியன் குறைவிலா*
*அன்பராம் தொண்டமான் வாழ்கவே - என்றும்*
*இலங்கைத் தரணியே ஏத்தும் தலைவா!*
*நலம்பெற்றே வாழ்க நெடிது.*

*—கே. பாமரன்.*

*கருணா கரத் தொண்ட மான்குடித் தோன்றல்*
*கருணை மிகுஒழுக்கக் குன்றே - திருவாய்ப்*
*பெருமா நிலத்தின் நிழலே பரப்பித்*
*திருவாகை சூடினாய் நீ!*

*—கா. திலகன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரதிஷ்டவசமானதே. அப்பிளவு அதனை ஆட்டங்காணச் செய்யாத போதும்இ அமைதியாக விருந்த அத்தாபனத்தில் அதிர்ச்சி அலைகளை உருவாக்கிற்று.

இச்சந்தர்ப்பத்தில் மலையக மக்களின் எதிர்காலம் பற்றியும் சற்று சிந்திக்க வேண்டியுள்ளது. மலையக இளைஞர்கள் வடக்கு கிழக்குத் தமிழ் இயக்கங்களுடன் சேர்ந்து இங்கும் ஒரு கொந்தளிப்பான நிலையினை உருவாக்கி விடுவாரோ என்ற அச்சம் பெரும்பான்மை இனத்தவரிடையே தோன்றிய போது அதனைத் தடுக்கும் முகமாக பதவியிலிருந்து அரசாங்கங்கள் மலையகத் தமிழ் மக்களுக்கு பல சலுகைகளைம் உரிமைகளையும் வழங்க முன் வந்தன. அமரர் தொண்டமானும் அந்த வாய்ப்பினை தனது மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் பயன்படுத்திக் கொண்டார். எனினும், மலையக மக்கள் இதன் நன்மைகளைப் பூரணமாக அடைவதற்கு நாட்டினது இன்றைய சூழ்நிலை சாதகமாக இல்லாதிருக்கின்றது. பாதுகாப்புக்கெடு பிடிகள் காரணமாக தோட்டப் புறத்தமிழ் இளைஞர்கள் தாம் வாழும் தோட்டங்களை விட்டு வெளியே செல்ல முடியாத ஒரு இக்கட்டான நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர். அத்துடன், தமிழ் மக்கள் அனைவரையும் சந்தோகக் கண்ணுடன், நோக்கும் ஒரு துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது. வடக்கு – கிழக்குப் பிரச்சினைகளுக்குச் சமரசத் தீர்வொன்று காணப்பட்டு நாட்டில் சமாதானம் மலருமாயின், இந்த நிலை மாறுமென்பதில் ஐயமில்லை. ஆனால் அவ்வாறான ஒரு சூழ்நிலையில் வடக்கு – கிழக்குத் தமிழருக்கே அரசாங்கம் முன்னுரிமை அளிக்கும் சாத்தியம் உண்டு என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. மேலும், மலையக மக்கள் அண்மைக் காலங்களில் போன்று தமது தமது உரிமைகளையும் சலுகைகளையும் இலகுவில் பெற்றுக் கொள்ள முடியாதும் போய்விடலாம். மாறாக அவற்றைப் பெற்றுக் கொள்வதற்குப் போராட்டங்களை மேற்கொள்ளவும் நேரிடலாம். இந்த நிலையில், மலையகத்தின் எல்லாச் சக்திகளும் ஒன்றிணைவது இன்றியமையாததாகவிருக்கும். எம்மிடையே இன்று காணப்படும் சிறு பேதங்களும் தலைமைத் துவத்திற்கான போட்டிகளும் தொடருமாயின், எமது எதிர்காலம் இருள் சூழ்ந்த ஒன்றாகவே இருக்கும். இதனால் அமரர் தொண்டமான் கண்ட கனவுகளையும் நனவாக்க முடியாது போய்விடும். ஒற்றுமைக்கான இச்சவாலை இன்றைய தலைவர்கள் ஏற்றுக் கொள்வார்களா? காலமே பதில் சொல்ல முடியும்.

*தோட்டத் தொழில்காக்கும் தொண்டமான் என்றுமே*
*நாட்டின் நலம் தேடும் நல்லவர்- தீட்டுகின்ற*
*திட்டமெலாம் ஈழத் தமிழர் நலம் காக்கும்*
*மட்டில்லா முத்துவிழா வாழ்த்து.*

*– புலவர் மு. வெள்ளைச்சாமி எம். ஏ., பி. எட். சென்னை.*

*மன்னுதமிழ் தொண்டமான் மாஈழ மந்திரியாய்*
*என்றும் இனிதாக வாழ்ந்திருக்க – என்பதே*
*இன்றவரை நீயணுகி எற்றமெலாம் ஈந்திடுதல்*
*நன்றுனக் கென்றுரைத்தேன் நான்*

*– புலவர் இரா. கண்ணையன் எம். ஏ. எட்., சென்னை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் போல் இனியார் உண்டு ?

– தேவதாசன் ஜெயசிங் –

தலைவா ! தரணி புகழ் தலைவா !
எம் குறை கேட்க நீ இல்லையே !
நின்னை மறவோம் ஐயா !
நித்தம் நினைப்போம் ஐயா !
நின்றன் பணியென்றும் தொடர்வோம் ஐயா !

1. தொழிலாளர் வாழ்வுக்காய் உழைத்தாய் ஐயா ! – உன்னைத்
தொழிலாளர் வாழ்வோடு இணைத்தாய் ஐயா !
தொழிலாளர் தெய்வமாய்த் திகழ்ந்தாய் ஐயா ! – அந்தத்
தொழிலாளர் நீயின்றித் தவித்தார் ஐயா !

2. நிலையான மலை போன்று நிமிர்ந்தாய் ஐயா ! – சற்றும்
மலையாத நெஞ்சோடு நின்றாய் ஐயா !
விலையில்லா பெருஞ் சேவை செய்தாய் ஐயா ! – சற்றும்
குலையாமல் பெருங் கட்சி வளர்த்தாய் ஐயா !

3. இனமென்றும் மொழியென்றும் பல பேசுவார் ! – அவர்
குணங் கண்டு கொதித்தாறி நீ பேசுவாய் !
பயமின்றிப் பாராளுமன்றத்திலும் – சென்று
நயமாக நம்மவர்க்காய் உழைத்தாய் ஐயா !

4. தோட்டக் காட்டான் என்ற லேபலையும் – இவன்
கள்ளத் தோணி என்ற சுலோகத்தையும்
நாடற்றோர் என்ற அந் நாமத்தையும் – நீக்கி
வீடமைத்து வாழ வழி செய்தாய் ஐயா !

5. கொழுந்துகளைப் பறித்திட்ட தொழிலாளரின் – பிள்ளை
குழந்தைகளைப் பயிற்றுவிக்கும் பணி மேற்கொண்டு
ஆசிரியர் – அதிபர் – கல்விப் பணிப்பாளர்கள் – என்று
ஆகிவிட அடியிட்டோன் நீயல்லவோ ?

6. தோட்டங்கள் எழுச்சி பெற யார் காரணம் ? – தோட்டத்
தொழிலாளர் வளர்ச்சியுற யார் காரணம் ?
நாடாளுமன்றத்தில் நம்மவர்கள்
நாற்காலி பிடித்திட யார் காரணம் ?

7. தென்றல் தவழ்ந்திடும் குன்றுகள் மேல் – நின்று
தேயிலை வளர்த்திடும் தொழிலாளரை
சூறாவளி வந்து தாக்கா வண்ணம் – காக்க
யாருண்டு சொல் ஐயா ! உன் போல் இனி ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் ஆளுமையும், ஆற்றலும், தீர்க்க தரிசனமும் நிறைந்த தலைவர் தொண்டமான்



*கலாநிதி பி. இராமானுஜம்*

*செயலாளர்,*

*கால்நடை அபிவிருத்தி மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு.*



இலங்கை அரசியல் வரலாற்றில் மிக நீண்டகாலமாக ஒரு நிர்ணய சக்தியாக விளங்கி வந்த தலைவர்களுள் காலஞ்சென்ற அமரர் தொண்டமான் அவர்களும் ஒருவராவார். அரசியல் வாழ்வில் ஆளுமையும், ஆற்றலும் மிக்க ஒருவராக விளங்கிய அவர் அரசியல் தீர்க்கதரிசனம், நடைமுறை வாழ்வுக்கு எது தேவையோ அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்ற பேரவாவும் கொண்ட ஒருவராக விளங்கினார்.

அவருடைய வாழ்வு என்பது போராட்டத் தோடு ஆரம்பமானது. உருளைவெள்ளி தோட்டப் போராட்டத்தோடு ஆரம்பமான அமரர் தொண்டமான் அவர்களின் சகாப்தம் காலனித்துவ ஆட்சிக் காலத்திலேயே தொழிலாளர் நலன்களுக்காகவும், அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்குமான போராட்டமாக ஆரம்பமானது. காந்திஜியின் கொள்கை அடிப்படையில் இலங்கை அரசியல் வாழ்வை ஆரம்பித்த தொண்டமான் அவர்கள் சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியில் இலங்கை அரசியலில் ஒரு முக்கிய பங்காளியாக விளங்கினார். 1947 ஆம் ஆண்டு முதன்முதலாக அவருடைய பாராளுமன்ற பிரவேசம் ஆரம்பமானது. அக்காலப்பகுதியில் திரு. ஆர் மோத்தா, திரு. கே. இராஜலிங்கம், திரு. கே. குமாரவேல், திரு. சீ.வி. வேலுப்பிள்ளை, திரு. எம். எஸ். சுப்பையா, திரு. ரி. ராமானுஜம் ஆகியவர்களோடு இணைந்து மலையகத்தில் மகத்தான அரசியல் பிரவேசத்தினை ஆரம்பித்து வைத்தார். 1949 ஆம் ஆண்டு இந்திய தமிழர்களுடைய வாக்குரிமை பறிக்கப்பட்டதனால் 1977 ஆண்டுவரையும் எந்தவொரு மலையகப் பிரதிநிதியும் மக்களின் வாக்குகளினால் பாராளுமன்றத்தில் தெரிவு செய்யப்படவில்லை. 1960ம் ஆண்டு நடைபெற்ற 2வது பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரித்தமை காரணமாக, அப்போதைய பிரதம மந்திரியாக விளங்கிய ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்களால் நியமன அங்கத்தவராக தெரிவு செய்யப்பட்டார். 1964 ஆம் ஆண்டுவரை இவர் நியமன அங்கத்தவராகப் பதவி வகித்தார். 1965 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியை ஆதரித்தமையால் 1970 ஆம் ஆண்டுவரை தொடர்ச்சியாக நியமன அங்கத்தவர் பதவியை வகித்தார். இதன்பின்பு 1977 ஆண்டு பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் நுவரெலியா தேர்தலில் 3வது அங்கத்தவராக வெற்றி பெற்றதனால் இவருக்கு ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்க மந்திரிசபையில் அமைச்சர் பதவி கிடைத்தது. இதனால் கால்நடை அபிவிருத்தி, கிராமியக் கைத்தொழில், உல்லாசப் பயணத்துறை மற்றும் புடவைக் கைத்தொழில் போன்ற அமைச்சுப் பொறுப்புகளை வகித்த இவர், தம் இறுதிக் காலத்திலேயே தொடர்ச்சியாக கால்நடை அபிவிருத்தி மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராகப் பதவி வகித்தார்.

அமரர் தொண்டமான் அவர்கள் 1988 ஆம் ஆண்டு இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் பிரஜாவுரிமைப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு

*தண்டமிழ்போல் தென்றல்போல் தண்கதிர்போல் வானம்போல்*
*மண்டலத்தில் வற்றாத மாகடல்போல் - தொண்டமான்*
*பல்லாண்டு வாழ்க! பல நலமும் சூழ்கவே!*
*நல்லார்கள் போற்ற நயந்து.*

*— முனைவர் அரு. கோபாலன், சென்னை – 94.*

*அண்டையயல் நாட்டில் அருந்தமிழர் தோல்விகேட்டு*
*விண்டு வெடித்த வெறுநெஞ்சே! - தொண்டமானைக்*
*காணுகிற வெற்றிக் களிப்பில் உயிர்பறந்து*
*போனாலும் போகட்டும் போ.*

*— புலவர் கரு. செல்லமுத்து, புதுக்கோட்டை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய காரணகர்த்தாவாக விளங்கினார். இவருடைய விடாமுயற்சியே இலங்கையில் வாழ்ந்த சகல நாடற்றவர்களுக்கும் பிரஜாவுரிமை கிடைப்பதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தது.

வட–கிழக்கிலும், தென் பகுதிகளிலும் இளைஞர் அமைதியின்மை ஏற்பட்டபொழுது, பெருந் தோட்டத்துறையில் இதன் தாக்கமும், இளைஞர் எழுச்சியும் ஏற்படாமைக்கு இவரது அரசியல் முதிர்ச்சியும், அனுபவமுமே காரணமாக இருந்தன.

எனவே கடந்த 50 வருட காலமாக தொழிற்சங்கவாதி என்ற அடிப்படையிலும், சர்வதேச தொழிற்சங்க சம்மேளனங்களின் தலைவர் என்ற அடிப்படையிலும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர், அமைச்சர் என்ற அடிப்படையிலும் நீண்டகால சேவையினை தம் மக்களுக்காக வழங்கினார். அவருடைய அரசியல் வாழ்க்கை ஆரம்பித்தது முதல் இறுதிவரை இவருடைய சேவை இந்திய வம்சாவளி தமிழ் மக்களுடைய நலன்களை நோக்கமாகக் கொண்டு தமது இறுதிக் காலப்பகுதியில் கால்நடை அபிவிருத்தி அமைச்சரோடு தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு மூலமாக இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் எதிர் நோக்கும் கல்வி, கலாசாரம், விளையாட்டு மற்றும் இளைஞர்களின் சுய தொழில் வேலைவாய்ப்பு போன்ற பல்வேறு துறைகளில் கவனம் செலுத்தி அம்மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார்.

எனவே அவருடைய சேவை இலங்கை வரலாற்றில் மாத்திரமல்லாமல், குறிப்பாக பெருந்தோட்ட மக்களுடைய வரலாற்றிலும் மறக்கமுடியாத ஒன்றாக அமைந்து விட்டது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

*வான்மழையின் தண்ணளியாம் ஈழத்துத் தோட்டத்தில்*
*தேனிழைக்கும் தொண்டிலுயர் வண்டெனவே தொண்டமான்*
*மன்றல் கமழ்குமரிக் கண்டத்து வண்டமிழ்போல்*
*நின்றுபுகழ் ஓங்குக நீடு.*

*– புலவர் த. ஆறுமுகன் புரசைபாக்கம், சென்னை – 84.*

*தூய தமிழுணர்வால் தொண்டுகளால் செந்தமிழர்*
*தாயெனவே வாழ்கின்ற தன்மையினால் - தொண்டமான்*
*ஈழத் தமிழ்மண்ணில் ஈடில் தலைவரானார்*
*தாழா துயர்ந்தார்காண் நீ.*

*– புலவர் அனு. வெண்ணிலா அம்பத்தூர், சென்னை – 53.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகத்தின் திருவுரு



- தமிழ்மணி குறிஞ்சிநாடன் -



வெவண்டன் தோட்டத்தை - உரிமை யாக்கி
வியத்தகு நல் உழைப்பாலே பேணிக் காத்து
தேவர்குலத் தலைமகனாம் குமார வேலும்
திக் கெட்டும் பெருமைபெறத் தமிழ ரெல்லாம்
கோமகனாம் குலக்கொழுந்து சௌமிய மூர்த்தி
தொண்டமானைத் தந்திட்டார் தலைவ னாக
நாமகளாம் சித்தம்மை தந்த சிங்கம்
நம்மவரின் துயர்போக்கும் தெய்வ மானார் !

தொண்டமான் பரம்பரையின் மூத்தோ ரெல்லாம்
முடிமன்னர் மணிமகுடம் தழைக்கச் செய்தார்
தொண்டமான் கருணாகரன் ஈழம் வந்தே
தொண்டமான் ஆறோடு கோயில் தந்தார்
மின்னிடும்வேல் காத்தானும் யானை வென்று
மேன்மைமிகு அரசரவர் விருதைப் பெற்றார்
தொண்டமான் திருக்குலத்தின் நாமங் கேட்டால்
திசையெட்டும் கைகூப்பிப் புகழும் பாடும்

விண்ணுயர்ந்த மாளிகையாம் முனாப்புதூரில்
விண்ணவரும் புவியினரும் வியந்து வாழ்த்த
கண்மணியாள் சித்தம்மை ககனம் போற்றும்
கார்வண்ண சௌமியனைத் தந்த தாலே
மண்ணுலகில் தொழிலாளர் மாட்சி கண்டார்
மகிழ்ச்சியுடன் தொண்டுசெய்த தொண்ட மானை
எண்ணியிங்கு நாமெல்லாம் எந்த நாளும்
வாயார வாழ்ந்திடுவோம் வாழ்க நாமம் !

தோட்டத்து இருட்டறையில் ஆடு மாடாய்
துயரமுத்த வாடிப்போய் அல்லல்பட்டு
வாட்டமுடன் பசியேற்று வறுமைப் பட்டு
வகைகெட்டு வாழ்ந்தோரின் நலனுக் காக
தோட்டத்துரை மார்களையே நீதி கேட்டு
சிறைப்பட்ட வாழ்க்கையினை மீட்டுத் தந்தார்
கூட்டுறவால் தொழிலாளர் ஒன்று சேர்ந்து
குதூகலமாய் வாழ்வதற்கு வகையும் செய்தார்.

தொழிலாளர் காங்கிரஸே உந்தன் மூச்சு
தொழிலாளர் பற்றியதே உந்தன் பேச்சு
தொழிலாளர் பிரச்சினையை உலகங் கேட்க
ஜெனிவாவின் மன்றத்தில் முழக்கஞ் செய்தீர்
பழியாகும் தொழிலாளர் நிலையை மாற்றிப்
பரிவுடனே அவர் நெஞ்சைத் தட்டித் தந்தீர்
விழியாகத் தொழிலாளர் உன்னைக் கண்டார்
வேதமுதற் தலைவனாகத் தானுங் கொண்டார்

பறித்திட்ட உரிமைகளை மீட்டுத் தந்தீர்
பக்குவமாய் நாட்டுரிமை பெற்றுத் தந்தீர்
உரிமையுடன் வீடொன்றைப் பெற்றுக் கொண்டு
உன்னதமாய் வாழ்வதற்கு வழியும் செய்தீர்
தரிசுநிலக் காணியதும் இல்லா தாரும்
தனக்கெனவோ ரிடத்தினையும் வாங்கச் செய்தீர்
எரியவிட்டு மின்விளக்கை இல்லந் தோறும்
எம்வாழ்வில் ஒளிவெள்ளம் பாயச் செய்தீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகலிரவாய்ப் பாடுபட்டு பள்ளிக்கூடம்
பகட்டாக மிளிர்ந்திடவே கட்டித் தந்தீர்
இகமதிலே எம்செல்வர் பட்டம் பெற்று
இறுமாப்பாய் நடைபோட ஏற்றங் கண்டீர்
சுகமாக வாழ்வதற்குத் தோட்ட மக்கள்
சுகாதாரப் பணிமனைகள் அமைத்துத் தந்தீர்
புகழாரஞ் சூட்டியுமை வாழ்த்துக் கூற
புரட்சியினால் சம்பளத்தைக் கூட்டச் செய்தீர்.

சிங்கத்தின் கர்ச்சனையை சிறிதேனும் மதியாது
சிறுநரியின் கூச்சலென்று சிந்தித்து நின்றாரை
பங்கமுறச் செய்ததுடன் பாரிகழச் செய்திட்டு
பாராளு மன்றத்தில் பகலவனாய்த் திகழ்ந்தவரே
அங்கமெலாம் தொழிலாளர் அதிலூறும் குருதியெலாம்
உயிர்மூச்சு என்றிருந்தீர், உணர்வெல்லாம் நம்மக்கள்
தங்குதடை இல்லாமல் என்றென்றும் இந்நாட்டில்
சுந்தரமாய் வாழ்வதற்கு வழிசமைத்த மன்னவன் நீ.

கோழைகளாய் இருந்தவரின் குணத்தை மாற்றி
கொடுமைகளை எதிர்க்கின்ற நெஞ்சங் காட்டி
ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சி நாளும்
ஏமாற்றும் எத்தர்களைப் பித்த ராக்கி
ஊளையிடும் நரிகளெனக் காட்டித் தந்தீர்
உம்மாலே தொழிலாளர் ஊக்கம் கொண்டார்
வாழையினம் தழைப்பது போல் மக்கள் வாழ்வும்
வளமாகச் செழிப்பதற்கு வழியுஞ் செய்தீர்.

தொண்டமான் குரல்தன்னைக் கேட்டால் போதும்
தொண்டுகிழ மாயிருப்போன் தானுங்கூட
அண்டைவீட்டுக் காரனையும் அழைத்துக் கொண்டு
அகமகிழ ஆர்ப்பரித்துத் தோளைத் தட்டி
சண்டாளச் சதியாளர் முதலாளி மாரின்
சரித்திரத்தை மாற்றுதற்கு முன்னே சென்று
திண்டாடும் மக்கள் துயர் தீர்க்க வென்று
தீரமுடன் போராட்டக் களத்தில் நிற்பான்.

கொழும்புத் துறைமுகத்தின் தொழிலாளர் பிரச்சினையும்
உருளவள்ளித் தோட்டத்தை உலுக்கிய பிரச்சினையும்
கொழுந்து விட்டெரித்த கொடுமையாம் நிலையினிலும்
குன்றாத உறுதியினால் கொண்டிருந்த வீரத்தை
பழுதில்லா உன்பணிக்கு பரிசென்று கொள்வோமா ?
வன்செயலால் அடிபட்டு வாட்டமுற்ற போதெல்லாம்
கொழுகொம்பாய் தானிருந்து கொடிபரட விட்டவுனை
காலங்கள் சென்றாலும் காவலனே மறப்போமா ?

தியாகத்தின் சிகரத்தை
சிந்தனையின் தீஞ்சுடரை
மயானமே வந்தாலும்
மயங்காத மன்னவனை
நியாயத்தின் பேருருவை
நிலைகுலையா நெஞ்சத்தை
தயாளத்தின் திருவுருவை
தரணியிலே மறந்திடவோ !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் இதய தெய்வம் - தங்கத் தலைவர் சௌ. தொண்டமான்



*இலங்கை - லிபியா விவசாய மற்றும் கால்நடை அபிவிருத்தி கூட்டு நிறுவனத்தின் தலைவர்*

பொன். சிவராஜா

*(முன்னாள் அமைச்சின் பொது ஜன தொடர்பு அதிகாரியும் இணைப்பு அதிகாரியும்.)*



இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களின் தனிப் பெரும் தலைவராக உருவாகி இறுதியில் உலகத் தமிழர்களின் தனிப் பெரும் தமிழ் தலைவன் என்ற நாமத்தைப் பெற்ற எங்கள் தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களுடைய பொதுஜனத் தொடர்பு அதிகாரியாகவும் இணைப்பு அதிகாரியாகவும் கடந்த 30 ஆண்டுகள் பணிபுரிய எனக்குக் கிடைத்த வாய்ப்பை பெரும் பேறாகவும் பெரும் புண்ணியமாகவும் கருதுகின்றேன்.

இப்படியான ஒரு வாய்ப்பு என்னைத் தேடிவந்த போது முதலில் ஏற்கனவே நான் பணிபுரிந்த தோட்ட நிர்வாகி தொழில் போன்று இதுவும் தொழிலாளர் களோடு நெருங்கி உறவாடும் தொழில்தானே என்று எண்ணினாலும், நான் ஐயா தொண்டமான் அவர்களுடன் சேர்ந்து அவருடைய பணிகளுக்கு உதவியாக சேவையாற்றச் சென்றது ஸ்ரீ இராமபிரான் ஸ்ரீசீதாபிராட்டியைத் தேடி இராமேஸ்வரத்தின் வழியாக இலங்கைக்கு புறப்பட்டார். குறுக்கே கடல், கடலில் ஓர் அணைக்கட்டு கட்டப்பட்ட போது அணில் ஒன்று தன்னால் ஸ்ரீ இராமபிரானுக்கு செய்யக்கூடிய உதவியாகக் கடல் மணலை எடுத்து வந்து கொடுத்து உதவி செய்ததைப் போன்றுதான் எங்கள் இதயங்களில் என்றும் தெய்வமாக ஒளிவீசிக் கொண்டிருக்கும் எங்கள் தங்கத் தலைவர் திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களுடைய நேரடிப் பார்வையில் அவரோடு எந்நேரமும் உடனிருந்து அல்லும் பகலும் அவர் நிழலில் அவருக்கு தொண்டு செய்ய எனக்கு கிடைத்த வாய்ப்புப் பெரும் பேறல்லவா? தலைவர் எஸ். தொண்டமான் அவர்கள் தென் இந்திய மாநிலங்களில் ஒன்றான தமிழ் நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் மூனாபுத்தூரில் 30.08.1913ம் ஆண்டில் ஒரு பெரும் கோடீஸ்வரராகத் தன் உழைப்பால் தன்னை உயர்த்திக் கொண்ட கடும் உழைப்பாளியான திரு. குமாரவேல் கருப்பையா பிள்ளைக்கும் சிற்றம்மைக்கும் மகனாகப் பிறந்தார்.

தந்தை தன் உழைப்பால் பல கோடிகளுக்கு எவ்வாறு அதிபதியானாரோ அதே போன்று தனது சமூக தொண்டின் மூலமாகத் தொழிலாளர்களின் இதயங்களை வென்ற, தமிழ் மக்களின் ஆற்றல் மிக்க கோடிக்கணக்கான இதயங்களை வென்ற கோடீஸ்வரராகத் திகழ்ந்தவர்தான் சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்கள் என்றால் மிகையாகாது.

தலைவர் தொண்டமான் அவர்கள் எல்லோர் மீதும் அன்பும் இரக்கமும் கொண்டவர். பிறருக்கு உதவ வேண்டும் என்பதிலும், பிரச்சினையோடு வருபவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதிலும் தீவிரமாகச் செயல்படுபவர். அவர் இ. தொ. கா. வின் தலைவராகச் சேவையாற்றிய காலத்திலும், அமைச்சராகப் பணியாற்றிய காலத்திலும் தனது சகல சக்தியையும் சகல வளங்களையும் உத்தியோகத்தர் களையும் ஊழியர்களையும், உதவியாளர்களையும் தனது அமைச்சையும், காங்கிரசையும் பொது மக்களின் பணிக்காகவும் சேவைக்காகவுமே பயன்படுத்தினார். இலங்கை வரலாற்றில் குறிப்பாகப் பெருந் தோட்டத்துறை வரலாற்றில் இ. தொ. கா. வின் தலைவராகவிருந்து அவர் சார்ந்த அவர் மீது பூரண நம்பிக்கை கொண்ட தொழிலாளர் பெருமக்களுக்காக அவர் நடத்திய பெரும் போராட்டங்கள் மலையகச் சரித்திரத்தில் வெற்றிக்கு மேல் வெற்றியைப் பெற்றுத் தந்த வரலாறுகளை ஒருபோதும் எவராலும் அழிக்க முடியாது என்பதுபோல் மறுக்கவும் முடியாது.

*நல்ல அமைச்சராய் நற்றொண்டு செய்துவரும்*
*வல்லதொரு தோட்டத் தொழிலாளர் - செல்வமே!*
*எண்பதை எட்டிப் பிடித்தெம் தொண்டமான்*
*தண்டமிழ்போல் வாழ்க தழைத்து.*

*—புலவர் ந. பன்னீர் செல்வம் எம். ஏ.*

*தொண்டமான் மக்கள் துயர்நீக்கும் தூயவராய்*
*கண்டார் கரங்குவிக்கும் கண்ணியராய் - பண்டை நாள்*
*சோழ அரசனாய்ச் சுந்தரனாய் வாழுகின்றார்*
*ஈழத் தமிழகத்தில் பார்.*

*—பேராசிரியர் கணபதி எம். ஏ., சென்னை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே போன்றுதான் அவர் தொழிற் சங்கத்தோடு தனது அரசியல் வாழ்க்கையையும் இணைத்துச் சேவையாற்றியபோது தோட்டப் பகுதி தமிழர்களுக்கு மட்டுமல்ல, கொழும்பு வாழ் தமிழர் களுக்கு மட்டுமல்ல வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கும் தேசிய ரீதியில் அவர் ஆற்றிய தொண்டு அவரை இலங்கையின் தேசியத் தலைவர்களில் ஒருவராகச் சகலரும் ஏற்றுக் கொண்டனர்.

ஒரு காலத்தில் இனத்துவேஷங்கள் கொண்டு அவரை எடைபோட்ட சில சிங்களத் தலைவர்கள் கூட அவர் தேசிய ரீதியில் இலங்கையின் நலன் கருதி அவர் ஆற்றிய தொண்டைக் கண்டு ஆச்சரியப்பட்டதோடு அவரைத் தேசிய தலைவர்கள் பட்டியலில் சேர்த்துக் கொண்டனர்.

இலங்கைப் பாராளுமன்ற வரலாற்றில் நீண்டகாலம் பிரதிநிதியாகவும் அமைச்சராகவும் இருந்த மிக ஒரு சிலரில் மிக நீண்டகாலம் பதவி வகித்தவர் என்ற பெருமைக்குரியவர் நம் தலைவர். அமைச்சர் தொண்டமான் அவர்கள் தமது தொழிலாளர் வர்க்கத்திற்காகவும் தமிழ் இனத்திற்காகவும் சேவை யாற்றுவதில் சில சந்தர்ப்பங்களில் சட்டதிட்டங்களையும், உரிமைகளையுமே மீறி நியாயம் கிடைக்கச் செய்தது மட்டுமல்ல மரபு மீறியது கூட நியாயமான செயல்தான் என்று சகலரும் ஒத்துக் கொண்டு அவர் கோரிக்கையை ஆதரிப்பதை நமது காலத்தில் நாம் காண்ணால் கண்ட நிகழ்வுகள்.

1984ம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசில் முக்கிய அமைச்சராக இருந்துகொண்டு தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கு அரசு தடங்கலாக இருக்கின்றது என்று கண்டதும் பகிரங்கமாக அறிவித்து ஒரு பெரும் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தி மாபெரும் வெற்றியைத் தனது மக்களுக்கு ஈட்டிக் கொடுத்தார். தொழிலாளர் வர்க்கமே ஆச்சரியப்படும் அளவுக்கு ஓர் அரசில் இருந்து கொண்டே அந்த அரசுக்கு எதிராகத் தனது தொழிலாளர்களை ஒன்றுதிரட்டி பத்து நாட்கள் பெரும் வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றைச் செய்து அரசை அடிபணிய வைத்து வெற்றிவாகை சூடியது மட்டுமல்லாது அரசும் ஜனாதிபதியும் சமரசப் பேச்சுவார்த்தைக்கு அழைத்துச் சம்பள உயர்வை அன்றைய நிலையில் பன்மடங்காக உயர்த்திக் கொடுத்தது. அவரது செயல் நியாயமானதே என்று ஒத்துக்கொண்டு தொடர்ந்தும் அவரை அமைச்சராக வைத்துக் கொண்டது பெரும் உலக சாதனை அல்லவா; அது மட்டுமா? ஐக்கிய தேசியக் கட்சியில் சிறிது காலம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அஞ்சா நெஞ்சன் திரு. அ. அமிர்தலிங்கம் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் நெவில் பெர்ணான்டோ கொண்டு வந்தபோது அரசாங்கத்தை ஆதரிக்கும் உறுப்பினராக அரசாங்கத்தின் அமைச்சராக இருந்த நம் தலைவர் எஸ். தொண்டமான் அவர்கள் தமிழன் என்று ஓர் இனமுண்டு. தனியே அவர்களுக்கொரு குறையுமுண்டு என்பதை உறுதிப்படுத்தக்கூடிய முறையிலும், தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டக் கூடியதாகவும் தமிழன் ஒருவனுக்கு இடுக்கண் வந்தால் மற்றுமொரு தமிழன் எந்த அந்தஸ்தில் இருந்தாலும் பொறுத்துக் கொண்டிருக்கக்கூடாது என்று அடித்துக் கூறுவதுபோல் அந்த அரசின் மசோதாவை எதிர்த்துப் பாராளுமன்றத்தில் முழங்கியதோடு இது திரு. அமிர்தலிங்கத்திற்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட மசோதா அல்ல, இலங்கை வாழ் சகல தமிழ் மக்களுக்கும் எதிராகக் கொண்டு வரப்பட்ட ஓர் கொடுமையான தீர்மானம். இத்தீர்மானத்தின் மூலம் தமிழ் மக்களைப் பிரித்து அவர்களை எதிர்காலத்தில் அழித்து விடக்கூடியதாக செயலாற்றப் போகிறது. இதன் விளைவுகளை அரசும் சிங்கள மக்களுமே பொறுப்பேற்க வேண்டும் என்று அரசுக்கு எதிராகச் சாடினார்.

அது உண்மை என்பதை அடுத்தடுத்து வரும் அரசுகள் அனுபவிப்பது மட்டுமல்ல அமைச்சர் தொண்டமானின் தீர்க்கதரிசனத்தை எண்ணி வியக்கின்றன.

எனவே நமது காலத்தில் நம்மோடு நமக்கு மத்தியிலேயே வாழ்ந்து முடித்த மாபெரும் சக்தியான மாமலை போன்று உயர்ந்து கம்பீரமாகக் காட்சி தந்த நமது அரும்பெரும் தலைவர் உள்ளம் உள்ளளவும், உலகம் உள்ளளவும் வாழ்வாங்கு வாழ்வார். அவர் நாமம் காக்க, அவர் ஆத்மா சாந்தியடைய அவர் காட்டிய வழியில் அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்று சேவை யாற்றுவதே நமது பொறுப்பும் கடமையும் என்பதை உணர்ந்து செயல்படுவோமாக.

*ஆற்றல் மறவர்நல் அஞ்சாத சிங்கமாம்*
*ஏற்றம் தொழிலாளர் ஏந்தி மகிழ் - மாற்றங்கள்*
*தோட்டப் புறம்இலங்கை தோற்றுவித்த தொண்டமான்*
*பாட்டாலே வாழ்த்தும் பயன்.*

**– பெருங்கவிக்கோ, டாக்டர் வா. மு. சேதுராமன், சென்னை.**

*வித்து முளைத்துவிளை வெற்றிக் கனிகளைப்போல்*
*ஒத்துரிமை கண்ட உயர் தலைவன் - எத்திக்கும்*
*தண்டமிழர் வாழத் தகுதிச் செயல்முடிக்கும்*
*தொண்டமான் அன்புச் சுடர்.*

**–கவிஞர் வா. மு. சே. ஆண்டவர், சென்னை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் மலையகத்தைக் காத்திடுங்கள்

நரரளை வே. சிவகுருநாதன்

தொண்டா என்ற பெரும் குயவன்
தோண்டி மண்ணைப் பதப்படுத்தி
கண்டோரெல்லாம் வியந்திடவே
கடைந்து கடைந்து வடிவமைத்து
நின்று நிலைத்து நிதானமுடன்
நிறையச் சிற்ப அழகுடனே
கொண்டு வந்த பாத்திரந்தான்
கோலமுடைய மலையகமே.

வண்டுகளாடும் சோலையிலே
மதுர யாழின் இசையுடனே
பெண்டுகள் பாடி மகிழ்வுடனே
பேரிகை முழங்க நடனமிட
தொண்டு வந்த பாத்திரத்தை
கூடையில் சுமந்து வந்திடுவீர்
மேடையமைத்து அழகுடனே
மேளங்கள் முழங்க வைத்திடுவீர்.

வந்தவரெல்லாம் நம்மவரென் (று)
நம்பியே மோசம் போகாமல்
கம்பிகள் கொண்டு வேலியிட்டு
கண்ணின் இமைபோல் காத்திடுங்கள்
நந்தவனத்து ஆண்டிகளை
நாடவிடாது காத்திடுங்கள்
மொந்தைக் கள்ளின் வெறியுடனே
மோதினால் பாத்திரம் உடைந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபதாம் நூற்றாண்டில் மலையகக் காந்தி



எஸ். கிருஸ்ணசுவாமி
*(அகில இலங்கை சமாதான நீதவான்)*
*(அட்டன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபைத் தலைவர்)*



ஆம்! அன்று மலையகத்தில் நாதியற்ற மக்களாக அடிமையுற்று வாழ்ந்த இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் கண்ணீரைத் துடைக்கவென்று தோன்றிய மாமனிதர் மலையகக் காந்தி திரு. சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்கள்.

அவர் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு முன் எமது வம்சாவளித் தமிழ் மக்கள் படும் இன்னல்களைக் கண்டு மனம் நொந்து வேதனை அடைந்தார். அந்த இன்னல்களை எப்படி நீக்குவது? என அதற்குரிய வழிமுறைகளைக் காணத் துடித்து அயராது அல்லும் பகலும் பாடுபட்டார்.

அதன் வழித் தோன்றலாக 1939ம் ஆண்டு காலகட்டத்தில், இலங்கை, இந்திய காங்கிரஸ் என்ற அமைப்பை உருவாக்கி, இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் துயர் துடைக்க அஞ்சா நெஞ்சுறுதியுடன் பணியைத் தொடங்கினார். திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள்.

அப்பப்பா! எத்தனை இன்னல்கள், இடர்கள். அத்தனையும் தனது சொல்வன்மை என்ற ஆயுதத் தாலுடைத்தெறிந்தார்.

அன்று அன்னல் தொழிற் சங்க வாதியாகத் தோன்றி, இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் குறைகளை நேரிற் கண்டறிந்து, அதற்குரிய பரிகாரங்களைக் கண்டறியக் கடுமையாக முற்பட்டார். அதற்காகப் பல கரடுமுரடான பாதைகளில் செல்ல நேரிட்ட போதும் மனம் சளைக்கவில்லை. அது மட்டுமல்ல அத்தருணத்தில் அவர் பல தீய எண்ணம் படைத்த அரசியல்வாதிகளையும் சந்திக்கவேண்டிய காலமாக அமைந்திருந்தது.

அப்பொழுது 1949ம் ஆண்டு மலர்ந்து நாடு சுதந்திரம் அடைந்தது. ஆனால் இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் சுதந்திரத்தை இழந்து நாடற்றவர்களாக ஆக்கப்பட்டு பெருமூச்செறிந்தார்கள். அன்று எமது மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டு கண்ணீரும் கம்பலையுமாக நிர்கதியானார்கள்.

அன்றுதான் "மாமனிதர் திரு. சௌமிய மூர்த்தி தொண்டமான்" என்ற மாபெரும் சக்தி உத்வேகத்துடன் செயல்படத் தொடங்கியது, அதுவும் காந்திய வழியில் அஹிம்சை போராட்டமாக!

அதன் பலனாகப் பல இந்தியத் தலைவர் களையும் போய் சந்தித்து மலையக இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் குறைகளை எடுத்தியம்பினார்.

அதன் பின் நேரு கொத்தலாவலை போன்ற ஒப்பந்தம் முதல் பல ஒப்பந்தங்கள் ஏற்படத்தொடங்கின. ஆனால் அந்த ஒப்பந்தங்கள் யாவும் இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் குறைகளைத் தீர்ப்பனவாக அமையவில்லை என்பதை உணர்ந்து வேதனையுடன் அயராது மேலும் அதற்குரிய வழியைக் காணத் துரிதமாகச் செயற்பட்டார்.

---

*வாதாட வல்லார், வளையாத போர்க் குணத்தார்*
*சூதாடிக் கூட்டத்தைத் தோற்கடிப்பார் - சாதனையில்*
*வெல்லாத தில்லை, விடிவிளக்கு ! தொண்டமான்*
*மல்லாண்ட திண்தோளர் காண்.*

*– புலவர் மரியதாசு, உறையூர்.*

*திருக்குறள்போல் சின்ன திருவுருவம், ஆடிப்*
*பெருக்கைப் போல் உள்ளம் பெரியர் - கருக்கிருட்டை*
*மாற்றும் சுடர்நிலவு, மக்கள் பெருந்தலைவர்*
*போற்றும் புகழ்த் தொண்ட மான்.*

*– கவிஞர் இ. விஜயசோழன், சென்னை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் வழித் தோன்றலாக 1960ம் ஆண்டுக்குப் பிந்திய காலகட்டத்தில் அப்பொழுது இருந்த அரசாங்கம் அவரை நியமன எம். பி. யாக நியமித்தது. அதனை ஏற்ற திரு சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் ஒரே தலைவனாக நியமன எம். பி. யாக பாராளுமன்றம் என்ற பாருக்குள்ளே தனது மக்களின் குறைகளை எடுத்துரைக்கவென்று அஹிம்சா வாதியாக அடி எடுத்து வைத்தார்.

அன்று முதல் அவர் பணி விரிவடையத் தொடங்கியது. அப்பொழுது அரசாங்கத்திலிருந்த தலைவர்களின் காதுகளில் தனது மலையக இந்தியத் தமிழ் மக்களின் குறைகளைப் பக்குவமாக சாணக்கியமாக எடுத்துரைத்து வந்தார். அதையும் ஏற்றுக்கொள்ளாமல் தடுக்க முயன்ற எத்தனை வகையான பேரினவாத அமைச்சர்கள், கள்ளத்தோணி என்ற பட்டத்தை இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் மீது சூட்டி பரிகாசம் பண்ணினார்கள்.

அதற்கெல்லாம் அஞ்சுவாரா? இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய இரும்புக் கரம் கொண்ட மலையக காந்தி! திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" என்ற தாரக மந்திரத்தை ஆயுதமாகப் பயன்படுத்தி அஹிம்சா வழியில் இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் இன்னல்களைத் தீர்க்கப் போராடினார்.

அப்போதய காலகட்டத்தில் தான் இன்னொரு பேரிடி இந்திய வம்சாவளித் தமிழர்களின் தலையை வந்து தாக்கியது. அதுதான் இந்திய வம்சாவளித் தமிழர்கள் ஐந்தேகால் லட்சம் பேர்களை இந்தியாவுக்கு அனுப்பவும் மூன்றேகால் லட்சம் பேருக்கு இலங்கை பிரஜா உரிமை கொடுக்க வேண்டும் என்ற ஒப்பந்தம். அந்த ஒப்பந்தம் அஹிம்சாமூர்த்தியைச் சோதனைக்குள்ளாக்கியது. திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் துவண்டு விடவில்லை, தொடர்ந்து பல சத்தியாகிரகங்களை நடத்தினார்.

அதற்குப் பின்பு வந்த ஆட்சியாளர்கள் அவரின் வல்லமைச் சக்தியை உணரத் தொடங்கினர். அதன் பயனாக அவருக்குப் பாராளுமன்ற நியமன உறுப்பினராக பல நியமனங்களை வழங்கினார்கள். அப்பொழுதும் பாராளுமன்றத்தில் நியமன உறுப்பினராக இருந்து கொண்டு தனது மக்களின் குறைகளைப் போக்கத் தொழிற் சங்க தலைவர் என்ற ரீதியில் பல சத்தியாக்கிரகப் போராட்டங்களைத் துணிவுடன் நடத்தி வெற்றிகண்டார்.

அந்த வெற்றிதான் 1977ம் ஆண்டு அன்று நுவரெலியா மஸ்கெலியா தொகுதியில் அஹிம்சா மூர்த்தி மலையக காந்தி திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களைப் பாராளுமன்றத்தின் மூன்றாவது எம். பி. யாக முடிசூடா மன்னனாகத் தெரிவு செய்து, எமது இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதியாகச் சேவையாற்ற, வீறுநடைகொண்டு பாராளுமன்றம் செல்ல வழி வகுத்தது.

அத்தருணத்தில்தான் திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் உள்ளத்தில் நெடு நாட்களாக எண்ணி இருந்த எண்ணங்கள் பிரதி பலிக்கத் தொடங்கின. அதுதான் எமது மலையகச் சிறார்கள் படித்து பல்கலைக்கழகம் சென்று பட்டங்கள் பெற்று பதவிகளை வகித்து அனைத்து மக்களோடும் சரி சமமாக உரிமையுடன் வாழ வேண்டும் என்ற அவா!

அதற்கு அடித்தளமாகத்தான் முதற்படியாக மலையகத் தோட்டங்கள் தோறும் கல்விக் கூடங்களை அமைத்து அதில் மலையக இளைஞர், யுவதிகளை ஆசிரியர், ஆசிரியையாகப் பணியாற்றச் செய்து மலையகம் ஒரு கலையகமாக மாற வேண்டும் என்ற அவரின் எண்ணம் சுடர்விட்டு எரியத் தொடங்கியது.

அந்த அஹிம்சா மூர்த்தியின் கனவு இன்று நனவாக மாறி மலையகம் எங்கும் கலைக்கூடமாக பர்ணமித்து இளைஞர், யுவதிகள், ஆசிரியர், ஆசிரியையாகப் பணிபுரியும் காட்சியை யாரும்

*உலகத் தமிழர் உவக்கும் தலைவர்*
*திலகம் வகிக்கும் திருவார் - கலகமற்ற*
*ஈழம் படைக்க இடையறாது தொண்டாற்றும்*
*சோழர் குலத்து விளக்கு*
*– ஓவியர் கோ. கவிக்குமார், சென்னை.*

*பட்டம் பதவி பகட்டு விரும்பாத*
*திட்ட அறிஞர்; திறலுடையார் - சட்டம்*
*படிக்காத மேதை; பலகற்ற ஞானி !*
*நடிக்காத பண்பாளர் காண்.*
*– கவிஞர் கே. வி. சுப்பிரமணியம், பூந்தமல்லி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகுவில் ஜீரணித்து மறக்கவோ, மறைக்கவோ முடியாது. அவரின் சேவையை பொன்னேட்டில்தான் பதியவேண்டும்.

அவர் அன்று காட்டிய வழிதான் இன்று எமது மாணவ, மாணவிகள் பயமின்றிப் பல்கலைகழகங்கள் சென்று விட்டார்கள். அவரிடம் அரசியல் பயின்றவர்கள் இன்று நாடாளுமன்றம், மாகாண சபை, பிரதேச சபை, நகர சபை போன்ற பல துறைகளிலும் மக்களுக்குச் சேவை செய்கின்றார்கள் என்றால் அதற்குக் காரண கர்த்தா மலையக மைந்தன் அஹிம்சாமூர்த்தி திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள்தான்.

அது மட்டுமல்ல அவரின் சேவை. அன்று எமது மலையக மக்களின் உரிமைகளை யார் பறித்தெடுத்தார்களோ, அவர்களிடமே பாராளு மன்றத்தில் அமைச்சராக இருந்து கொண்டு மிக சாதூர்த்தியமாக, சாணக்கியமாக அஹிம்சா வழியில் நின்று பெற்றுக் கொடுத்த அவரின் தீர்க்க தரிசனத்தை யாரும் சாமான்யமாக எடைபோட முடியாது.

ஆட்சியாளர்கள் அவரின் தாரக மந்திரப் பேச்சைக் கேட்டு "மகுடியை கேட்ட நாகம் போல் மாறி பல எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் எமது மக்களுக்குப் பல உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தார்கள் என்றால் அது அவரின் முதிர்ச்சியான தீர்க்க தரிசனமே.

அவரின் உயர்ந்த நோக்கின் காரணமாகத் தான் இன்று மலையக இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் உரிமையுடன் தலை நிமிர்ந்து வாழ்கின்றார்கள் என்றால் அது இருபதாம் நூற்றாண்டின் விடிவெள்ளியாக உதித்த மலையகத்தின் அஹிம்சா மூர்த்தி தொண்டமான் ஐயா அவர்களின் அயராத உழைப்பின் காரணமே!

அவரின் இன்னொரு அவா! மலையக இந்திய வம்சாவளித் தமிழ் இளைஞர், யுவதிகள் பல கைத்தொழிற்துறைகளில் தமிழில் பயிற்சி பெறுவதற்காக அட்டன் மாநகரின் கண் அழகிய தொழில் நுட்பக் கல்லூரியை நிறுவியுள்ளார்.

அந்தோ! அதைத் திறந்து வைத்து அக்காட்சியைக் காண்பதற்கு முன் காலதேவன் அவரை விண்ணுலக சேவைக்கு அழைத்துவிட்டார்.

மக்கள் மட்டுமா பதறினார்கள், இல்லை மலையகத்தின் பசுமையே பதறிச் சோகமிழந்து தவித்துவிட்டது.

அன்னார் மலையக இந்திய வம்சாவளி மக்களுக்கு மட்டுமல்ல அனைத்து இன மக்களுக்கும் சேவை செய்ய தொழிற் சங்கவாதியாக, பாராளுமன்ற உறுப்பினராக, அமைச்சராக, மலையகமுடிசூடா மன்னனாக, அஹிம்சாமூர்த்தி காந்தியாக தமிழ் சுற்று வருடம் அறுபது போல் அன்னார் ஐம்பது வருடம் சேவையாற்றி பூதவுடல் புகமுடம்பாகி மலையகத்தை வலம் வந்து தலை நகரில் அக்கினியுடன் சங்கமமாகி ஆழியிலே சேர்ந்து விட்டார்கள் அமரர் திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயா அவர்கள்.

*"வையகத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப்படுவான் — குறள்.*

"தொண்டமான் என்ற சக்திக்கு நிகர் தொண்டமானே!
அவரின் வழியில் இன்னொரு இளம் சிங்கத்தை"யும் எமக்கு அளித்திருக்கின்றார்கள். அவர்தான்
திரு. ஆறுமுகம் தொண்டமான் அவர்கள்.

மலையகத்தின் தமிழினமே! இளம் தலைமுறையினரே! அன்னார் விட்டுச் சென்ற பணியை அயராது தொடர்ந்து அவர் காட்டிய வழியில் ஒன்றுபட்டு சேவை செய்வதே நாம் அனைவரும் அவருக்குச் செய்யும் கடமையும், பிரதிபலனுமாகும். அப்பொழுதுதான் அவரின் ஆத்மா சாந்தியடையும்.

*"அவரின் சேவையை எம்மால் அளந்து விட முடியாது"*

எமக்கு தமிழ்த்தாய் தந்த தனிப்பெரும் தலைவனின் நாமம் என்றென்றும், எல்லோரின் உள்ளங்களிலும் ஒலிக்கட்டும்.

ஓம் சாந்தி

*நூறாண்டும் வாழ்க, நுவலுபதி னாறென்னும்*
*பேறாண்டும் வாழ்க, பெருமையுடன் - பாராண்டும்*
*சீராண்டும் மிக்க சிறப்பாண்டும் வாழ்கவே !*
*யாராண்டும் வாழ்க இனிது.*
*— கவிஞர் புத்தூரான், புதுப்பட்டி, மதுரை.*

*பல்லோர்க்கும் வாழ்வருளும் பண்பாளர் தொண்டமான்*
*நல்லமுத முத்துவிழா கண்டுவந்தார்- தெள்ளமுதே!*
*வல்லதமிழ் வாயுடையார் எல்லாரும் வாழ்த்துரைத்தார்*
*பல்லாண்டு வாழ்க பொலிந்து.*
*— புலவர் செ. வரதராசன், கள்ளக்குறிச்சி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயம் நிறைந்த தலைவர் தொண்டமான்!





*"சாமஸ்ரீ சமூக திலகம்"*
**பி. மோகன் சுப்ரமணியம்**
*அகில இலங்கை சமாதான நீதவான், இணைப்பாளர்,*
*தொழிலாளர் சேவை நிலையம், அட்டன்.*

இலங்கைக்கு இந்திய வம்சாவளி மக்கள் 1820களில் பிரித்தானியர்களால் அழைத்து வரப்பட்டார்கள். அக்காலம் முதலாளித்துவம் வளர்ச்சி பெறாத காலம். நிலப்பிரபுத்துவ சமூக கட்டமைப்புக் கொண்டகாலம். தென் இந்தியாவில் தமிழ் நாட்டின் திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள கிராமங்களில் நிலப்பிரபுக் களுக்கு கொத்தடிமைகளாக வாழ்ந்த இம்மக்களுக்கு அந்தச் சமூக அமைப்பை உடைத்து எறிந்து சுதந்திரப் புருஷர்களாக வாழ வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. அதற்கு மற்றுமொரு காரணம் உணவுப் பஞ்சம்.

அப்போது இலங்கையும் இந்தியாவும் பிரித்தானியர்களின் ஆட்சியில் இருந்தமையால் பிரித்தானியர்களுக்கு மிகவும் சுலபமாக இருந்தது. அங்குள்ள இம்மக்களுக்கு ஆசைவார்த்தை காட்டியும் கபடத்தனமாகவும், தந்திரமாகவும் அழைத்து வருவதற்கும் அக்காலம் இன்று போல் இருக்கவில்லை. பாய்மரத் தோணியில் கடல் பயணம். அதன்பின் தலை மன்னாரில் இருந்து கால்நடையாக மாத்தளை வழியாகப் காடுகளின் ஊடாக நடந்து வந்தார்கள். கொடிய மிருகங்களுக்கும் விஷஜந்துகளுக்கும் இரை யானவர்கள் அநேகம். அத்தோடு இயற்கையாக வரும் நோய்களுக்கு ஆளாகி இறந்தவர்கள் அனேகம். தன் உடன் பிறப்புகளின்மறைவும் பிள்ளைகளின் இறப்பையும் அப்படியே விட்டு விட்டுத் தனது நோக்கம் நிறைவேறத் தோட்டப் பகுதிகளுக்கு வந்து காட்டையழித்து களணியாக்கிய இம்மக்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கவோ அவர்களை வழி நடத்தவோ சமூக உணர்வுடையவர்களாக யாரும் இருக்கவில்லை.

1820ஆம் ஆண்டு முதல் கோப்பி பயிர் செய்யப்பட்ட போது நிரந்தரத் தொழிலாளர்கள் இங்கு இருக்கவில்லை. இதுவரை காலம் பண்டப் பொருட்களுக்கு மட்டும் தனது உடல் உழைப்பை விற்று வாழ்ந்த இந்த மக்கள் உழைப்புக்கு ஊதியம் பெறும் புதிய தொழிலாளர் வர்க்கமாக பரிணமித்தார்கள். 1865ம் ஆண்டு தேயிலைப் பயிர்ச் செய்கையின் பின் இங்கு நிரந்தரத் தொழிலாளர்கள் தேவைப்பட்டது. முன்பு கோப்பிக் காலம் போல் இங்கு உழைக்கவும், இந்தியாவிற்குப் போய் குடும்பங்களைப் பார்ப்பது போன்ற நிலை தோன்றவில்லை.

இம்மக்கள் இங்கு தொடர்ந்து வாழும் நிலை தோன்றவே தமது குடும்பங்களுடன் இலட்சக் கணக்கான மக்கள் இங்கு வாழத் தொடங்கினார்கள். அப்போதும் இவர்கள் பிரித்தானியத் தோட்ட துரைமார்களுக்கு அடிமையாகவே வாழ்ந்தார்கள். உரிமைகளைப் பற்றி பேசவோ, கேட்கவோ ஆள் இருக்கவில்லை. 1893ஆம் ஆண்டு நடைபெற்ற "கேவ் அன் கம்பனி" அச்சுத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் தான் இங்குள்ள அனைத்துப் பாட்டாளி வர்க்கத்தையும் போராடத் தூண்டியது. இது சரித்திரமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு.

*பாடு புகழ்ப் பாரி ! படர்முல்லை வாசம், நற்*
*பீடுகெழு தோட்டத்துப் பெம்மானாம் - ஏடுபுகழ்*
*தென்னாட்டுத் தீரர் ! திகழ்மறவர் தோன்றலாம்*
*பன்னாட்டுக் கீர்த்தி பெற்றார் பார்.*

*- புலவர் செங்குட்டுவன், பூவாளூர்.*

*அரும்பி மலராத அவ்வயதில் ஈழம்*
*விரும்பி நடந்திட்ட வீரர் - திரும்பித்தான்*
*தாய்நாடு வந்தே தடுமாறிப் போகாமல்*
*போயங் கிருந்த புயல்*

*- கவிஞர் மணிமொழியன், சென்னை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1920ம் ஆண்டளவில் 100 வருடங்களுக்குப் பின் இம்மக்களுக்குத் தொழிற்சங்க ரீதியான தொடர்புகளை வைத்துக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. அப்போது A.E. குணசிங்க தான் இலங்கையில் தொழிற்சங்க முன்னோடியாகத் திகழ்ந்தார். அவருடன் இந்திய வம்சாவளி மக்களின் தொழிற்சங்கத் தலைவராக இருந்த திரு.கோ.நடேச ஐயர் இணைந்து செயல்பட்டார். காலப் போக்கில் குணசிங்க அவர்கள் இனவாதியாக மாறியதன் பின் நடேச ஐயர் தனியாகத் தோட்ட தொழிலாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முனைந்தார். இவருடன் அவரின் பாரியார் திருமதி மீனாட்சியம்மாள் தோட்டம் தோட்டமாகச் சென்று பெரிய கங்காணிமார்களின் அடக்கு முறையில் இருந்த தொழிலாளர்களை மீட்கத் தோட்டங்கள் தோறும் சென்று பாட்டுப் பாடி அவர்களை விழிப்படையச் செய்தார். இக்காலத்தில் துடிப்புள்ள இளைஞராக இருந்த தொண்டமான் அவர்கள் வசதியுடன் வாழ்ந்த காலம். பல தோட்டங்களுக்குச் சொந்தக்காரர். இவ் வாறானவர்கள் தங்களின் சொந்த வியாபாரத்தை வெற்றியுடன் நடத்தவே முனைவார்கள். அப்படியான ஓர் சமூகக் கட்டமைப்பு தான், 1939களில் இருந்தது. இருப்பினும் இந்தக் கட்டமைப்பைத் தகர்த்தெறிந்து தனது இன சமூகத்திற்குச் சேவை செய்ய முன் வந்தார் என்றால் அவரின் சேவை மனப்பான்மையும் சமூகப் பற்றும் எப்படியானது என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது. சமூகத்தின் உயர் மட்ட வகுப்பில் பிறந்து வாழ்ந்த இவர் ஏழை மக்களுக்காகச் சேவை செய்யத் தன்னை அர்ப்பணித்தவர். அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் 1935ஆம் ஆண்டளவில் சமதர்ம நோக்குடைய மார்க்சீய லெனிஸக் கொள்கைகளைக் கொண்ட பாட்டாளி வர்க்க சிந்தனையுடைய இடது சாரித் தொழிற்சங்கங்களும் அரசியல் இயக்கங்களும் தொழிலாளர்கள் மத்தியில் இயங்கத் தொடங்கின. 1945ம் ஆண்டு இரண்டாவது உலக யுத்தம் நடை பெற்றுக் கொண்டு இருந்தது. ஹிட்லரின் ஆக்கிரமிப்புப் படையினை சோவியத் சோஷலிச செம்படையினர் வெற்றி கொண்டனர். வெற்றி கண்ட இடங்களில் சோஷலிச அரசுகள் தோற்றுவிக்கப்பட்டன. அதே சமயம் காலனி நாடுகளில் உள்ள மக்களும் தேசிய இயக்கங்களும் சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டிருந்தனர். இடது சாரி இயக்கங்களும், தலைவர்களும் தீவிரமாக சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடவும், போராட்டத்தின் முன்னணிப் படையாக இவர்கள் செயல் பட்டதால் ஆளும் அரசுகள் இந்த இடது சாரி இயக்கத் தலைவர்களைச் சிறைப் பிடிக்கவும் இடதுசாரி இயக்கங்களை தடைசெய்து இப்போராட்டத்தினை அடக்கிவிடலாமென்று நினைத்தும் செயல்பட்டதால் இவர்கள் இரகசியமாகச் செயல் பட வேண்டிய நிலை தோன்றியது.

இக்காலத்தில் இந்தியாவில் ஈ. வே. ரா. பெரியார் அவர்களின் சுயமரியாதை இயக்கம் வேரூன்ற ஆரம்பித்தது. மூட நம்பிக்கையில் இருந்த மக்களுக்குப் பகுத்தறிவைப் புகட்டியது, ஜாதி அடக்குமுறைக்கு எதிராக போராடிக் கொண்டிருந்தது. அதே உணர்வு களுடன் இலங்கையிலும் ஈ. வே. ரா. பெரியார் அவர்களின் கொள்கையைப் பின்பற்றி சுயமரியாதை இயக்கம் செயல்படத் தொடங்கியது. அதன் பின்னணியில் தோன்றிய தேசியவாதமும், தேசிய உணர்வும்தான் இலங்கையில் வாழ்ந்த இந்திய வம்சாவளி மக்கள் மத்தியிலும் தோன்றி தலைவர்கள் ஒன்றிணைந்து இலங்கை இந்திய காங்கிரசை தோற்றுவித்தார்கள். இலங்கை இந்திய காங்கிரஸில் தன்னை இணைத்துக் கொண்ட அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்கள் இவ் இயக்கத்தில் மிகத் தீவிரமாகச் செயல்பட்டதன் பயனாக இந்த அமைப்பில் பல பொறுப்பு மிக்க பதவிகளை வகித்தார். காலப்போக்கில் இலங்கை இந்தியக் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசாக மாற வேண்டிய நிலை ஏற்பட்டது. காரணம் பெரும்பான்மை இந்திய மக்கள் தொழிலாளராக இருந்ததே. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தோற்றத்துடன் மிகத் தீவிரமாக இவ் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்ட தலைவர் தொண்டமான் அவர்கள் அப்போது கம்பளையில் நடைபெற்ற இ. தொ. கா. வின் வருடாந்த மகா நாட்டு வரவேற்புக் கமிட்டித் தலைவராக இருந்து அடிமட்ட மக்களுடன் தன்னைபின்னிப் பிணைத்துக்

*காடு மணக்கின்ற கற்பூரச் சொல்லரசு*
*நாடு மதிக்கின்ற நல்லரசு - தேடரிய*
*நீதி நிலையம்; நிறைமாந்தர் வள்ளலாரின்*
*சோதியே அன்னார் சுகம்.*

*— கோ. அரங்கநாதன், சமயபுரம்.*

*உறவுக்குக் கையும் உரிமைக்குப் போரும்*
*தருகின்ற கொள்கைத் தணலாம் - வருகின்ற*
*போரினிலே வெற்றியினைப் பூப்பதற்கு வைப்பவராம்*
*பாரினிலே தொண்டமான் போல் யார்?*

*— புலவர் காமராசன், கூடலூர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர். பாமர பாட்டாளி மக்களின் கூட்டாளியாகச் சுறுசுறுப்பாக இயங்கியதனால் அவரைத்தேடி மிகப்பெரிய இ. தொ. கா. தலைவர் பதவி அவருக்கு வந்தது. சிலருக்கு பதவியினால் பெருமை உண்டாகும். ஆனால் இவரோ பதவிக்குப் பெருமை சேர்த்தவர். 1950 களில் இருந்து சுமார் 50 வருடம் தென்னாசியாவில் மிகப்பெரிய தொழிற்சங்கத்திற்கு தலைமை கொடுத்தவர். முதலாளித்துவம் தோன்றிய காலகட்டத்தில் இப்படியான இயக்கத்திற்கு தலைமை கொடுப்பது இலேசுப்பட்ட காரியம் அல்ல. 1947ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவர். இலங்கை பிரித்தானியாவிடமிருந்து 1948இல் சுதந்திரம் பெற்றது. அதே 1948ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17ஆம் திகதி பாராளுமன்றத்தில் விசேட சட்டமூலம் ஒன்று கொண்டு வந்து இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களின் பிராஜா வுரிமையையும் வாக்குரிமையையும் தேசபிதா என்று சொல்லப்படும் ஐ. தே. கா.வின் ஸ்தாபகரும் தலைவரும் இலங்கையின் முதலாவது பிரதமருமான டி. எஸ். சேனநாயக்க அவர்களால் பறிக்கப்பட்டது எமது சமூகத்தை நாதியற்ற, நாடற்ற சமூகமாக நற்றாற்றில் விடப்பட்டார்கள். 1931ஆம் ஆண்டு இலங்கையில் அறிமுகப்படுத்திய சர்வஜன வாக்குரிமை சகல மக்களுக்கும் ஏழை, பணக்காரர், படித்தவர், பாமரர், ஆண், பெண் என்று வேற்றுமை இல்லாமல் வழங்கப்பட்டது. இவ்வடிப்படை உரிமையைச் சுமார் (1948 இல்) 130 வருடங்கள் இந்த நாட்டில் வாழ்ந்த இந்திய சமூகத்தின் உரிமையை ஒரே நாளில் இல்லாமல் செய்ததன் விளைவுதான் சுமார் 40 வருடங்கள் எங்களை இந்த நாட்டில் தேசிய நீரோட்டத்தில் இணைய விடாமல் தடுத்தது. எமது முன்னேற்றத்தை தடை செய்து எமது சமூகத்தை தோட்டங்களுக்குள்ளேயே முடக்கி கொடிய படுபாதகச் செயலைச் செய்தவர்தான் தேசபிதா டீ. எஸ். சேனநாயக்கா.

எமது மக்களுக்கு இருந்த இவ்வடிப்படை உரிமையைப் பறித்த இக்கொடும் செயலைக் கண்டித்து அமரர் தொண்டமான் அவர்கள் 1951ம் ஆண்டு கொழும்பு காலிமுகத்திடலில் உண்ணா விரதமிருந்தார். அப்போது டி. எஸ். சின் ஆட்சியாளர்கள் குதிரையை விட்டு அடித்து விரட்டி இப்போராட்டத்தைக் கலைத்தார்கள். அப்படி இருந்தும் சளைக்காமல் 50 ஆண்டுகள் தனது இறுதி மூச்சு உடலைவிட்டுப் பிரியும் வரை இடைவிடாது நமது சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர் அமரர் தொண்டமான் அவர்கள். தோட்டத் தொழிலாளர்களின் பல்வேறு உரிமைப் போராட்டங் களுக்கு முன்னணிப் படைத் தளபதியாக நின்று வீரம் செறிந்த பல வரலாற்றுப் போராட்டங்களை நடாத்தியவர் அமரர் தொண்டமான் ஆவார்.

1947க்குப் பிறகு பாராளுமன்றத்தில் சிலகாலம் நியமன அங்கத்தவராக இருந்தாலும் எம்மக்களின் உரிமைப் போராட்டம் என்று வந்த போதெல்லாம் பதவியைக் காப்பாற்றாமல் எமது மக்களைக் காப்பாற்ற அறவழிப் போராட்டங்களைத் துணிச்சலுடன் நடத்தியவர் அமரர் அமைச்சர் தொண்டமான். 1984ஆம் ஆண்டு முழு மலையகமும் தனது தலைமையின் கீழ் கொண்டு வந்து 10 நாட்கள் தொடர்ச்சியான போராட்டம் நடாத்தியதன் பயனாக ஆண் / பெண் சம சம்பளம் பெற வழி வகுத்தவர். அப்போது அமைச்சராகவும் இருந்து கொண்டு அரசுக்கு எதிராகப் போராட்டத்தை நடத்தி வெற்றி கண்டார். 1986ம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பமான பிரார்த்தனைப் போராட்டம் மூலம் எம்மிடமிருந்து 1948ல் பறிக்கப்பட்ட நாட்டுரிமையையும், பிரஜாவுரிமையையும் மீண்டும் பெற்று கொள்ள வழிவகுத்த பெருமை அமைச்சர் தொண்டமானைச் சேரும். அக்காலத்தில் பிரார்த்தனைப் போராட்டம் கொட்டகலையில் நடந்த போது அதில் கலந்து கொண்டவர்களில் நானும் ஒருவன்.

1985ஆம் ஆண்டு சர்வதேச இளைஞர் ஆண்டை முன்னிட்டு தேசிய இளைஞர் சேவை மன்றம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய நாடகப் போட்டியில் அவரை விமர்சித்து நாடகம் போட்டேன். எனது நாடகத்திற்கு முதல் பரிசும், சிறந்த நடிப்பிற்கு எனக்கு பரிசு வழங்கப்பட்டது. பரிசு வழங்கும் போது இப்படித்தான் தவறுகளை நாடக மூலமாவது சுட்டிக் காட்ட வேண்டு மென்று என்னைப் பாராட்டினார். உண்மையான நேர்மையான விமர்சனங்களை நமது சமூக முன்னேற்றம் கருதி முன்வைத்தால் ஏற்று கொள்ள கூடிய விசால மனம் படைத்த மாபெரும் தலைவர் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் ஆவார்.

*கோதை மணாளன் குடும்ப விளக்கெரியப்*
*பாதை வகுத்த படிப்பாளி - மாதரெல்லாம்*
*மேலேற ஏணி நிறுத்தியவர்; தொண்டமான்*
*காலம் கொடுத்த கனி.*

*– கவிஞர் மு. க. மா. முத்தமிழ்ச் செல்வன், மலேசியா.*

*காணி கொடுத்தநல் கங்காணி! முன்னேற*
*ஏணி கொடுத்த இறைவனடா - வீணர்*
*கொடுக்கை நறுக்கியவர்; கொள்கைமனிதர்*
*துடுக்கை இவரிடத்தில்பார்.*

*– புலவர். மு. முருகையன், கோலாலம்பூர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வப்போது சமூக முன்னேற்றம் கருதி துணிந்து ஆளும் வர்க்கத்திற்கு கருத்துச் சொல்லக் கூடிய தலைவர் அவர் ஒருவரே! தான் அரசாங்கத்தில் சிரேஷ்ட அமைச்சராகப் பொறுப்பு வாய்ந்த பதவியை வகுத்த போதும் தோட்டத் தொழிலாளர்களின் போராட்டம் என்றால் களத்தில் இறங்கி விடுவார். உரிமைப் போராட்டமா? சலுகைப் போராட்டமா? எந்தப் போராட்டமானாலும் அவர் அங்கு இருப்பார்.

எனவே இவரை எதிரியும் போற்றுவான் இவரின் துணிச்சலைப் பாராட்டுவார்கள். இத்துணிச்சலுக்கு ஒரு உதாரணம் ஒருதடவை அரசாங்கத்தில் அமைச்சராக இருந்து கொண்டே வடக்கில் நடைபெறும் அர்த்தமற்ற அழிவுப் போரை நிறுத்த வேண்டுமென்றால் தமிழ் ஈழ விடுதலைப் புலித் தலைவர் பிரபாகரனுக்கு வடகிழக்கை 5 ஆண்டுகளுக்கு ஆட்சி செய்வதற்கு சந்தர்ப்பம் கொடுங்கள். யுத்த நிதிக்கு விரயமாகும் பொருளாதாரம் மிச்சமாகும். நாட்டு மக்கள் சுபீட்சமாக வாழ்வார்கள் என்று கூறினார். இவ்வாறு இவரைத் தவிர வேறு யாருக்கு துணிச்சலுடன் கூறத் துணியவில்லை. எதிர்காலத்தில் இவ் ஆலோசனை நடைமுறைப்படுத்தப்பட்டால் அதன்பெருமை அவரைச் சாரும். சர்வதேச தொழிற்சங்க இயக்கத்தில் சாதனை படைத்தவர் அமரர் அமைச்சர் எஸ். தொண்டமான் அவர்கள் உலகம் பூராவும் தொழிற்சங்க வலைப்பின்னலை ஏற்படுத்திக் கொண்டவர் இவர்.

பெருந்தோட்டக் கட்டமைப்பு அமைச்சை உருவாக்கி எமது மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி மின்சாரம், கிராமசேவகர், தபால் கந்தோர் மற்றும் அரச திணைக்களத்தைத் தோட்டத்துக்குள் கொண்டு வந்த பெருமை இவரைச் சேரும். அதன் மூலம் எமது மக்களின் பிரச்சினைகளை உலக அரங்குக்கு கொண்டு சென்றவர். பாராளுமன்றத்திலும் உலக அரங்கிலும் வரலாற்றுச் சிறப்பு மிக்க பெறுமதி மிக்க உரைகளை நிகழ்த்தியவர் அமரர் எஸ். தொண்டமான்.

தோட்ட தொழிற் சங்கங்கள் பிரிந்து இருப்பது நமக்கு பயக்காது. மாறாக தீமையே பயக்கும் என்று உணர்த்தியவர். ஆகையினால் தான் 1998ம் ஆண்டு மலையகத்தில் இயங்கும் அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், அரச சார்பற்ற அமைப்புகள் ஆகியவற்றை ஒன்றிணைத்து இந்திய வம்சாவளி மக்கள் பேரணியை உருவாக்கி தலைமை தாங்கி வழி நடத்தினார். இந்திய வம்சாவளி மக்கள் பேரணி உதயமான காலம் தொட்டு அவருடன் நெருக்கமாகப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அவரோடு நாட்டின் பல பாகங்களில் அவருடன் இணைந்து தேர்தல் கூட்டங்களில் பேசியுள்ளேன். அப்போது எல்லாம் அருகில் அழைத்துப் பாராட்டுவார். இத்தகைய மனித நேயம் அவரிடம் நிறையவே இருந்தது. தேர்தலின் பின்னும் ஜனாதிபதி தேர்தல் சம்பந்தமாக ஆராய 1999 நவம்பர் 30ந் திகதி நுவரெலியாவில் நடந்த கூட்டத்தின் போது அவர் சுகவீனமுற்ற போது அக்கூட்டத்தில் நானும் கலந்து கொண்டிருந்தேன். தற்போதைய அமைச்சர்களான சௌ. ஆறுமுகம் தொண்டமான் அவர்களும், கௌரவ வே. இராதாகிருஷ்ணன் அவர்களும் வைத்திய சாலையில் இருந்தார்கள். அப்போதும் பேரணிக் கூட்டம் எப்படி நடந்தது? என்ன முடிவு எடுக்கப்பட்டது என்றுதான் அவர் கேட்டார். அவரின் இறுதி நேரத்திலும் சமூகம் சார்ந்த பிரச்சினையில் கண்ணும் கருத்துமாக இருந்த மாபெரும் மக்கள் மேதை அமரர் அமைச்சர் தொண்டமான் அவர்கள்.

வாழ் நாள் பூராவும் ஆடம்பரமாக வாழ அனைத்து வசதிவாய்ப்பும் இருந்தும் 87 வயதிலும் இரவு, பகல், மழை, வெயில் என்று பாராமல் இறுதி மூச்சுவரை மக்கள் நலனுக்காக வாழ்ந்த உத்தமர். அவரின் மரணச் சடங்கு அதற்கு சாட்சி கூறும். இப்படிப்பட்ட மாபெரும் மக்கள் தலைவருக்கு மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவில் மலர் வெளியிட முன்வந்த அமைச்சர் இராதாகிருஷ்ணன் அவர்களைப் பாராட்ட வேண்டும். எதிர்கால சமூகத்திற்காகவும் புத்தாயிரமாம் ஆண்டு நடைபெறும் முதலாவது சாகித்திய விழாவில் மறைந்த மக்கள் தலைவர், தமிழ் தலைவர், தொழிலாளர் திலகம், உலகத் தமிழ் தலைவர் அமைச்சர் சௌமிய மூர்த்தி தொண்டமானுக்கு இம்மலரை காணிக்கையாக்குவது நாம் அவருக்குச் செய்யும் மகத்தான நினைவஞ்சலியாகும்.


*ஆசிரியர் வாழ்வுக் கதிகாரி; கல்வியினால்*
*தேசம் சிறக்கச் செய் தீங்கரும்பு - ஏசுவைப் போல்*
*தீமை பொறுக்கும் திறனாளர்; ஆயினும் ஓர்*
*ஆமையென எண்ணிடா தீர்.*

*– கவிஞர் ஆ. திருவாசகன், சென்னை*

*மாயிரு ஞாலம் மறக்க முடியாத*
*கோயில் அன்னையார் குலமுடையார் - ஞாயிறுபோல்*
*வீழாத கீர்த்தியும் மூர்த்தியுமாய் வாழ்கின்றார்*
*ஈழத்துத் தென்றல் இவர்*

*– இ. வி. மணிமுடிச் சோழன், பம்பாய்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாரதத்தின் முதல் பிரதமர், மனிதருள் மாணிக்கம் ஜவஹர்லால் நேரு அவர்களுடன்
கை குலுக்குகிறார் மக்கள் தலைவர் தொண்டமான்,
உடன் இருப்பவர்கள் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்க, கே. ராஜலிங்கம்.



நேருவின் தங்கை திருமதி. விஜயலட்சுமி பண்டிட் வீட்டிற்கு தொண்டமான்,
திருமதி. கோதை தொண்டமான் வருகை தந்திருந்தபோது வரவேற்று விருந்து உபசாரமளிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாணக்கியத்தினால் சாதனை படைத்த தலைவர் எங்கள் தொண்டமான்



எஸ். டி. தியாகராஜா



தலைவர் தொண்டமான் அவர்கள் தனது 87 வயதில் அறுபது ஆண்டுகளை இந்திய வம்சாவளி மக்களின் வாழ்வை வளம்படுத்துவதிலும் முன் னேற்றுவதிலும் தனது வாழ்வை அர்ப்பணித்தவர். ஒருவர் தனது வாழ்நாளில் தனது சமூகத்திற்காக அறுபது ஆண்டுகளை அர்ப்பணம் செய்வது என்பது இலகுவான, சாமான்யமான ஒரு விசயமல்ல. அதற்கு மன உறுதியும், தியாக மனப்பான்மையும், தன்னலம் கருததாத எண்ணம் கொண்ட மனப்பான்மையும் வேண்டும். இந்த அதீத குணங்களைக் கொண்டிருந்த வராக இருந்த காரணத்தினால்தான் அமைச்சர் எஸ். தொண்டமான் அவர்களால் மலையக தோட்டத் தொழிலாளர் வர்க்கத்தினருக்கும் இந்திய வம்சா வளியான தமிழ் மக்களுக்கும் அரும்பெரும் சேவை களையும் காரியங்களையும் சாதிக்க முடிந்ததோடு பெரும் மலை போலக் குவிந்து கிடந்த மலையக மக்களுடைய பெரும் பிரச்சினைகள் அனைத்தையும் தனது சாணக்கியம் என்ற பெரும் பலத்தால் தகர்த்தெறிய முடிந்தது.

பொதுவாக நாம் வாழ்ந்து கொண்டிருந்த கடந்த நூற்றாண்டிலும் சரி, இன்று ஆரம்பித்துள்ள இந்த 2000ம் ஆண்டான இப்புதிய நூற்றாண்டினாலும் சரி ஒரு பெரும் சாதனை படைத்த மாபெரும் தியாகத் தலைவர் ஒருவரென்றால் அது சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் என்று கூறும்போது அது மிகைபடுத்தி கூறுவதாக அமையாது. கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த சில முக்கிய மக்கள் தலைவர்களை எடுத்துக் கொண்டால் நம் நினைவில் அலைபாய்பவர்களாக இருப்பவர்கள் முதலில் அகில உலகப் புகழ் பெற்று உலக மக்களால் இன்றும் போற்றப்படும் மகாத்மா காந்தி, அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கென்னடி, தென்னாபிரிக்க மக்கள் தலைவர் திரு. மண்டேலா, இந்திய பிரதமராக விருந்த ஆசிய ஜோதி ஜவகர்லால் நேரு, வர்க்க சிந்தனையோடு மக்கள் இதயங்களில் இடம் பிடித்த சீனத் தலைவர் மாசேதுங் போன்றவர்கள் மிக முக்கியமானவர்கள்.

இந்தத் தலைவர்களோடு நமது தலைவர் திரு. எஸ். தொண்டமான் அவர்களையும் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடிய அளவுக்கு மகாத்மா அந்தஸ்துப் பெற வேண்டிய ஒரு சிறந்த தியாகத் தலைவர்தான் தலைவரும் அமைச்சருமான தொண்டாமான் அவர்கள். ஆங்கிலேயர்களை இந்தியாவை விட்டு வெளியேற்ற அகிம்சை வழியில் தன்னை வருத்தி இந்திய மக்களை ஒன்றுபடுத்தி இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தவர்தான் அண்ணல் மகாத்மா காந்தி.

அடிமைப்படுத்தப்பட்ட இந்திய மக்கள் சுதந்திர மக்களாக வாழவும் அந்நியராட்சியை வெறுத்து ஒதுக்கியதும் ஆங்கில ஏகாதிபத்திய வாதிகளின் கெடுபிடிகளைப் பொறுக்க முடியாமலும் மகாத்மாவின் தலைமையில் இந்தியாவே திரண்டெழுந்தது. இதன் காரணமாக மக்கள் ஆதரவோடு மக்களை அகிம்சை வழியில் போராடவைத்ததின் மூலம் கத்தி ஏந்தாது துப்பாக்கியை நீட்டாது இரத்தமின்றி ஓர் சுதந்திரத்தை இந்தியாவுக்கு மட்டுமல்ல தென்கிழக்கு ஆசியாவுக்கே

*உலகை வலம்வந்த வான்பறவை, மக்கள்*
*திலகம்! திலகரைப்போல் வீரர் - குலக்குரிசில்!*
*போராடி வெற்றி புரியினராய் வாழ்கின்ற*
*ஏறுநடைச் செம்மல் இவர்.*
*—புலவர் ஆ. திருஞானசம்பந்தன், திருச்சி.*

*கோதை கரம்பிடித்த கோமகன், நற்குடும்பப்*
*பாதைப் பயணத்தில் வெற்றி கண்டோன் - சூதைப்*
*புறம்கண்ட தீரன், புகழ் கொண்ட தங்கம்!*
*அறம்கண்ட மேலோன் இவன்.*
*—புலவர் மு. பாண்டியன், முகவை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளையர் ஆட்சியிலிருந்து ஏககாலத்தில் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்ததன் மூலம் அண்ணல் மகாத்மா காந்தி உலகப் புகழ்பெற்று ஒப்பற்றத் தலைவரானார்.

அண்ணல் வழியில் அவரது சீடர்களில் ஒருவரைப் போல் உருவாகி அகிம்சாமூர்த்தி காந்தியின் வழியில் தன்னை வளர்த்துக் கொண்ட சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் 1939ம் ஆண்டில் அண்ணல் மகாத்மா காந்தியின் வேண்டுகோளின் பேரில் ஆசிய ஜோதி ஜவகர்லால் நேரு அவர்கள் இலங்கையில் வந்து அமைத்த இலங்கை இந்தியன் காங்கிரஸ் மூலமாக தனது மக்கள் சேவையை ஆரம்பித்தவர். பலரது வற்புறுத்தலினாலும், அசரீரி போன்ற வேத வாக்கினாலும் தன்னுடைய எதிர்காலப் பணியை உணர்ந்து பொறுப்பேற்றுக் கொண்ட தலைமைப் பதவியைக் கொண்டு அன்றைய கால கட்டத்தில் ஆங்கிலேயே ஏகாதிபத்தியத்திற்கு எதிராக இலங்கைத் தலைவர்களுடன் இணைந்து போராட்ட வாழ்க்கையை ஆரம்பித்தார். அந்தப் போராட்ட வாழ்க்கை 1939 ல் ஆரம்பமாகி 1999 வரை தொடர்ந்து நீடித்து வந்துள்ளது என்பதை நேரில் கண்டவர்கள் இன்று வாழ்ந்து வரும் நமது தலைமுறையினர் என்றால் எவரும் எதிர்க் கருத்து கூற மாட்டார்கள்.

ஆங்கிலேயர்களின் ஏகாதிபத்திய வெறியினால் இலங்கை பெருந்தோட்ட தொழிலாளர் வாழ்க்கையில் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட தமிழ் தொழிலாளர்கள் பட்டதுன்பங்களையும் கொடுமைகளையும் நீக்க அன்று ஆங்கிலேயருக்கு எதிராகவும் இந்த அப்பாவி உழைக்கும் தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை பேரினவாத சிங்களத் தலைவர்கள் கக்கிய துவேஷ கூச்சல்களுக்கும் செயல்பாடுகளுக்கும் விரோதமாக உள்ளூரிலேயே தமிழ் மக்களை ஒன்று திரட்டிப் போராடும் நிலைக்கு தலைவர் தள்ளப்பட்டார். இதில் இருந்து அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு விரோதமாக மட்டுமல்ல தனது மக்களுக்காக உள்ளூர் பேரின வாதிகளுக்கும், முதலாளித்துவ வாதிகளுக்கும் எதிராகவும் போராடும் வாழ்க்கையில் தன்னைப் புகுத்திக் கொண்டார்.

இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களின் வாக்குரிமை, பிரஜாவுரிமைகள் சிங்கள ஏகாதிபத்திய வாதிகளால் அரசியல் ரீதியாகப் பறிக்கப்பட்டு அரசியல் அனாதைகளாக, நாடற்றவர்களாக, கள்ளத் தோணிகளாக, தோட்டக்காட்டான்கள், கூலிகள் என்றெல்லாம் இழிவாகப் பேசப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இம்சிக்கப்பட்டபோதும் இம் மக்களைச் சேர்ந்த வசதி படைத்தவர்களும், இம்மக்களைத் தலைமை தாங்க வலிய வந்த பல தலைவர்களும் இம்மக்களை அந்தரத்தில் விட்டு ஓடியபோது,

வசதி படைத்த பெரும் கோடீஸ்வரராக பல தோட்டங்களுக்குச் சொந்தக்காரராக இருந்த சௌமிய மூர்த்தி தொண்டமான் தனது தலைமையில் இருந்தும் ஒதுங்கி ஓடவில்லை. அம்மக்களோடு ஒன்றாக இணைந்து இரண்டாகக் கலந்து அம் மக்களுக்காகவே தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து விட்டார்.

அவருக்கிருந்த தீர்க்க தரிசனமும், பொறுமையும், சாணக்கியமும்தான் அவர் காலத்திலேயே அவர் கண்காணப் பறிக்கப்பட்ட பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் யார் பறித்தார்களோ, அதே தலைவர்கள் மீண்டும் வழங்க வைத்தார். ஒதுக்கிய தலைவர்களே இம் மக்களை ஏற்றுக் கொண்டார்கள், அரவணைத்தார்கள் பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் ஓர் சத்தியக் கடதாசி வழங்குவது மூலம் இலகுவாக கொடுத்து விட்டனர். இதில் நமது தலைவரின் சாணக்கியமே வென்றது. எதிரியாக இருந்து எதிரியை வெற்றி கொள்வதை விட நண்பனாக இருந்து பெற்றுக் கொள்வதே புத்திசாலித்தனம் என்று உணர்ந்து செயல்பட்டவர் ஆதனால் தன் மலையக மக்களுக்காகப் பெரும் சாதனைகளைப் படைத்தார்.

*ஆன்ற குடிப்பிறப்பு, ஆழ்ந்த குணச் சிறப்பு !*
*சான்றாய்த் திகழ்கின்ற சந்தனப்பூ - தோன்றிய சீர்த்*
*தொண்டமான் பேர்சொன்னால் தொல்லுலகம் கொண்டாடும்*
*வண்டமிழாய் வாழ்க சிறந்து*

*— புலவர் ச. கோபால், கம்பம்.*

*மூனாப் புதூரீன்ற முல்லை மலர்மகன்*
*தேனார் தமிழர்க்குத் தேரானான் - மானாய்*
*மரியாதை காக்கின்ற மாண்புமிகு தொண்டல்*
*அரிதாய்க் கிடைத்தான் நமக்கு.*

*— புலவர் செக. செல்வரங்கராசு, சைதை, சென்னை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு ஆசிரியர் பதவிகள் வழங்குவதில் இருந்து அவர்கள் பிறந்து வாழ்ந்த ஒதுக்கப்பட்ட அதே தோட்டத்தில் உத்தியோகம், தோட்ட இளைஞர் களுக்கு காவல்துறை அதிகாரிகளாக தொழில், அரசாங்க ஊழியர்களாக வேலை வாய்ப்பு, கிராம சேவகர் உத்தியோகம் நம்மவர்கள் அதிபர்களாக, கல்வி அதிகாரிகளாக, இயக்குனர் களாக, மேலதிகக் கல்விப் பணிப்பாளர்களாக, கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர்களாக வெல்லாம் பதவி உயர்வு பெற்றார்கள்.

அத்தோடு, தனிவீடுகள், வாழும் வீடுகளை சொந்தமாக்குதல், லயன் முறைகளைப் படிப்படியாக மாற்றி இரட்டை வீடுகள் அமைத்து வாழ வசதிகள், நவீன பாலர் பராமரிப்பு நிலையங்கள், சனசமூக நிலையங்கள், வாசிகசாலைகள், தோட்டப் பகுதிகளில் தோட்டங்களுக்கு பஸ் சேவைகள், போக்குவரத்து வசதி, தோட்ட வைத்தியசாலைகளை அரசினர் வைத்தியசாலைகளாக மாற்றியமைத்தது அது மட்டுமல்ல.

இன்று தோட்டங்களில் தொழிலாளர்களின் இல்லங்களில் மின்சார வசதிகளைச் செய்து விளக்கேற்றி வைத்தவரும் நம் தலைவர்தான். கல்வித்துறையில் மாபெரும் புரட்சியைச் செய்து வளர்ச்சியை ஏற்படுத்தினர். தோட்டத் தொழிலாளர் களின் வீடுகளில் தொலைக்காட்சிப் பெட்டிகள் அதுவும் வர்ண தொலைக்காட்சிப் பெட்டிகள் இயங்குகிறதே. பல தோட்டங்களில் தொழிலாளர்கள் டெலிபோன் வசதி செய்து கொண்டுள்ளார்களே, வாகனங்கள் வாங்கி வசதியாகப் போய் வருகிறார்களே, டிஸ் அண்டனா பூட்டி சர்வதேச நிகழ்ச்சிகளையும் அவ்வப்போது கண்டு களிக்கிறார்களே, வானுயர்ந்த கட்டிட வசதிகளுடன் மாடிக் கட்டிடங்களை அமைந்து கல்லூரிகளிலும் கலாசாலைகளிலும் படிக்கிறார்கள். கைத்தொழில் பேட்டைகள் அமைத்து பயிற்சி பெற்று தொழில் பெறுகிறார்களே, இவையணைத்தும் நமது மாபெரும் தலைவரின் சாதனைகளால் தானே. இதை நன்றியுள்ள எந்த சமூகமும் மறக்குமா?

இன்று எத்தனையோ தொழிற் சங்கங்கள் தொழிற் சங்கத் தலைவர்கள், இவர்கள் அமைச்சர் தலைவர் தொண்டமான் என்ற படிக்காத மேதையின் பல்கலைக் கழகத்தில் தொழிற் சங்கம் பயின்றவர்கள் தானே, வளர்ந்த கடா மார்பில் பாயும் என்பது போல் பலர் நமது தலைவர் என்ற தீட்டிய மரத்திலேயே பதம்பார்க்க முயன்றதையும் நாம் மறந்து விடமுடியாது. மார்பில் பாய்ந்தவர்கள் கொம்புமுறிந்து நின்ற காட்சியையும் பதம் பார்க்க நிறைந்தவர்கள் மழுங்கிப்போய் உபயோகமற்று வாழ்வதையும் இன்று நம் கண்முன்னாலேயே காண்கிறோம்.

இவ்வளவு சாதனைகளையும் நமக்காகப் புரிந்த அந்த மாபெரும் மேதை, மாமலை, சரிந்தது என்று கேள்விப்பட்டதும் அதிர்ச்சியடையாதவர்களே இல்லை. கிராமோதய சபைகளில் தலைவர்களாக, பிரதேச சபைகளில் ஆட்சியாளர்களாக, மாகாண சபைகளில் மந்திரிகளாக, உறுப்பினர்களாக, பாராளுமன்றத்தில் அமைச்சர்களாக அங்கத்தவர் களாக நம்மவர்களால் அரசியல் ரீதியாக வளர முடிந்தது, உயர முடிந்தது என்றால் அது யாரால், அரசியல் மேதை சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களால்தான் என்பதை மறுக்க முடியுமா?

இன்று அவர் மறைந்து ஓராண்டுகளை எட்டிக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் அவரால் நன்மைபெற்ற தொழிலாளர் வர்க்கமும் அவரது வாரிசுகளும், அவரது பணியைத் தொடர்ந்து செயல்படுத்தி வரும் இளம் தலைவர்களும் உறுப்பினர்களும் அவர் பெற்றுக் கொடுத்த உரிமைகளை கைநழுவ விடாது கட்டிக் காப்பதும் முன்னெடுத்து செல்வதும் தான் நமக்கு அவர் தந்து சென்ற பாரிய பொறுப்பும் கடமையுமாகும். இதைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அரும்பெரும் பணி நம்முடையதல்லவா? செய்வோமா?

*குமாரவேல் பெற்ற குமரா ! மயிலின்*
*குமரன் அருள்சேர் குணாளா ! – அமரர்*
*அமுதம் கிடைப்பினும் அன்பருடன் உண்ணும்*
*தமிழ்ப் பண்பின் தண்சோலை நீ !*
*– புலவர் இரா. தங்கராசு, பெருவளப்பூர்.*

*தொழிலாளர் பட்ட துயரமெல்லாம் உன்னால்*
*ஒழியாமல் யாரால் ஒழியும் ? – பழி சொல்வோர்*
*என்றும் இருப்பர், இதயம் பொறாதிருப்பர்*
*ஒன்றும் புரியார் அவர்.*
*– புலவர் பெ. இளங்கோ, திருச்சி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரையப்படாத வரலாறானார்





இரா. பாலகிருஷ்ணன்

கௌரவ தலைவர்

நுவரெலியா இந்து கலாசார பேரவை

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" என்பது வள்ளுவம்.

அதனால் தானே உன்னையும் தெய்வம்
என்று மக்கள் போற்றினர்.

நீ வாழ்ந்தாய் என்பதை விட
வாழ வைத்தாய் என்பதே சரியானது
நீ உயர்ந்தாய் என்பதை விட
உயர வைத்தாய் என்பதே பொருத்தமானது

மண்ணுக்குள் மாசியைத் தேடியது அன்று - இன்று
மண்ணின் மைந்தர் நாம் என்று மார்தட்டி
நிற்கும் மலையகமாக மாற்றியது நீ

கம்பளி இரண்டு ரூபாய்
கருப்புக் கம்பளி மூன்று ரூபாய் என்ற
கதையையெல்லாம் காற்றோடு காற்றாக்கியவன் நீ

தொண்டமானிஸம் என்பது மலையகத்தின்
எழுதப்படாத இலக்கியம்
வரையப்படாத வரலாற்றுக் காவியம்
மூடி மூலையில் போட்டுவிட முடியாத
மூலமந்திரம்

கஜானா காலியாகி விட்டால்
கடன் வாங்கியாவது நிரப்பிவிடலாம்
கட்டிவிட்ட வீடு கடும் மழையில்
வீழ்ந்து விட்டால்
மற்றொரு வீடு மனம் வைத்தால்
கட்டிவிடலாம்
நட்டு வைத்த நந்தவனம்
பட்டு விட்டால் - நீரின்றி எருவின்றி
கொட்டு மழை பொழிய கூடையிலே
எருவுமிட மற்றுமொரு நந்தவனம்
மலர்ந்துவிட மாட்டாதோ


ஆனால் நீ

விட்டுச் சென்ற வாழ்க்கை முறைச்
சாதனைகளில் வேறெவரும்
நட்டமின்றி நிரப்பிடவே
நானறியேன் வழிமுறையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளமைத் தோற்ற இந்திராகாந்தி அவர்களுடன் எழுச்சிமிகு தொண்டமான்.



பாரதப் பிரதமர் இந்திரா காந்தியுடன் பேச்சுவார்த்தையில் தொண்டமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தும்பைப்பூ வெண்பாவில்



# தொண்டமான்

தேயிலைத் தோட்டத்தில் தேம்பலைப் போக்கியவர்
வாயிலார்க் கெல்லாம் வரமளித்த - கோயிலானார்
நாயினும் கீழாய் நலிந்த தமிழர்க்குத்
தாயினும் தாயான தாய்.

– கவிஞர் நாஞ்சில் நெடுமாறன், நாகர்கோவில்.

நேரு கொடுத்த நிகரற்ற காங்கிரசை
வேரூன்ற வைத்த விழுமியார் - நீரூற்றி
ஆலமரமாய் அதைத்தழைக்க வைத்திட்டார்
ஞாலமே போற்றும் செயல்

– புலவர் அய்யாவு, ஆம்பல், தஞ்சை.

மதுரை மருக்கொழுந்து, மக்கள் தலைவர்
அதிரா மனத்தர், அழகர் – முதிர்சோலை!
தெற்குப் பொதியமலைத் தென்றல் இவரைப்போல்
நற்குடியின் நாயகரை நாடு

– புலவர் அரங்க நெடுமாறன், புதுக்கோட்டை.

தொண்டமான், துள்ளுமான் குட்டியாய் ஓடிப்போய்க்
கண்டார் இலங்கையினைக் கண்ணிரண்டால் பண்டைப்
புகழை நிலைநாட்டப் பூத்தபொது வாழ்வில்
புகுந்தார் படைத்தார் புகழ்.

– கவிஞரேறு அமலதாசன், சிங்கப்பூர்.

தோட்டத் தொழிலாளர் துன்பச் சுமைதாங்கி
ஏட்டில் அடங்கா இமயப்போர் - நாட்டினார்!
தொண்டமான் தொண்டால் தொடர் வெற்றி கண்டிடுவார்
உண்டோ இவர்போல் பிறர்.


– கவிமாமணி அ. மறைமலையான்.

–நன்றி முத்துவிழா மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மறைந்த இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியுடன் கைகுலுக்கும் தலைவர் தொண்டமான்.



பாரதப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் அவர்களுடன் பாட்டாளியின் பிதாமகன்
தொண்டமான் அவர்கள் உரையாடும் ஒப்பற்ற தோற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முதல் இந்திய கவர்னர் ஜெனரலாக விளங்கிய மூதறிஞர் ராஜாஜி அவர்களுடன் தொண்டமான்.
இடையில் இருப்பவர் அன்றைய இலங்கை இந்தியத்தூதுவர் கண்டேவியா.



சர்வோதயத் தலைவர் ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்களின் குடும்பத்துடன்
மக்கள் தலைவர் தொண்டமானின் குடும்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை வந்த பாரதப் பிரதமர் வாஜ்பாயுடன் சிநேகபூர்வ சந்திப்பு.



தமிழக முன்னாள் முதல்வர் அண்ணாத்துரை அவர்களுடன் தலைவர் தொண்டமான்.



கருப்புக்காந்தி காமராசர் அவர்களுடன் காந்தி மனிதர் தொண்டமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களுடன் தலைவர் தொண்டமான்.



தமிழக முன்னாள் முதல்வர் மறைந்த எம். ஜி. ஆருடன் தலைவர் தொண்டமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்களுடன் சிந்தனைச் செல்வர் தொண்டமான்.



முத்துவிழா நாயகர் தொண்டமான் அவர்களின் நூல் வெளியீட்டு விழாவில்
முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விஸ்வநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை ஜனாதிபதி ஜயவர்த்தனாவுடன்
பேரன் ஆறுமுகன் தொண்டமானும் அவரது மனைவியும் மற்றையோரும்.



முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, முன்னாள் இந்தியத் தூதுவர் ஜே. என். தீக்ஷித்துடன்
அமைச்சர் தொண்டமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா முன்னிலையில் அமைச்சராகப் பதவிப் பிரமாணம் மேற்கொள்கிறார்.



இலங்கை அமெரிக்க தூதரோடு தொண்டமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முன்னிலையில் தோட்ட உட்கட்டமைப்பு, கால்நடை அபிவிருத்தி அமைச்சராக சத்தியப்பிரமாணம்.



தொழிலாளர்களுக்கு சேவை புரிந்த சிறந்த தொழிற்சங்கவாதிக்கான விருதை சபாநாயகர் கே. பி. ரத்நாயக்காவிடமிருந்து பெற்றுக் கொண்டபோது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் நாடு பட்டமங்களத்தில் உள்ள சௌ. தொண்டமான் அவர்களின் மாளிகை



இலங்கை வெவண்டன் தோட்டத்தில் அமைந்திருக்கும் அவரது தோட்டமாளிகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகத் தமிழ் மக்களுக்கு ஒரு செய்தி!

இன்று தமிழ்ப் பேசும் மக்கள் உலகெங்கணும் பரந்து வாழ்கிறார்கள். இந்த நூற்றாண்டில் தமிழ் மக்களின் வாழ்க்கை எவ்வளவோ மாற்றமும், ஏற்றமும் அடைந்திருக்கிறது. மிக விரைவில் நாம் இருபத்தோராவது நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கப்போகிறோம். அந்த நூற்றாண்டைத் துணிச்சலோடும், தன்னம்பிக்கையோடும் சந்திப்பதற்கு நாம் எல்லாவகைகளிலும் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அந்த நாட்டை அவர்கள் சொந்த நாடாகக் கொள்ள வேண்டும். அந்த நாட்டை நேசிக்கவும், அதற்குப் பாடுபடவும் அந்த நாட்டு மக்களோடு சரிநிகர் சமானராகச் சேர்ந்து பழகவும், வாழவும் அந்த நாட்டின் நல்வாழ்வுக்காக உழைக்கவும் அவர்கள் மன உறுதி பூண வேண்டும். அதே வேளையில், தமிழ் மக்களின் தனித்துவத்தையும், பண்பாட்டையும், பழக்க வழக்கங்களையும், பாரம்பரியத்தையும், பறிகொடுத்து விடாமல் அவர்கள் பாதுகாத்து வரவேண்டும். தமிழ் மக்களின் மொழி, கலை, கலாசாரம், சமயம் போன்றவை மதிப்புக்குரிய பெரு நிதியங்களாகும். இவற்றை நாம் என்ன காரணங்கொண்டும் இழந்துவிட முடியாது.

பல நூற்றாண்டுகளாகச் செழித்து வளர்ந்த பழந்தமிழ் மொழியின் வாரிசுடன் நாம் என்ற இறுமாப்பு நமக்கு இருக்க வேண்டியது தான். அதே வேளையில் பிற மொழிகளையும் நாம் அலட்சியப்படுத்தாது, எதுவித காழ்ப்புமின்றிக் கற்று அவற்றிலும் நாம் பாண்டியத்துவம் பெறவேண்டும். அப்போதுதான் பிறநாட்டு நல்லறிஞர் கண்ட விஞ்ஞான, மெய்ஞ்ஞான நுட்பங்கள் கொண்ட சாத்திரங்களை நம் மொழியில் பெயர்த்து, நமது மொழியை வளப்படுத்தி புதுமைக் கவி பாரதி கண்ட கனவை நனவாக்க முடியும்.

இலங்கை போன்ற நாடுகளில் தமிழ் மக்கள் சிறுபான்மை இனமாக விளங்குகின்றார்கள் என்பது உண்மையே. அதனால் அவர்கள் தாம் பலமற்றவர்கள் என்ற தாழ்வு மனப்பான்மைக்கோ, எம்மால் என்ன செய்யமுடியும் என்ற அதைரியத்துக்கோ ஆளாகக் கூடாது. இலங்கையைத் தனியாக எடுத்துக் கொண்டால் தான் தமிழ் மக்கள் சிறுபான்மை மக்கள் தமிழகம், மலேசியா, சிங்கப்பூர், பீஜி, தென் ஆப்பிரிக்கா என்று ஒரு பிராந்தியமாக எடுத்துக் கொண்டால் தமிழ் மக்கள் பெருபான்மை மக்கள் ஆகிவிடுகிறார்கள். தமிழ் நாட்டிலே ஐந்தரைக்கோடி தமிழ் மக்கள், தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் வாழுகிறார்கள். இது தவிர உலகம் முழுவதிலும் இன்னும் இரண்டரைக் கோடி தமிழ்ப் பேசும் மக்கள் வாழுகிறார்கள்.

இந்த எட்டுக்கோடி தமிழ்ப் பேசும் மக்களும் ஒரு பெரிய சமுதாயத்தினர் அல்லவா? இவர்கள் திரண்டால் அந்தப் பலம் இலேசுப்பட்டதல்ல. இவ்வளவு தமிழ்ப் பேசும் மக்களிடமும் நாம் மொழி, கலை, கலாசார ரீதியில் கருத்தொற்றுமையை ஏற்படுத்த வல்ல தலைமைத்துவத்தை நாம் தோற்றுவிக்க வேண்டும். தமிழகம் நினைத்திருந்தால் அது உலகுக்கு வழிகாட்டியிருக்கலாம். பல தடவைகள் சந்தர்ப்பம் கிடைத்தும் தவறிவிட்டதே என்று கவலைப்படுகிறேன்.

*ஏழைத் தொழிலாளர் ஏற்றம் பெறுவதற்கே*
*தாழ் திறக்கும் நல்லார்; தயாளர் - சூழ் இருளை*
*மாய்க்கும் மதியுடையார் மார்க்கம் உரைத்திடுவார்*
*யார்க்கும் இனியார் இவர்.*

— புலவர் சௌந்தரராசன், மன்னார்குடி.

*கறுப்பான ரோஜா ; கருமம் மறவார்*
*பொறுப்பான மக்கள் தலைவர் - வெறுப்பான*
*காரியம் ஆற்றார்; கடமை நிறைவேற்றும்*
*நேரியர்; நீதிமான் காண்.*

— புலவர் பரிமேலழகர், திருக்காட்டுப்பள்ளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த உரிமைகளையும், எந்தச் சலுகை களையும் யாரும் எமக்கு இனாமாகத் தந்துவிட மாட்டார்கள். எதையும் நாம் இனாமாகப் பெறவும் விரும்பக்கூடாது. இனாம் பெறுவது இழிவான செயலாகும். எதையும் நாம் உழைத்துத்தான் பெற வேண்டும் அல்லது சளைக்காமல் தொடர்ந்து போராடிப் பெறவேண்டும். போராடிப் பெறுவதற்கு நம்மிடையே தளராத மன உறுதியும், குலையாத ஒற்றுமையும் வேண்டும். தனி மனிதனால் சாதிக்க முடியாத காரியத்தை, ஒரு சமுதாயமாகத் திரண்டெழுந்து சாதிக்கலாம்.

போராட்டம் என்று வரும்போது, அது ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்த போராட்டமாகவும், அகிம்சை என்ற காந்திய தத்துவத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்த போராட்டமாகவும் அமைய வேண்டும். பலாத்காரமும், வன்செயலும் ஒரு போதும் நிரந்தரமான வெற்றியைத்தர மாட்டாது. எதிராளியின் மனதையும் இசைவுபடுத்திப் பெறும் வெற்றியே சாசுவத மானதாகும்.

எனது 80 ஆண்டுக் காலத்தில் 50 ஆண்டுக் காலம் நான் தொழிலாளர் உரிமைகளுக்காகப் போராடி வந்திருக்கிறேன். காந்தி மகாத்மாவை நான் எனது அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டதன் காரணத்தால் என் போராட்டங்கள் எல்லாம் அகிம்சா வளியிலேயே நடத்தப்பட்டன. அத்தனை போராட்டங்களும் எனக்கு வெற்றியையே ஈட்டித் தந்துள்ளன. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்ற ஸ்தாபனத்துக்குத் தலைமை வகித்து நடத்திய போராட்டங்களின் மூலம் இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினருக்கு, அவர்கள் 40 ஆண்டுக் காலமாக இழந்திருந்த பிரஜாவுரிமை, வாக்குரிமை போன்றவற்றைப் பெற்றுக் கொடுத்திருக்கிறேன். இந்தப் போராட்டங்களின் போது தான் இம்சையையோ, பலாத்காரத்தையோ, வன்செயலையோ இம்மியும் பயன்படுத்தியதில்லை. தோட்டத் தொழிலாளரின் ஒற்றுமையைப் படைப்பல மாகவும், அகிம்சை ஒன்றையே ஆயுதமாகவும் பயன்படுத்தினேன்.

அகிம்சைத் தத்துவத்தில் அசையாத நம்பிக்கை கொண்டிருக்கும் நான், இன்னும் ஒன்றைக் கூற விரும்புகிறேன். அகிம்சை என்பது ஆற்றாமை ஆகிவிடக்கூடாது. அகிம்சை என்ற போர்வையில் வீரம் பறிபோய் விடக்கூடாது. நாம் எப்போதும் அகிம்சையையே கடைப்பிடிக்க வேண்டும். அதே வேளையில் அகிம்சையைக் கடைப்பிடிக்கும் எம்மைப் பலவீனர்கள் என்று யாராவது காடையர்கள் நினைத்து, நம்மீது நியாயமற்ற முறையில் பலாத்காரத்தை, வன்செயலைப் பிரயோகிக்க வந்தால், நாம் விட்டுக் கொடுக்கக்கூடாது. பயந்து ஓடக்கூடாது. அந்த இடத்தில் நாம் எதிர்த்து நின்று நம் பலத்தைக் காட்டியே தீரவேண்டும்.

இறுதியாக நான் உலகத் தமிழ் மக்களுக்குக் கூற விரும்பும் செய்தி இதுதான். தமிழ் இனம் ஒரு தொன்மைச் சிறப்பு வாய்ந்த ஒரு பெரும் இனம். அந்த இனம் இன்று எட்டுக்கோடி மக்களைக் கொண்ட இனமாக விளங்கிய போதிலும், அந்த இனத்துக்கும் அதன் மொழிக்கும் உலக அரங்குகளில் குரல் உயர்த்தி ஒலிக்கும் பேறு இன்னும் கிடைக்கவில்லை. இதை ஒவ்வொரு தமிழ் மகனும் உணரவேண்டும். இதைச் சாதிப்பதற்கு வழி உண்டு. அதற்குத் தமிழ் மக்களுடைய வேகம் அதிகரித்தால் போதாது. விவேகம் அதிகரிக்க வேண்டும். சிந்தனையில் ஒரு ஒற்றுமை உதயமாக வேண்டும். இலட்சியம் இன்னது என்று தெரிந்து கொண்டு அதற்காக அனைவரும் கூட்டாகச் செயல்பட வேண்டும். எனது முதிர்ந்த வயதில் இதைத்தான் நான் இதய பூர்வமாக நேசிக்கும் தமிழ் மக்களுக்கு எடுத்துக் கூறுவேன். ஒற்றுமையில் தான் பலமும் வெற்றியும் தங்கியிருக்கின்றன.

*துன்பம் வருங்கால் துவளாரே! துன்பம்போய்*
*இன்பம் வருங்கால் எழுந்தாடார் - மன்பதையில்*
*வாழும் நெறியறிந்து வாழ்பவர் தொண்டமான்*
*சூழும் இருளவிலகிப் போம்.*

*– கவிஞர் அமலன், பெரம்பலூர்.*

*வன்முறை வேண்டா வழிகாட்டி ! எப்போதும்*
*தன்முறை தவறாத் தலைவரேறு! -நன்முறை*
*வேண்டித் தவமிருக்கும் வீரர் குலத்தோன்றல்*
*தூண்டிக் கொடுக்கா தவர்.*

*– புலவர் செ. பாலகிருட்டிணன், திருவில்லிபுத்தூர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் சக அமைச்சர்களுடன் தொண்டமான்.



இ. தொ. க. உறுப்பினர்களுக்கு தலைமை தாங்கி அலரி மாளிகைக்குச் சென்று
ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவைச் சந்தித்த பின்னர் எடுத்துக் கொண்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் அவர்களின் "வெற்றியின் ரகசியம்" நூல் வெளியீட்டு விழாவின்போது அமைச்சர் தொண்டமான் அவர்களுக்கு முதற்பிரதியை கையளிக்கிறார்.



உலகச் சின்மய இயக்கத் தலைவர் சுவாமி தேஜோமயானந்தாஜி (24-10-99) அன்று ரம்பொடை ஆஞ்சநேயர் கோவிலுக்கு விஜயஞ் செய்தபோது, தனது உடல் நலம் குன்றியிருந்தபோதும், அதில் கலந்துகொண்டு கதிரையில் அமர்ந்தபடி அமைச்சர் தொண்டமான் அவர்கள் நீண்டதொரு உரையாற்றினார். இதுவே அவர் இறுதியாக கலந்து கொண்ட பொது நிகழ்ச்சியாகும். திரு. மகேந்திரன் சிவாச்சாரியார், நவாலி விஸ்வநாதக் குருக்கள், திரு. நா. சோமகாந்தன் ஆகியோரும் வரிசையில் அமர்ந்திருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதியாத்திரை....



மறைவு: 01-11-1999





பூரண அரச மரியாதையுடன் 04-11-1999ல் தகனஞ் செய்யப்பட்டது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO - 13. TEL.: 330195.